Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 52 | 13 - 19 - பெப்ரவரி - 2004

## தேர்தல் என்பது?!





## காதல் என்பது ?!

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 13 . 02 . 2004
மின் அஞ்சல : www.weekly@Eezhanatham.com

# மெய்ப்படும் தருணம்

சனாதிபதி சந்திரிகா 39 அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் அவர்களின் பதவியில் இருந்து விலக்கியுள்ளார். ஏற்கனவே மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றிருந்த சர்ச்சைக்குள்ளும் அவர் இதனைச் செய்திருக்கின்றார் என்றால், அதில் கிடைக்கக் கூடிய அரசியல் நலன் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்திருக்க வேண்டும்.

அவரை பொறுத்தவரையில் இதன் மூலம் அடுத்துவரும் ஐம்பது நாட்களுக்கு ஆளும்கட்சியாக தான் செயற்படமுடியும் என்ற வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகின்றார். ஐம்பது நாட்கள் நாட்டின் அரசாங்கத்தை நடத்துவதன் மூலம் தேர்தலில் சில சாதகமான விளைவுகளைப் பெறமுடியும் என அவர் நம்பியிருக்க வேண்டும். அல்லது ஐக்கிய தேசிய முன்னணிக்கு கிடைக்கக் கூடிய சாதகத்தை வெட்டி வீழ்த்துவதன் மூலம் தனக்கிருக்கும் பாதகமான நிலைமையைச் சீர்செய்ய முடியும் என அவர் நம்பியிருக்கவேண்டும்.

ஐம்பது நாட்களுக்கு அரசாங்கத்தை நடத்துவதால் நாட்டிற்கு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதிலோ அல்லது மக்களுக்கு அடிப்படைப் பிரச்சினைகளை சீர்செய்வதற்கான புதிய வேலைத்திட்டம் ஒன்றை முன்னேற்றம் காணமுடியது என்பது அவருக்கோ நாட்டு மக்களுக்கோ விளங்காததல்ல.

அப்படியிருக்க, முப்பத்தொன்பது அமைச்சர்களைக் கலைத்து மக்களின் தப்பபிப்பிராயத்திற்கும் முன்னால், தேர்தலில் சாதகமான விளைவுகளை அடைய முடியுமென நம்புகின்றார் என்றால், நிச்சயமாக அது நேர்மையான வழிமுறைகளின் ஊடாக இருக்க முடியாது. அப்பாடியானால் சனநாயக முறைமைகளுக்கும் அப்பால் இத்தேர்தலை நடத்தவேண்டும் என்று சனாதிபதி சந்திரிகா முடிவெடுத்து விட்டார். அதற்கு அரணாகவும் ஆயத்தமாகவுமே இக்கலைப்பை அவர் பயன்படுத்த விளைகின்றார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆக, ஓர் நேர்மையற்ற தேர்தலுக்கு வரிந்து கட்டிக்கொண்டு இறங்கும் சந்திரிகா தனக்கிருக்கக் கூடிய எல்லா அதிகாரங்களையும் வன்முறைகளுக்குப் பாவிக்கப் பின் நிற்கப்போவதில்லை. அதனை ஒரு பலமாக அவர் கருதும்போது அதை அவர் பிரயோகிக்கமாட்டார் என யாரும் நம்பமுடியாது. பாதுகாப்பு அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு என்பன இதற்கு ஆயுதமாகவும் அரணாகவும் இருக்கக்கூடிய வலிமையான காய்களாக இருக்கப்போகின்றன என்பதில் ஐயமில்லை.

மக்கள் சமாதானத்திற்காக ரணிலுக்கு சென்ற தேர்தலில் வழங்கிய தீர்ப்பு என்பது ரணிலுக்கானது மட்டுமல்ல, அது சந்திரிகாவுக்கும் ஆனதுதான். சந்திரிகாவின் தலைமைத்துவத்திற்கும் அவரது கொள்கைகளுக்கும் மக்கள் கொடுத்த தீர்ப்புத்தான் அது. ஆயினும் பாராளுமன்றத்தைக் கலைத்து மக்களுக்கே சனாதிபதி தீர்ப்பெழு[illegible] விட்டார்.

இப்பொழுது மீண்டும் மக்களின் முறை, சிங்கள மக்கள் தாம் கொடுத்த அதிகாரத்தினால் தமது அதிகாரமே தூக்கியெறியப்பட்ட நிலையைப் பட்டுக்கழித்திருக்கின்றார்கள். வரலாறு அவர்களின் தவறிற்கு பதிலளித்திருக்கின்றது. இப்பொழுது அவர்கள் தங்கள் முறையை சரியாகப் பயன்படுத்தி வரலாற்றிற்குப் பதில் அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அது அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அவர்கள் அளித்த அதிகாரம் அவர்களின் மீதே பாய்ந்து ஆடப்போகும் தாண்டவங்களையும் மீறி பதில் அளிக்கவேண்டிய வலிமையைப் பெற்றிருக்க வேண்டியிருக்கும்.

இத்தேர்தலில் சிங்கள மக்கள் எடுக்கப்போகும் தீர்மானமே சர்வதேசம் சிங்கள மக்கள் பற்றி எடுக்கப்போகும் தீர்மானமுமாக இருந்து விடப்போகின்றது. சிங்கள மக்கள் தமக்குக் கிடைத்திருக்கும் இத்தருணத்தை எப்படிக்கையாளப் போகின்றார்கள் என்பது ஆவலுக்குரியதொன்றாக இருக்கின்றது.

எது நிகழ்ந்தாலும் தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய போராட்டத்திற்கும் அதில் லாபம் உண்டு. ஆனால் சிங்கள மக்களுக்கு எது நிகழ்ந்தாலும் நட்டமில்லை என்று சொல்வதற்கில்லை.

இலங்கை விவகாரத்தில் இப்போது ஆர்வம் காட்டிவரும் சர்வதேச சமூகத்திற்கு இத்தேர்தல் ஒரு படையலாக இருக்கட்டும்.

## தூரனின் பார்வையில்

# சமாதானம் எதிர்கொள்ளும் தேர்தல் நெருக்கடிகள்...!



நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு பொதுத்தேர்தலுக்கான நாளும், சனாதிபதியின் நம்பிக்கைக்குரிய-வெற்றியை எதிர்வு கூறவல்ல சோதிடர்களின் கணிப்பிற்கேற்ப நிர்ணயிக்கப்பட்டாயிற்று.

சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தின் அதியுயர் ஆற்றலைப் பயன்படுத்தி மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒரு அரசாங்கத்தைக் கிள்ளுக் கீரையாக நினைத்துத் தூக்கியெறிந்து விட்டார்.

தொலைக்காட்சிச் செய்திகளில் இறுக்கமான முகத்துடன், ஆண்மைத் தொனிகொண்ட குரலில் சனாதிபதி ஆட்சிக் கலைப்புப் பற்றிக்கருத்துக்களைக் கூறியவேளையில், சிறிமாவோவின் நினைவு அதே உணர்வுகள் எதனையும் பிரதி பலிக்காத-எந்தவிதத்திலும் மரியாதை உணர்வை எவருக்குமே ஏற்படுத்தாத முக விவகாரத்துடன் நிழலாடவே செய்தது.

அது பண்டா குடும்பப் பாரம் பரியத்தின் தவிர்க்கமுடியாத சாயலாகும். அதனை நியாயப் படுத்திக்கூறும் பொய்கள் அடித்த அவரது உதடுகளைப் பிரித்து வெளிவந்தபோது, அதிகார வெறியின் தெறிப்பு அதிர்வை ஏற்படுத்தவே செய்தது.

ஒரு நாட்டின் தலைவருக்கான-மக்கள் எதிர்பார்க்கும் சனநாயகப் பண்புகள் எதுவுமேயற்ற இதயத்தின் ஆணவக் குரலாக வெளியான பேச்சில் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவ அதிகாரியின் உணர்வுகளே பிரதிபலித்தது.

இது சந்திரிகாவுக்கே பிரத்தியேகமான குணாம்சம் அல்ல...

யுத்தமா, சமாதானமா என எண்பதுகளில் ஒலித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா என்ற அந்த ராஜதந்திர வில்லனின் குரலும் இதே குணாம்சத்தையே கொண்டிருந்தது.

இதேபோல், அடிக்கடி திரஸ்தவாதி (பயங்கரவாதி) என்ற சொல்லை கொடுப்புப் பற்களைக் கடித்தபடி உச்சரித்த பிரேமதாஸவும், தமிழ் மக்களை வந்தேறு குடிகளெனவும், சிங்கள மக்களை உறிஞ்சி வழும் பற்றிப்படரும் குடிகள் எனவும் நாக்கூசாது பொய்யுரைத்த டி.பி.விஜேதுங்கவும் இதே குணாம்சத்தையே சிங்களப் பேரினவாத அரசியல் தலைமைகளின் பாரம்பரியப் பண்பாகப் பேணிப்பாதுகாத்தவர்களே....

இந்த நிலையில் தனிச்சிங்களச் சட்டத்தை 24 மணி நேரத்தில் கொண்டு வருவேன் எனச் சூளுரைத்து ஆட்சிபீடம் ஏறிய பண்டாரநாயக்காவின் வாரிசான சந்திரிகா தானும் அவரது மகள்தான் என்பதை நிரூபிக்கவே முயன்றுள்ளார். அவ்வளவுதான்.

இதைவிட வேறு எதையும் அவரிடம் எதிர்பார்க்கவே முடியாது.

சரி, இப்போது ரணில் விக்கிரம சிங்கவை அதாவது தற்போதைய காபந்து அரசின் பிரதமரின் பக்கம் பார்வையைக் குவிமையப்படுத்துவோம்.

-நாடாளுமன்றத்தைக் கலைத்த அறிவிப்பு வெளியான அந்த நள்ளிரவுப் போதில் ரணில் ஓர் ஆடம்பரவிடுதியொன்றில் தனது நெருங்கிய நண்பர்களுடன் அளவளாவிக்கொண்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது. இதற்கு முதல் நாளிலேயே நாடாளுமன்றம் எந்தவேளையிலும் கலைக்கப்படலாம் என ஊடகங்கள், செய்திகளை முதன்மை கொடுத்துப் பரவலாகச் செய்திகளை வெளியிட்டிருந்ததால், ரணிலுக்கும் இது குறித்துத் தெரியாமல் இருந்திருக்கமுடியாது. மறுநாள் தொலைக்காட்சி நிகழ்வுகளில் தோன்றிய அவரது முகத்தில் புன்னகையின் உயிர்ப்பு இருக்கவில்லை.

சந்திரிகா இந்த நகர்வினை என்றோ ஒரு நாள் மேற்கொண்டே தீருவார். அவர் ஒருபோதுமே வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஒருவரல்ல. ஆட்சிக்கலைப்புச் செய்யமாட்டேன் என சபாநாயகரிடம் என்ன, கடவுளிடமே சொன்னாலும் அதனை மீறிச் செயற்பட அவர் தயங்கவேமாட்டார் என்பது சாதாரணமாக அனைவரும் அறிந்த விடயமே.

ஆகவே ரணில் இதனை உணராதவராக இருந்திருப்பார் எனக் கூறமுடியாது. இந்தவகையில், மூன்று அமைச்சுக்களைப் பறித்துத் தனது முதுகில் குத்திய சனாதிபதி ஆட்சியைக் கலைத்துத் தன்னை அவமதித்து நெருக்கடியை ஏற்படுத்தத் தயங்கவேமாட்டார். என்பதில் ரணில் அக்கறையற்றவராக இருந்திருக்க முடியாது. அப்படி அவர் இருந்திருப்பாரேயானால் அது அவரின் அரசியல்

(19ஆம் பக்கம் பார்க்க)



# தேர்தல் முடிவு என்பது சித்திரத்தைச் சிதைக்கும்

சிறி.இந்திரகுமார்





முன்பு ஒரு முறை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பின்வருமாறு கூறினார்.

நாம் இலங்கையில் பல பாகங்களைக் கொண்ட சமாதானம் என்னும் சித்திரம் ஒன்றை பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். என்றார்.

இங்கு ஏன் இதனைப் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது. என்றால் இலங்கையில் சர்வதேச சமூகம் பொருத்துவதற்கு நினைக்கும் சித்திரத்தின் பாகங்களில் ஒன்றாக, பெரும் பாகமாக நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் எனும் பெரும் பாகமும் இணைந்துவிட்டது.

இப்போது சமாதானத்தை சித்திரம் என்பதைவிட சமாதானம் ஒரு கதையென்றாகிவிட்டது. அதுவும் எல்லோருக்கும் பரீட்சயமான விக்கிரமாதித்தன் கதை போலாகிவிட்டது.

அதாவது கதைக்குள் பல கதையாகி, கதை வாலாகி நீளத் தொடங்கிவிட்டது. இதுவே சித்திரம் பொருத்த நினைத்த சர்வதேச சமூகத்திற்கு இலங்கையின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பு மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் தேர்தல் என்பது சமாதானத்தைக் கதையாக்கிவிட்டது.

இதில் இதுவரை இலங்கையில் நாடாளுமன்றத் தலைமை ரணிலிடமும், நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட நாட்டின் தலைவி என்ற அதிகாரம் சந்திரிகாவிடமுமாக அரசியல் விஞ்ஞானத்தில் சொல்லப்படுகின்ற கோஹபிற்ரேசன் (Cohabtitaion) ஆட்சி நடத்தப்பட்டது.

இதன் பயனை, இரண்டு எதிர் எதிர் முரண்பட்ட கட்சியின் தலைவர்களை நாடு இரட்டைத் தலைமையாகக் கொண்டதன் எல்லா விளைவுகளையுமே இலங்கை மக்கள் இதுவரை சுமந்தார்கள்.

இந்த நாட்டில் இரு தலைவர்கள் என்ற கோஹபிற்ரேசனின் Cohabitation விளைவே இந்த நாடாளுமன்றத் தேர்தல்.

இனியும் இரட்டைத் தலைமையை முடிவுக்குக் கொண்டு வரும் சக்தியை இலங்கையின் இந்த நாடாளுமன்றத் தேர்தல் கொண்டிருக்கிறதா என்பதை எமக்குள் நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆனால், இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. நாட்டில் Cohabitation முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டுமாயின் நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஒன்றில் நாடாளுமன்றம் பிரவேசிக்க வேண்டும்.

அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றைக் கைப்பற்றி சனாதிபதி சந்திரிகாவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து வெற்றி பெறுவதன் மூலம் இன்னுமொரு சனாதிபதித் தேர்தல் ஊடாக சனாதிபதி கதிரையை ரணில் கைப்பற்றவேண்டும்.

ஆனால், இலங்கையின் அரசியல் நடப்பு நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்ற விடாது.

இந்த நிலையில் எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றால் கூட இலங்கை இரு தலைவர்களும் ஒரு நாடும் என்ற சுமையை சுமந்தேயாக வேண்டும்.

இந்த சுமைக்குள்ளிருந்து தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு கொழும்பிலிருந்து பிரசவிக்கப்பட வேண்டிய வேதனையுள்ளது.

இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முதல் நிறைவேற்று சனாதிபதியுமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன பரிசளித்துச் சென்றுள்ள முதுசம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன பரிசளித்துச் சென்ற முதுசங்களின் பலனை அனுபவித்த இலங்கையின் அரசியல் கட்சிகளின் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே அதிக இடம் உண்டு.

இந்த நிலையில் சுமையாக தொடரும் இலங்கையின் ஒரு நாடும் இரண்டு தலைவர்களும் Cohabitation என்ற ஆட்சிமுறை தொடருமாயின் சர்வதேச சமூகம் விரும்பும் சித்திரத்தை எப்படிப் பொருத்த முடியும் என்பது தமிழ் மக்களின் இன்றைய நியாயமான கேள்வி?

அதேநேரம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்றைக் கைப்பற்றுமாக இருந்தாலும் வேறு ஒரு வடிவில் இலங்கை இதுவரை சந்தித்த துயரத்தைச் சுமக்கவேண்டிய நிலை தொடரக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உண்டு.

எப்படியென்றால் சந்திரிகாவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்-ஜே.வி.பியும் இணைந்து அமைத்திருக்கும் தேர்தல் கூட்டுக் காரணமாக அமைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ளிருந்தே இது தோன்றும்.

அதாவது இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாகச் சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் இருவேறு கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் என்ற வகையில் இது தோன்றும்.

தேர்தல் கூட்டுக்களும் அதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றும் நோக்குடனும் இணைந்த ஜே.வி.பி வெறும் இனவாதத்தையே கொட்டி வருகின்ற நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் சுதந்திரக்கட்சியுடன் இணங்கிப் போகக்கூடிய சாத்தியக்கூறுகள் மிக அரிதே.

ஆகவே மீண்டும் சமாதானத்துக்கான சித்திரத்தைச் சர்வதேச சமூகம் பொருத்துவதில் சிக்கல்கள் தோன்றும்.

இந்த நிலையில் நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவு என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒன்று தான்.

அதாவது இலங்கையில் நடந்து முடிந்த எல்லா தேர்தல்கள் போல இதுவும் ஒரு வழமையான தேர்தல் மட்டுமே.

ஆனால், இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ் மக்களைவிட, சிங்கள மக்களைவிட, சர்வதேச சமூகமே அதிக எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கும்.

ஆனால் சர்வதேச சமூகத்திற்குக் கசப்பான பல அனுபவங்களைத் தோற்றுவிக்கக் கூடிய தேர்தல் முடிவுகளைக் கொடுக்கும் தேர்தலாகவே இது அமையும்.

அத்தோடு இந்தத் தேர்தல் சர்வதேச சமூகத்திற்குப் பல தெளிவான விளக்கங்களைக் கொடுப்பதாகவும் இருக்கும்.

முதலாவது சமாதானத்திற்கான மக்களின் ஆணை என்ன என்பதை மீண்டும் மீண்டும் புரிந்துகொள்ளலாம்.

இரண்டாவது இனவாதத்தின் சக்தி என்பது எவ்வளவு என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மூன்றாவது இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டை இலங்கை மக்கள் எவ்வளவு தூரம் அனுமதிக்கிறார்கள் என்பதை.

இதேநேரம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் கைகளிற்கு இந்த நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக அரசை இயக்கும் ரிமோற் கொன்றோலைக் கைப்பற்றக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது எனலாம்.

ஏனென்றால், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தமிழ்க்கட்சிகளிற்குத் தமிழர் தலைமையின் அங்கிகாரத்திற்கூடாகச் சுமார் இருபதிற்கு மதிகமான நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

ஏனைய ஆசனங்களையே எல்லாக் கட்சிகளும் பங்கிடவேண்டும். இந்த நிலையில் தமிழர்களின் நாடாளுமன்ற ஆசனத்தின் உதவியை எவராலும் புறந்தள்ள முடியாத நிலை ஒன்று தோன்றக்கூடும். இது இலகுவாகத் இலங்கை அரசின் ரிமோற் கொன்றோலை தமிழர்களின் கரங்களிற்கு வழங்கும்.

ஆனால், தமிழர்களின் கரங்களில் அதிகம் சார்ந்து நிற்கும் போக்கைச் சிங்கள இனவாதம் அதிகம் அனுமதிக்கவும் மாட்டாது.

ஆனால், இந்தத் தேர்தலிற்கூடாகவும் இலங்கையில் ஒரு சமாதான காலத்தில் நடைபெறும் ஒரு தேர்தலாகவும் இது அமையும்.

அத்தோடு முதன் முதலில் இலங்கையில் காபந்து அமைச்சரவையில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையை அமைத்த பெருமையைத் தவிர வேறு எந்தப் புதிய சங்கதிகளும் இந்தத் தேர்தல் ஊடாகத் தோன்றப் போவதில்லை என அடித்துச் சொல்லலாம்.


ஆனால், புலிகளின் அரசியல் இராஜதந்திர அணுகு முறையினூடாக அவர்கள் பெற்ற அரசியல் இலாபங்களைத் தமிழ் மக்கள் நிச்சயமாக அனுபவிக்கக் கூடிய ஒரு நிலை தோன்றும்.

இதனூடாகச் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழரின் பலம் அதிகரிக்கும் வாய்ப்பே அதிகமாக உள்ளது.

□ □ □ □

# நறுக்கென...

## சோமவன்சவும்... அவரின் பிதற்றல்களும்



அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியிலை குடைபிடிப்பானாம். அரசியல்வாதியைப் பல்லக்கில ஏத்தினா ஆகாயத்தில பறக்கிறதா நினைப்பானாம். ஜே.வி.பி.யின் தலைமறைவுத் தலைவரின்-சோமவன்ச அமரசிங்கவின் நிலை இப்போது இதுதான்.

தலைமறைவாய் லண்டனிலை இருக்கேக்கை மூச்சைக் காணோம் பேச்சைக் காணோம் என்றிருந்தவர், இப்ப இலங்கைக்கு வந்ததும் ஏதோ நிறைவேற்று அதிகாரமே தன் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதைப் போன்று வானத்துக்கும் பூமிக்கும் துள்ளிக்குதிக்கத் தொடங்கீட்டார்.

போன முறை தேர்தலின் போதும் ஏதோ வெட்டி வீழ்த்துமாப் போன்று கொழும்பு வந்து வீரவசனம் பேசிவிட்டு தேர்தல் முடிவு வெளியாக முன்னரே மொட்டாக்குப் போட்டபடி மீண்டும் தலைமறைவான புரட்சிக்காரரான (?) சோமவன்ச ஏப்ரல் முதலாம் திகதியோ அதற்கு முன்போ கூட இப்படித்தான் ஓடிப்போவார் என்பதும் உண்மையே....

இந்தமுறை வந்திறங்கியதும், கூட்டணி ஒப்பந்தம் கைச்சாத்தானதும், கிட்டத்தட்டத்தானே, சனாதிபதி என்ற நிலைக்கு வந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு கன்னாபின்னாவெனக் கருத்துக் கூறத்தொடங்கிவிட்டார்.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகாரசபை யோசனையை எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாதாம்...!

அது தொடர்பாக எந்தவொரு பேச்சுவார்த்தையையும் வைத்துக்கொள்ள முடியாதாம்....!

விடுதலைப்புலிகள் கடந்த ஏப்ரலில் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிய பின்னர் சமாதான முயற்சிகள் செயலிழந்து போயிற்றாம்...!

அதுமட்டுமல்ல, தங்களின் புதிய கூட்டணியால் விடுதலைப்புலிகளுக்கு சனநாயகத்தையும், சமத்துவத்தையும் மட்டுமே வழங்க முடியுமாம்...!

அது சரி... இவரிடம் இதையெல்லாம் பற்றிக்கூறும்படி யார் கேட்டார்களாம்? விடுதலைப்புலிகள் இவர்களை இது பற்றியெல்லாம் என்ன சொல்லுறீங்க சோமவன்ச அவர்களே என்று கேட்டார்களா?

-அல்லது தமிழ் மக்கள் தான் கேட்டார்களா? சர்வதேச சமூகம் கேட்டதா? ஒண்ட வந்தபிடாரி ஊர்ப்பிடாரியைக் காட்டிக்கொடுத்த கதையாக சந்திரிகாவுக்கு மேலும் பிரச்சினையை ஏற்படுத்த சோமவன்ச முயல்கிறார் என்றே தோன்றுகிறது.

ஏற்கெனவே கூடாத கூட்டத்துடன் கூடிவிட்டதாக அவரது குடும்பமே (அநுரா தவிர) சந்திரிகாவைக் குற்றம் சாட்டுகிற நிலைமையில், சோமவன்சவின் கருத்துக்கள் சர்வதேச மட்டத்தில் மட்டுமல்ல தேசிய மட்டத்திலும் சிக்கல்களை ஏற்படுத்தவே செய்யும்.

இதை உணர்ந்தோ என்னவோ சோமவன்சவை சந்திரிகா தவிர்த்து வருகிறார் போல் தெரிகிறது... இந்த நிலையில் ஏற்படுத்திய பல்லக்கிலிருந்து இவரை எப்படி இறக்குவது என்று தெரியாமல் அவர் தவிப்பதாகவும் கூறப்படுகிறது.

எதுவானாலும் முரண்பாடுகளுடன் குடித்தனம் ஆரம்பித்தால் உடன்பாட்டுடன் வாழமுடியாதுதான்....

இது சந்திரிகாவுக்குத் தெரிய வரும்... அப்போது சோமவன்ச மீண்டும் தலைமறைவாகிவிடுவார்...

## காபந்து அமைச்சர் கதிர்காமர்



ஒருகாலத்தில் அரசியலில் அநாமதேயராக இருந்து, நீலன் திருச்செல்வத்தின் புண்ணியத்தால், சனாதிபதியின் அரசியல் சூழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான-விசுவாசமான தலையாட்டி என இனங்காணப்பட்டு அவருக்கு அறிமுகம் செய்யப்பட்டதன் மூலம், சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சராக அரசியல் அரங்கில் பிரபல்யமான லக்ஸ்மன் கதிர்காமர் மீண்டும் காபந்து அரசில் ஊடகத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

மற்றொரு, தனக்கு 'விசுவாசமான பணியை' தேர்தல் காலத்தில் மேற்கொள்ளவெனச் சந்திரிகா அவருக்கு அப்பதவியை வழங்கியுள்ளார்.

அதுவும், எந்தப் பதவி அரசாங்கத்திடம் இருந்தால் தனக்கும் தன் அரசியல் எதிர்காலத்திற்கும் ஆபத்து எனக்கருதி சில மாதங்களின் முன்னர் பறித்துத் தன்வசம் ஆக்கிக்கொண்டாரோ, அந்தப் பதவியையே கதிர்காமரிடம் ஒப்படைத்துள்ளதன் மூலம், தான் நினைத்ததைக் கதிர்காமர் எந்தக் குத்துக்கரணம் அடித்தேனும் செய்து முடிப்பார் என்ற தனது நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளார் சந்திரிகா.

சரி, இந்தத் தொடர்பூடகத் துறைமூலம் அவர் என்ன பெரிதாகச் செய்து கிழித்துவிடப் போகிறார் என்று நீங்கள் கேட்கலாம்.

தேர்தல் காலத்தில் ஊடகத்துறையைப் பயன்படுத்தி என்ன வெல்லாம், செய்ய முடியும் என்பது அரசியல்வாதிகளுக்குத்தான் தெரியும்.

இப்போது அவர் ரணில் தலைமையிலான அரசுக்கெதிரான பிரசாரத்தை ஊடகங்கள் ஊடாக நெறிப்படுத்த வேண்டும்.

இல்லா குற்றத்தை-இல்லாத காரணங்களைக் கூறி இருக்கிறதாக அடித்துக் கூறவேண்டும்.

சமாதான நகர்வினைத் தமிழீழத்திற்கான பாதை என நிரூபிக்கவேண்டும். அத்துடன் விடுதலைப்புலிகள் மீதான குற்றங்களைக் கற்பனையில் உருவாக்கி ஊடகங்கள் ஊடாக உமிழ வைக்கவேண்டும்.

இனப்பிரச்சினையை மீண்டும் பயங்கரவாதப் பிரச்சினையாகப் பூதக்கண்ணாடி போட்டுக் காட்டவேண்டும்.

கோடாலிக் காம்பாகவோ, கருங்காலியாகவோ செயற்பட்டுத் தமிழ்மக்களுக்கு எதிரான பிரசாரங்களைச் செய்யவேண்டும்.

இதெல்லாம் அவருக்குக் கைவந்தகலை. ஏழாண்டுகால அனுபவம் அவருக்கு இதில் உண்டு. 'ஜமாய்ச்சு' விடுவார் என்று சந்திரிகா நினைக்கலாம். ஆனால், கதிர்காமர் காலம்... காலம் சென்றுவிட்டது என்பதை மக்களும் சர்வதேச சமூகமும் அறியும்.

ஆனாலும் சந்திரிகாவுக்கு நம்பிக்கையான ஆள்வேறெவருமே இப்போது அவர் அருகில் இல்லை... எல்லாருமே பதவியைக் குறிவைத்து வாலாட்டுகிறார்கள். கதிர்காமர் ஒருவர் மட்டுமே ஏற்கெனவே கொடுத்த பதவிக்காக நன்றியுணர்வுடன் வாலாட்டுகிறார்... தலையாட்டுகிறார்... அவ்வளவுதான்.

## சந்திரிகாவின் மரணப் பொறிக்குள் சமாதானமா? அரசாங்கமா?



கடைசியில் சந்திரிகா தனது சர்வாதிகார சனாதிபதித்தனத்தை வெளிப்படுத்தியேவிட்டார்.

இரு வாரங்களுக்கு முன் கூட, இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் எடுத்திருந்த முடிவை மூடிமறைத்துக்கொண்டு, அரசாங்கத்தைக் கலைக்கும் திட்டமோ தேர்தல் ஒன்றை நடத்தும் யோசனையோ தனக்கில்லையென்று நெஞ்சறியப் பொய் சொன்ன சந்திரிகா நள்ளிரவு நடவடிக்கையொன்றை மேற்கொண்டு அரசாங்கத்தைக் கலைத்துத் தேர்தலுக்கான நாளையும் அறிவித்துவிட்டு, தன்னிடமுள்ள அதிகார பலத்தின் வலுவைப் பகிரங்கமாக்கி விட்டுள்ளார். நூலிழையில் ஊசலாடிக்கொண்டிருந்த ரணில் தலைமையிலான நாடாளுமன்ற ஆட்சி, மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாடாளுமன்றம், கலைக்கப்பட்டுவிட்டது.

இது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல,

தனது படுதோல்வி கண்ட 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற கோட்பாட்டைப் புறந்தள்ளி-வேறு வழியின்றிச் சமாதானம் மட்டும் என்ற கருத்தை ரணில் முன்வைத்து, புரிந்துணர்வு உடன்பாட்டை மேற்கொண்டு, A9 நெடுஞ்சாலையை விடுதலைப்புலிகளின் அனுமதியுடன் திறந்துவைத்த போதே சந்திரிகாவின் மூக்கு உடைந்துபோயிற்று.

ஏழாண்டு காலம் போர் நடத்தித் தோல்வியுற்று, சாத்தியமற்றுப் போன ஒரு விடயத்தை, வெறுமனே கையெழுத்துக்கள் மூலம் சாத்தியமாக்கிப் புலிகள் பற்றித் தானும், மாமன் ரத்வத்தையும், விசுவாசமான அடிமையான கதிர்காமரும் முக்கிமுக்கி உருவாக்கிய 'புலிகள் பயங்கரவாதிகள்' என்ற மாயையை அரசும், புலிகளும் உடைத்தமையானது சந்திரிகாவுக்குக் கிடைத்த இராஜதந்திரத் தோல்வியாகவும் அமைந்துவிட்டது.

ஏற்கெனவே ஆனையிறவின் வீழ்ச்சியுடன் முப்படைத் தளபதியான சந்திரிகாவுக்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ஜெனரல் ரத்வத்தைக்கும் கிடைத்த இராணுவத் தோல்வியானது ஒருமாபெரும் அரசியல் தோல்வியாகவும் மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போது அடிபட்டு அவமானப்பட்ட, வெறியுடன் கோழைத்தனமான முறையில், சனநாயகத்திற்கு விரோதமான சர்வாதிகாரக் கோட்பாட்டை அங்கீகரிக்கும், இன வெறியர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பின் அதிகாரங்களைப் பயன்படுத்தி சந்திரிகா ரணிலைப் பழிவாங்கிவிட்டார்.

ஜே.ஆர். செய்த முட்டாள் தனத்தின் விளைவைச் சந்திரிகா உபயோகித்து அவரது மருமகனைச் சட்டபூர்வமாக விழுத்திவிட்ட நிலையில் பெரும் பேரினவாதிகள் மீண்டும் தென்பகுதி மக்களைத் தேர்தல் சுழிக்குள் தள்ளிவிட்டுள்ளார்கள்.

அதிகாரம் அதி'காரமா'க இருந்ததால் என்ன நடக்கும் என்பதற்கு சிறிலங்காவின் ஆட்சியில் ஒரு சிறப்பான உதாரணம். சிறிலங்காவின் மக்கள் மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறை மேற்கொள்ள அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீண்டும் சமாதானத்திற்கான யுத்தத்திற்கா அல்லது வெறுமனே சமாதானத்திற்கா வாக்களிக்கப் போகிறார்கள்? ஏப்ரல் மூன்றாம் திகதி தெரிந்துவிடும்.

அதுவரை பலவீனப்பட்டு இருக்கும் சமாதானப் புறாவை சர்வதேச சமூகம்தான் பாதுகாக்க வேண்டும்.

இல்லையேல் இனவாதமும் இனவாதிகளும் அதனைக் கொன்று 'சுவாகா' பண்ணிவிடுவார்கள்...

## துணை சனாதிபதிக் கனவில் அநுரா



இன்றைய நிலையில் தென்பகுதியில்-அதுவும் கொழும்பு தலைநகரில் மிகவும் சந்தோசகரமான 'பிரகிருதி' யார் எனக் கேட்டால் அது அநுரா பண்டாரநாயக்காவே தான்.

நீண்ட காலமாக அவர் நச்சரித்த நச்சரிப்புத் தாங்காமல், அவரின் அதி அற்புத (!?) மான ஆலோசனைகளுக்கிணங்க அவரது அருமை அக்கா சனாதிபதி சந்திரிகா, ரணில் தலைமையிலான அரசாங்கத்தைக் கலைத்தே விட்டார்.

இதன் மூலம் அநுரா,அவரது அக்காவின் கணவரை-அதாவது அருமை அத்தானைக் கொன்றழித்த கொடுமையைச் செய்த அந்த சோமவன்ச-வீரவன்ச கும்பலான ஜே.வி.பியினரின் இலக்கினை எட்டவைத்துவிட்டார்.

ஜே.வி.பியினர் அநுராவின் ஏமாளித் தனத்தை நன்றாகப் பயன்படுத்திவிட்டனர் என்றே கூறவேண்டும்.

சந்திரிகாவின் பிள்ளைகளே மன்னிக்கமுடியாத வரலாற்றுத் தவறையும் தனது சொந்தப் பதவி வெறிகொண்ட அரசியல் அபிலாசைகளுக்காகவும், அநுராவின் தொலைநோக்குச் சிந்தனைத் திறனற்ற ஆலோசனையின் பேரிலும், சனாதிபதி செய்தேவிட்டார்.

ஜே.வி.பியுடனான கூட்டணி உருவானதைத்தான் கூறுகிறேன்.

சந்திரிகாவுக்கு இக்கூட்டணி உருவாகியதில் அவ்வளவு விருப்பமில்லையென அவரது அருமைச் சகோதரி கூறுவதில் அர்த்தமேயில்லை.

சந்திரிகா தனது ஆலோசகராக அவரைவிட படிப்பறிவும் பன்முக ஆற்றலும் கொண்ட அக்கா சுனேத்திராவை நியமிக்காது மந்த-மதுப்புத்தி கொண்ட அநுராவை நியமித்த போதே அவரது அரசியல் அனுபவ வெறுமை வெளிச்சமாகிவிட்டது.

சரி அதுதான் போகட்டும்:-

தேர்தல் இன்னமும் ஆரம்ப கட்டத்தைக்கூட எட்டவில்லை.

விமல்வீரவன்ச தான் விவசாய அமைச்சர் என்று கூறிவிட்டார் அநுரா.

வீரவன்ச விவசாயத்தில புரட்சி செய்யப் போகிறாராம் என்கிறார் அநுரா.

ஆயுத ரீதியில் புரட்சி ஒன்றை அலங்கோலமாகச் செய்து நாட்டைச் சீரழித்தவர்கள் விவசாயப் புரட்சியைச் செய்யப் போகிறார்களாம்!

எல்லோரும் ஜோரா ஒரு தடவை அநுராவுக்குக் கைதட்டுங்களேன்!

மேலும் இரு முக்கிய அமைச்சுக்களும் ஜே.வி.பியினருக்கு வழங்கப்படும் எனக் கூறி ஜே.வி.பியினரை உச்சி குளிரவைத்துள்ள அநுரா அதன் மூலம் சி.ல.சு.கட்சியின் சிரேஷ்ட தலைவர்களின் வயிற்றில் நெருப்பையும் அள்ளிக்கொட்டியுள்ளார்.

அப்படியானால் அநுரா எந்தப் பதவியை எதிர்பார்த்திருக்கிறாராம்!?

பிரதம மந்திரி பதவியா..? ராஜபக்ச விடமாட்டாரே..!

சனாதிபதி பதவியா? அக்கா அகலவே மாட்டாரே!

அப்படியானால்...?


துணை சனாதிபதிப் பதவியொன்றை உருவாக்கித் தன்னை அதற்கு நியமிக்குமாறு அக்காவை நச்சரிப்பதாகக் கேள்வி...?

போகிற போக்கைப் பார்த்தால் சிறிலங்காவின் எதிர்காலம் கவலைக்குரியதாகத்தான் தெரிகிறது.

**செங்குட்டுவன்**

ஒரே முனையில் கூடும் பல்வேறு பாதைகளே, சமயங்கள். - மகாத்மா காந்தி

# தேர்தலுக்கான சமாதானப் பேச்சுக்களும் சமாதானத்துக்கான தேர்தல் பேச்சுக்களும்...



தேர்தல்,சமாதானம் இந்த இரண்டு சொற்களும் சிறிலங்காவில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சொற்களாகிவிட்டன.

தேர்தலின் போது சமாதானம் பற்றி பேசுவதும்,சமாதானம் பேணப்படும் காலத்தில் தேர்தல் குறித்து பேசுவதும் இங்கு இயல்பான விடயமாக ஆகிவிட்டது. ஆளும்கட்சி, ஆட்சிபீடம் ஏற முன்னர், எதிர்கட்சியாக இருந்து தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது சமாதானம் குறித்தே அதிகம் பேசி அமைதி குறித்தே அதிகம் அலறி, தாம் ஆட்சிக்கு வந்தால் நாட்டை அமைதிப்பூங்காவாக மாற்றுவதாகவும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகவும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து யுத்தச்



செலவீனங்களைக் குறைத்து, அபிவிருத்திப் பணிகளுக்கு பெருமளவில் நிதியை ஒதுக்கப்போவதாகவும் வாக்குகளை அள்ளி வழங்கி பிரசாரம் செய்வது வளக்கம்.

இது சிறிலங்காவின் அரசியல் சர்வசாதாரணமான விடயமாகும். ஆனால் அதேகட்சி ஆட்சி பீடம் ஏறியதும் கதையே மாறிவிடும். சமாதானம் பற்றி பேசிய குரல் சமாதானத்திற்கான யுத்தம் பற்றி பேச ஆரம்பித்துவிடும் இன சமத்துவம் பற்றி பேசிய குரல் பச்சை இனவாதம் பேசத்தொடங்கிவிடும்

சிறிலங்காவின் இனப்பிச்சினை பௌத்த சிங்கள இனவாதிகளாலும்,பேரினவாத அரசியல் தலைமைகளாலும் கையாளப்பட்ட அணுகுமுறைகள்காரணமாக தமிழ்மக்களின விடுதலைப் போராட்டமாக பரிணாமம் கொண்டது முதல், அதாவது சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக காலத்தில் இருந்து அவரது புதல்வியான சந்திரிகாவின் இன்றய காலம்வரை இதே கதை காலத்திற்கேற்ப வேறு வேறு வடிவங்களைத் தாங்கி தீவிரம் கொண்டு வந்துள்ளதேயன்றி குறையவில்லை என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

சிறிமாவோ இன விவகாரத்தைக் கையாண்ட விதத்தை விடவும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அதனைக் கையாண்டவிதம் மிக நுட்பமான சதித்தன்மையுடன் கூடிய ராஜதந்திர வகையைச் சேர்ந்த ஒன்றாகும்.

பேரினவாதத்திற்கு பலமும் பாதுகாப்புமளித்து இரத்தவெறியூட்டி வளர்த்த பெருமை (!?) ஜே.ஆருக்கும் அவரைத் தொடர்ந்து அவரின் பதவியில் அமர்ந்த பிரேமதாசாவிற்குமே உண்டு.

இவர்கள் இருவரும் இனவாதம் பேசிய சனநாயக சர்வாதிகாரிகள் . தங்களுக்கு அரசியல் யாப்பின் மூலம் கிடைத்த அபரிமிதமான அதிகாரங்களைக் கொண்டு அவர்கள் நடத்திய இனவாத ஆட்சி வரலாறுகாணாத உள்நாட்டு யுத்தமொன்றிற்கு வழிகோலியது.

இவர் இருவரதும் ஆட்சிக் கால அடக்குமுறைகளே,இராணுவரீதியான ஒடுக்குமுறைகளே தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு உத்வேகம் அளித்ததுடன், தமிழீழம்தான் தமிழ்மக்களின் விடிவுக்கு ஒரேவழி என்ற முடிவையும் எடுக்கவைத்தது.

ஜே.ஆர்.முதல் டி.பி.விஜயதுங்கா வரையிலான சனாதிபதிகள் 17ஆண்டுகால ஆட்சி சிறிலங்காவை பொருளாதார ரீதியிலும், நிர்வாக ரீதியிலும் அதலபாதாளத்திற்கு இட்டுச்சென்றது.

இந்த வேளையில் எல்லா வகையிலும் அதிருப்தியடைந்த தென்பகுதி மக்களுக்கு ஒரு அரசியல் மாற்றம் தேவைப்பட்ட வேளையில், சந்திரிகாவின் அரசியல் பிரவேசம் சமாதான கீதத்துடன் அரங்கேறியது. தேர்தலுக்கான சந்திரிகாவின் சமாதானப்பேச்சு, போரினாலும், பொருளாதாரநெருக்கடிகளாலும் சலிப்புற்றிருந்த தென்பகுதி மக்களிடையே பெருமளவிற்கு எடுபட்டதில் வியப்பில்லை.



1990களின் மத்தியில், யுத்தத்தை தான் விரும்பவில்லையென்றும் சமாதானம் மூலமே... பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கமுடியுமென தான் தீர்க்கமாக நம்புவதாகவும்,விடுதலைப்புலிகளுடன் பேசி போருக்கு ஒரு முடிவும் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வும் தன்னால் காணமுடியும் என்றும்,இவையனைத்துடன், நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி ஆட்சி முறையை பெரும்பான்மை பலத்துடன் தான் ஆட்சிக்கு வந்தால் நீக்கிவிடுவதாகவும் மக்களிடம் பிரச்சாரம் செய்து அதற்கான ஆணையைக்கோரி தேர்தலில் நின்றார்.

மக்களுக்கு சந்திரிகா ஒரு சமாதானப்புறாவாக தென்பட்டார். அவர்களுக்கு இதுவும் ஒரு மாயமான் என்பது புரியாமல் போனது துயரம் தரும்விடயமே.அதனால் சந்திரிகாவை பெருமளவில் ஆதரித்து சமாதானத்திற்கான ஆணையை அவருக்கு வழங்கினர். நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு பலத்தை வழங்கினர்.

சரித்திரம் காணாத வெற்றியை சனாதிபதி தேர்தலில் பெற்ற சந்திரிகா தான் பண்டாரநாயக்காவின் புதல்விதான் என்பதை நிரூபிக்கத்தொடங்கினார். விசுவாசமற்ற வகையில் ஒரு சமாதானச் சூழலை ஏற்படுத்தி தமிழ்மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் ஏமாற்ற முனைந்தபோதுதான். இதுவரை சாத்தான்தான் வேதம் ஓதியது என்பதை மக்கள் உணர்ந்துகொண்டார்கள்.

அதன் பின் மக்கள் வழங்கிய ஆணையை தூக்கி கிடப்பில் போட்டுவிட்டு சந்திரிகா நடத்திய அல்லி ராஜ்ஜியம் எத்தகைய கொடூரமானது என்பதை வரலாறு பதிவு செய்தே உள்ளது.

சமாதானத்தை, சமாதானத்திற்கான யுத்தமாக மாற்றி வெறியாட்டம் ஆடிய சந்திரிகாவின் ஏழாண்டுகால ஆட்சி தமிழ் மக்களை வதம் செய்வதையே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டதை தமிழ்மக்கள் இனமானமிக்க தமிழ்மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

ஐ.தே.கட்சியின் 17ஆண்டு கால ஆட்சியை, தனது 7ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் தூசாக்கி விட்ட சந்திரிகா அடுத்த தேர்தலை சந்திக்க நேர்ந்தபோது அவரின் பேச்சுக்களை மக்கள் நம்பத்தயாராக இருக்கவில்லை.

யுத்தத்தில் படுதோல்விகளைச் சந்தித்தநிலையில் சமாதானம் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவது அவருக்கு அவமானம் தருவதாகவும் இருந்திருக்கும் எனவே கடந்த தேர்தலில் சமாதானத்தை-அதாவது தேர்தலுக்கான சமாதானத்தைப் பற்றி பேசும் வாய்ப்பு ரணிலின் கைக்கு மாறியது.

வடக்கு கிழக்கில் சிங்கள அரசுகள் நடத்திய யுத்தம், சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தலைநகர்வரை விஸ்தாரமானபோது தான் சிங்கள மக்களுக்கு யுத்தம் என்றால் என்ன என்று விளங்கியது.

ஆகவே ரணிலின் தேர்தலுக்கான சமாதானப்பேச்சு நம்பிக்கையீனங்களுக்கு மத்தியிலும் சிங்கள மக்களிடையே எடுபட்டதில் வியப்பில்லை.

கடந்த இரண்டாண்டு கால-அதிகாரபலமற்ற-ரணில்விக்கிரமசிங்கவின் ஆட்சி சமாதானத்தை ஏதோ ஒரு வகையில் கட்டிக்காக்க முயன்றதற்கு சமாதானத்தை முன்னகர்த்துவதற்கு பின்னணியில் நின்று உதவிய சர்வதேச சமூகமே காரணமாகியது என்பதில் சந்தேகமில்லை.

சமாதான சூழலின்றி, சிறிலங்காவை அதன் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்க எவராலும் முடியாது என்பது சந்திரிகாவுக்கும் தெரியும் ரணிலுக்கும்தெரியும்.

ஆனாலும் அதிகாரப் போட்டி அவர்களின் சிந்திக்கும் திறனை மந்தமாக்கியுள்ளது.

இந்த நிலையில் மீண்டும் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளிவந்துள்ளது. இந்த தேர்தலில் கூட தேர்தலுக்கான சமாதானப் பேச்சுக்கள் காரசாரமாக பிரசாரம் செய்யும் அரசியல் வாதிகளின் வாயிலிருந்து பெருக்கெடுக்கவே செய்யும்.

சமாதானம் குறித்து உருகி உருகி எல்லாத்தரப்பும் பேசவே செய்வர். ஞாபகம் இருக்கட்டும் இம்முறை தேர்தலுக்கான சமாதானப் பேச்சுக்களை மட்டுமல்ல... சமாதானத்திற்கான தேர்தல் பேச்சுக்களையும் கூட ஏககாலத்தில் கேட்கமுடியும். பிரதமரும்-சனாதிபதியும் ஒருவரையொருவர் தாக்கியபடி இருவருமே சமாதானம் குறித்து பேசப்போகும் வேடிக்கையைக் காணும் காலம் வந்துள்ளது.

சர்வதேச சமூகம் இதனை உன்னிப்பாக கவனித்தால் சிறிலங்காவின் இனவாத அரசியலின் மற்றுமொரு புதிய பரிமாணத்தை காண முடியும். அது தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் நிராகரிக்கப்படவே முடியாத நியாயத்தை அவர்களுக்கு உணர்த்தவே செய்யும்.

**மௌரியன்**



## மதவடி மயிலர்

**செய்தி:-** *புலிகளின் இடைக்கால நிர்வாக திட்ட வரைபினை எந்தக் காலத்திலும் ஏற்க முடியாது என்கிறார் சோமவன்ச அமரசிங்க....*

**மயிலர்:-** இடைக்கால வரவிலை வந்து குதித்துவிட்டு கதை வேறை இவரையே ஒருவரும் ஏற்கிறதா தெரியேல்லை...அழைப்பனுப்பிய அம்மையாரே ஆளை சந்திக்காது காய் வெட்டித்திரியிறாவாம்... அதுக்குள்ளே ஐயாடை கதை மட்டும் பல்லக்கிலை பறக்குது....

**செய்தி:-** *ஐக்கிய தேசியமுன்னணி அமைச்சர்களின் அதிகாரம், எண்ணிக்கை குறைக்கப்படும்... சனாதிபதி நடவடிக்கை.*

**மயிலர்:-** உது செத்தபாம்பை அடிக்கிற வேலைபாருங்கோ.... ஏற்கெனவே அதிகாரம் இல்லாத அரசிடம் இருக்கிறதையும் பிடுங்கிறதிலை என்ன இருக்குதாம்.... ஆட்சிகலைச்ச பிறகு அமைச்சர் இருந்தென்ன.. அதிகாரம் இருந்தென்ன.....?

**செய்தி:-** *இராணுவ பின்னடைவுக்கு காரணமான படையதிகாரிகளுக்கு உயர் பதவிகள்... ஜே.வி.பி. குற்றச்சாட்டு.*

**மயிலர்:-** இராணுவ பின்னடைவுக்கும் தோல்விக்கும் காரணமான இராணுவத்தளபதி பலகல்லவுக்கே பதவியுயர்வும் பதவி நீடிப்பும் அம்மையார் வழங்கியிருக்கேக்கை.. இது என்ன பெரிய குற்றமாம்.. பாதாள உலகத்தவரையே சனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் சேர்த்துக்கொள்ளும் சனாதிபதி ஆளும் நாடு இது என்று தெரியாதே..!

**செய்தி:-** *சபாநாயகருக்கு வழங்கிய உறுதி மொழியை சனாதிபதி மீறிவிட்டார்...*

**மயிலர்:-** மக்களுக்கு வழங்கிய எத்தனை உறுதிமொழிகளை மீறி சாதனை புரிந்த சனாதிபதிக்கு இது ஒரு பெரியவிடயமே.. அம்மணி சொன்னபடி.... உறுதியளித்தபடி செய்த ஒரே காரியம்...நிறைவேற்று அதிகாரவலுவை ஒரு நாள் பயன்படுத்துவேன் என்பது தான்.

**செய்தி:-** *எமது கோரிக்கையை ஏற்போருடன் கூட்டணி அமைக்கத் தயார் என்று கூறுகிறார் ஆறுமுகன் தொண்டமான்.*

**மயிலர்:-** சரி..கோரிக்கை எதுவென்று சொன்னால் தானே புரியும்... அது..சரி..இன்றும் தெளிவாகக் கூறியிருக்கலாமே ஆர் ஆட்சியை அமைக்கிறார்களோ அவர்களோடு கூட்டுச் சேருவோம் என்பது.. அதுதானே இவ்வளவு காலமும் செய்து வந்தது...என்ன நான் சொல்லுறது பிழையே!

**செய்தி:-** *தமிழ்க்கட்சிகளின் ஆதரவுஎன்பது நம்பத்தகுந்ததல்ல என்கிறார். விமல் வீரவன்ச...*

**மயிலர்:-** அது சரி ஜே.வி.பி. யின் ஆதரவு மட்டும் நம்பத்தகுந்தது என்கிறாரோ வீரவன்ச அவர்கள்..? தமிழ் கட்சிகள் அதாவது உண்மையான. தமிழ் மக்களின் உரிமைக்காக போராடும் தமிழுணர்வுள்ள கட்சிகள் ஒரு போதுமே சிங்களத் தலைமைகளை நம்பியது கிடையாதே.. எனவே அவர்கள் தங்களை நம்புமாறு எந்த சிங்கள தலைமையையும் கோரியதுமில்லை அப்பிடியென்றால்.. ஈ.பி.டி.பியின் ஆதரவை நம்பக் கூடாது என்கிறாரோ...? அவர்களை ஆதரிப்பதாகக் கூறும் ஒரே கட்சி அதுதானே..?

எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு. - திருவள்ளுவர்

நேர்நோக்கு

# மக்கள் ஆதரவு...?

பொலிஸ் திணைக்களம், ஊடகத்துறை, தேர்தல் திணைக்களம், மூன்றும் தனது கட்டுப்பாட்டில் இருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கலைத்திருக்கிறார். பொதுத்தேர்தலுக்கான நாளும் குறிப்பிடப பட்டு விட்டது. அது நிச்சயமாக சோதிடரீதியாக சந்திரிகாவுக்கு அனுகூலமான நாளாகவே இருக்கும். மக்கள் ஆதரவு என்பதற்கும் மேலாக இவை எல்லாம் சரிவர அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது சனாதிப்தி சந்திரிகா குமாரதுங்கவின் நம்பிக்கையாகும். மக்கள் மீதான நம்பிக்கையெல்லாம் இரண்டாம் பட்சம்தான்.

நாடாளுமன்றக் கலைப்புடன் சேர்த்து ஊடகத்துறை அமைச்சராக முன்னாள் வெளி விவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நியமிக்கப்பட்டதற்கான அறிவிப்பும் வெளிவந்திருக்கின்றது. இது தேர்தல் காலத்தில் அரச ஊடகங்கள் எவ்வாறு செயற்படப் போகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. ஏழு வருட காலம் வெளிவிவகார அமைச்சராகச் செய்த பொய்ப்பிரச்சாரம் சர்வதேச அரங்கில் இப்பொழுது அம்பலமாகிவிட்ட போதும், உள்ளூர் மக்களை ஏமாற்ற அவரே தகுதியானவர் என சனாதிபதி தற்போது தீர்மானித்திருக்கிறார். கதிர்காமரும் வெட்கமற்ற முறையில் தனது பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளமையை கடந்த சில நாட்கள் அரசாங்க ஊடகங்களை அவதானித்தவர்கள் புரிந்து கொள்ளலாம்.

இதேவேளை பொலிஸ் மா அதிபர் நியமனம் பலத்த இழுபறிக்கு மத்தியில் சனாதிபதியின் விருப்பத்திற்கு ஏற்ற முறையிலேயே மேற்கொள்ளப்பட்டிருக் கின்றது. ஓய்வு பெற 06 மாதங்கள் மட்டுமே இருந்த நிலையில் நியமனம் பெற்ற இந்திரா டி சில்வாவின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பான சர்ச்சை இப்பொழுது எழுந்திருக்கின்றது.எனினும் சனாதிபதி



சந்திரிகாவின் ஆதரவு இந்திரா டி சில்வாவுக்கு உள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

அடுத்ததாக தேர்தல் ஆணையாளர் எப்பொழுதோ சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவை நியமிக்கு மாறும் தன்னை ஓய்வுபெற அனுமதிக்குமாறும் கோரிவந்தார். தான் இறந்து போனால் தேர்தல் திணைக்களத்திற்கு ஆணையாளர் ஒருவரை நியமிக்க முடியாத நிலை தோன்றும் என அவர் எடுத்துக் கூறியும் தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்க சனாதிபதி சந்திரிகா முன்வர வில்லை.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க இலங்கையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த அரசியல் நெருக்கடி சிறிலங்காவில் பல செயற்பாடுகளுக்கும் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றமின்மை என்பது உதவி வழங்கும் நாடுகளில் 4500 கோடி டொலர் நிதி உதவியை முடங்கச் செய்திருக்கிறது. தேர்தல் குறித்த அறிவிப்பு இதனை மேலும் தாமதப் படுத்தும் என அரசியல் அவதானிகள் பலரும் எச்சரிக்கை செய்த போதும் அது கவனத்தில் கொள்ளப் படவில்லை. ஜே.வி.பி. - சு.க. கூட்டு இந்நிதியை அறவே இல்லா தொழித்து விடவும் கூடும் என விடுக்கப்பட்ட எச்சரிக்கையும் பொருட்படுத்தப்பட வில்லை. சிலவேளைகளில் இக்கூட்டு ஆட்சியமைத்தால் ஒன்றில் "ஏகாதி பத்தியவாதிகள்" அல்லது "அந்நியர்கள்" என வர்ணிக்கப்பட்டு வந்த உதவி வழங்கும் நாடுகளின் நிபந்தனைகளுக்கு இணங்கிச் செல்லவேண்டும். அல்லது நிதி உதவிகிட்டாது போவது திண்ணம்.

இந்நிதி உதவி கிட்டாவிடின் சிறிலங்கா பெரும் சிக்கல்களையே சந்திக்கும்.

இந்த நிதியை ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குக் கிட்டவிடாது தடுக்க சனாதிபதி தீவிரமுயற்சியை எடுத்து வந்தார் எதிர்வரும் 17 ம் திகதி மாநாட்டில் கிடைப்ப தற்கான வாய்ப்புக் கிட்டிவிடுமோ? என்ற அச்சமும் நாடாளுமன்றக் கலைப்புக்கு காரணமாக இருக்கலாம்.

இவ்வாறு நிதிஉதவி அரசாங்கத்திற்கு கிட்டிவிடாது தடுத்த சனாதிபதி தனது கூட்டாளிகளான ஜே.வி.பி. யினரைத் தூண்டிவிட்டு பல வேலைநிறுத்தங்கள், உண்ணாவிரதங்களை ஏற்பாடு செய்து அரசாங் கத்துக்கு நெருக்கடி கொடுத்து வந்தார். இப்பொழுது அவையும் ஓய்ந்து விட்டன.

எல்லாம் சுமுகமாகவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஏற்றப்படியே நடக்கிறது.

ஆனால் மக்கள் ஆதரவு..? அது குறித்த சந்தேகமே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தேர்தலை அறிவிப்பதற்கு காட்டிய தாமதத்தின் காரணமாகும். இப்பொழுதும் சில கருத்துக் கணிப்புகள்சாதக நிலையில் உள்ளதன் அடிப்படையிலேயே தேர்தலுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் தேர்தலில் வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்ற முற்றுமுழுதான நம்பிக்கை சனாதிபதி சந்திரிகாவுக்கு இருக்கும் என கூறிவிட முடியாது. ஆனால் சூழ்நிலை அவரை தேர்தலுக்குள் கொண்டு சென்று தள்ளியுள்ளது என்றே கூறலாம்.

வேலவன்

---

# புறக்கணிப்புகளால் பாதிக்கப்படும் தமிழ் பட்டதாரிகளின் வாழ்வு

**இலங்கையில்** வேலையற்று இருக்கும் பெரும் எண்ணிக்கையிலான பட்டதாரிகளின் தொகையில் யாழ். மாவட்டத்திலேயே கூடுதலான பட்டதாரிகளுக்கு வேலையில்லை என்ற தகவல் ஒன்று அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களிலிருந்து தமது கல்வியினை நிறைவுசெய்து வெளியேறும இந்தப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டமையினால் அவர்களின் வினைத் திறன் வீணடிக்கப்படுகிறது.

இதிலும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகின்றபோது மாவட்ட ரீதியிலான புறக்கணிப்பை சந்திக்கவேண்டிய நிலையும் உள்ளது.

அத்தோடு பட்டதாரிகளிற்கான வேலை வாய்ப்புகளின்போது அரசியல் கட்சிகளின் அழுத்தங்கள் காரணமாகவும் நியமனங்கள் பிற்போடப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு ஒழுங்கற்ற நிர்வாக அமைப்பின் காரணமாகவும் நியமனம் வழங்கப்படுகின்றபோது அதில் காட்டப்படும் அசமந்தங்கள் காரணமாகவும் வழங்கப்படுகின்ற நியமனத் தொகையில் அந்த நியமனங்களை ஏற்காதவர்களின் நியமனங்களிற்கு மாற்றீடாக எவரையும் நியமிக்காது விடப்படுகின்றது.

இவ்வாறு பட்டதாரிகளின் நியமனங்களில் ஏற்படுகின்ற அசமந்தங்களினால் பட்டதாரிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எடுத்துக்காட்டாக சென்ற ஆண்டு யாழ். மாவட்டத்தில் ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டதில் இருநூற்றுஎண்பத்துஒரு நியமனங்கள் ஏற்கப்படவில்லை. ஆனால் இந்த ஏற்கப்படாத நியமனங்களுக்கு பதிலீடாக நியமனம் வழங்கப்படாமை சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு பட்டதாரிகளின் நியமனங்களில் கவனம் செலுத்தவேண்டியவர்கள் கவனம் செலுத்தாமலும், தமிழ் பட்டதாரிகளின் நியமனங்களில் புறக்கணிப்பையும் தொடர்ந்தவண்ணமேயுள்ளனர்.

பெரும் துன்பதுயரங்களுக்கு மத்தியிலும் தமது கல்விக்கு பல்வேறு இடர்கள் ஏற்பட்ட போதிலும் அவ்வற்றை எதிர்கொண்டு தமது கல்வியினை நிறைவுசெய்து



வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் இந்த பட்டதாரிகளை கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

யாழ். மாவட்டத்தில் மாத்திரமன்று தமிழர் தாயகம் எங்கும் பரந்துவாழும் பட்டதாரிகளின் எதிர்கால நலனை கருத்திற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

நாட்டில் சிறந்த வினைத்திறனையும், இளமையான உழைப்பையும் பெறக்கூடிய இத்தகைய பெரும் சொத்து வீணடிக்கப்படுகிறது.

பொதுவாகவே பட்டதாரிகளாக வெளியேறியவர்கள் தமது கல்விக்கேற்ற, பொருத்தமற்ற தொழில்களைப் புரிவதாலும் வேலைக்கு ஏற்ற ஊதியத்தை பெறமுடியாமையினாலும் ஒரு மந்தபோக்கு நிலையை எதிர்கொண்டபடியே உள்ளனர் இந்த நிலை போக்கடிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

ஏனென்றால் பட்டதாரிகள் தமது கல்வியினை நிறைவு செய்து வெளியாகிக்கொண்டேபோகும் ஒரு நிலை தோன்றுவது பல அபாயங்களை ஏற்படுத்தக்கூடியது.

ஆகவே நிர்வாகங்களில் மீள் நியமனங்கள் வழங்கப்பட்டு தமது காலத்தை அரச சேவைகளில் நகர்த்திக்கொண்டிருப்பவர்களையும் கவனத்தில்கொண்டு புதிய இளைஞர் சமூகத்தை அதில் அமர்த்துவதன் மூலம் பல நல்ல விளைவுகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

கல்வியில் புறக்கணிப்பும், மொழியில் புறக்கணிப்பும் என தமிழ் மாணவ சமுதாயம் தனது கல்வியினை நிறைவுசெய்து புத்தி ஜீவிகளாக, சமுதாயத்தில் வெளி வந்தாலும் அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் முயல் கொம்பாகவே இருக்கிறது.

இந்த நிலையில் நாடு ஒரு தேர்தல் காலத்திற்குள் பல தேர்தல்களை சந்தித்து கோடிக்கணக்கான பணத்தை வீணே விரையமாக்கிக்கொண்டிருப்பதை தவிர்த்து நாட்டில் பல்வேறு வேலைவாய்ப்பிற்கான ஏது நிலைகளை ஏற்படுத்தி நாட்டில் பட்டதாரிகளின் அவல நிலைக்கு முடிவு கட்டவேண்டியது அவசியமாகும்.

இந்த நிலையில் கல்விக்காக தமது ஆயுளில் அதிக காலத்தை செலவு செய்து நிற்கும் இவர்கள் வேலை வாய்ப்பிற்காகவும் பல வருடங்களை செலவு செய்ய வேண்டுமா?

துறை சார்ந்த கல்வியினை பெற்று காத்திருக்கும் இத்தகையவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படுவது அவசியமாகும்.

இனியும் தொடர்ந்து மாவட்ட ரீதியாகவும், இன ரீதியாகவும் என எத்துறையிலும் புறக்கணிப்புகள் மேற்கொள்ளப்படுவது பல அசௌகரியங்களையே தோற்றுவிக்கும்.

நக்கீரர்

அனுபவம் இல்லா அறிவு, உதட்டளவில் அறிவே. - ஸர் ஃபிலிப் ஸிட்னி

# உயிர் கொல்லி, எமக்கொரு பிரச்சினையா?



இங்கே எங்கள் முற்றத் திற்கே எயிட்ஸ் வந்துவிட்டது இப்போ எங்கள் கதவுகளை தட்டுகிறது. எமதசமூகத்தையே அழிக்க முனையும் அதன் பாதிப்பிலிருந்து எமது தலைமுறையை பாதுகாக்கும் செயன் முறையின் ஒரு அங்கமாகவே இதனை அரங்கிடுகின்றோம் எனும் விஜயசேகரனின் அறிமுகக் குறிப்புடன் ஆரம்பமாகிறது கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தின் ''உயிர் கொல்லி''எனும் ஆற்றுகை.

எச்.ஐ.வி.எயிட்ஸ் இனப் பெருக்க சுகாதார விழிப்புணர்வு தொடர்பான இவ்வாற்றுகை ''ஒக்ஸ் பாம்'' நிறுவனஆதரவுடன் கிளிநொச்சி அழகியல்கலாமன்றத்தால் உருவாக்கப்பட்டது. முருகியல் வெளிப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட இவ்வாற்றுகையில் கிளிநொச்சி கல்விவலய வட்டக்கச்சி மகாவித்தியாலயம். அக்கரயான் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுடன் கிளிநொச்சி வலய ஆசிரியர்களும் இணைந்துள்ளன என்பது குறிப்பிடும் படியான விடயமாகும். கிளிநொச்சி சுகாதாரவைத் திய திணைக்களத்தின் பங்களிப்பும் இதன் உருவாக்கத்தில் உள்ளது.

“கெட்டகிருமிபரவுகிறது” எனும் குடுகுடுப்பைக்காரணின் கட்டியதுடன் தொடங்கும் இவ்வாற்றுகை ஒருபரபரப்புச் சூழலை ஏற்படுத்துகிறது. எயிட்ஸ் என்பதை சாதாரணமாக பொம்பிளைப்பிள்ளைகளை வைத்துக்கொண்டு கதைக்க முடியாத விடயமாக கருதுகிற சமூகம் எயிட்ஸ் இல்லாத இங்கை ஏன் உதுகளைக் கதைக்கிறியள் என மறுதளிக்கிறது.

7200பேர் இன்று இலங்கை முழுவதுமாக எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். என்பதில் இந்ததொற்றில் இரண்டாவது இடத்தில் யாழ்மாவட்டம் இருக்கிறது என்பது அதிர்ச்சியளிக்கும் ஒரு தகவாலாகிறது. கலாச்சார சீரழிவு எவ்வளவுதூரம் வேறோடியுள்ளது என்பதிற்கு இதுவும் ஒருசான்றாகும். எச்.ஐ.வி தொற்றின் பாதிப்புக்களை விஞ்ஞான பூர்வ மான விடயத்தை மிக தெளிவாகக் காட்சிப்படுத்தியதை மருத்துவப் பிரிவின் வைத்தியப் பயிலுநர்கள் வெகுவாகப் பாராட்டியிருந்தனர். சூரியனுக்கு கீழே எந்த விடயத்தையுமே அரங்கியல் வெளிப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பதற்கு இது ஓர் நல்ல உதாரணம் ரீடிக்கலம் B கலம், வெண்டுழியம் என கலைச்சொற்கள் மனதில் படிவதை உணரமுடிகிறது. நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல் போகும் நிலை மூலம் இறந்துவிடும் சாத்தியம் உணரவைக்கப்படுகிறது.

இரத்தம் ஏற்றுதல், முகச்சவரம் எனும் சம்பவங்கள் ஊடோயும் எமை அறியாது தொற்றும் வாய்ப்புடைய இந்த எச்.ஐ.வித்தொற்று எண்பது வீதமும், முறையற்ற பாலியல் தொடர்பு ஓரின சேர்க்கை என்பவற்றின் மூலமே பரவுகிறது என்பதை இந்த விபரணம் வெளிப்படுத்துகிறது. ஒருவனுக்கு ஒருத்தி எனும் சமூக விழுமியம் இங்கு வலியுறுத்தப் படுகின்றது.

மாறிய புதிய சூழலில் ஏ9 ஊடேயும் உட்புகும் வாய்ப்பு இப்போதுஅதிகரித்துவிட்டதை இந்திய புலப்பெயர்வின் பின் திரும்புபவர்களுடேயும், ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருபவர்களோடும் உள்ளே வரும் வாய்ப்புடைய இந்த எச்.ஐ.வி தொற்றுப் பற்றிய காட்சிப்படுத்தல்களில் நெருடல் ஏற்படுகிற போதும் மறுதலிக்க முடியாமல் இருக்கிறது என்பது உண்மையே.

பத்து தொடக்கம் இருபத்தி நாலு வயது வரையான இளையவர்களிடையேதான் இந்த தொற்று அதிகமாகக்காணப்டுகிறது என்பது புள்ளிவிபர வெளிப்பாடாகிறது. எயிட்ஸ் பற்றிய கருத்துக்கள் எம்மிடம் தவறான முறையில் கருத்துவாக்கம் பெற்றுள்ளதைப் போன்று எயிட்ஸ் தொற்றுக் குள்ளானவர்கள் மீதும் எமது அணுகு முறையும் தவறாகவே உள்ளது என்பதும் இவ்வாற்றுகையில் வெளிப்படத்தப்படவில்லை.

பயம்,வியப்பு,வெட்கம், ஆச்சரியம்.சிரிப்பு எனப்பல்வேறு உணர்வுகளைத் தோற்றுவிக்கும் இவ்வாற்றுகையின் இடையிடையே ஆசிரியர்களால் நடத்தப்படும் விவாதங்கள் கருத்துக்களை வலியுறுத்தும் பாங்கு நன்றாக அமைகிறது.

சமூகத்தில் இன்று பெண்கள் சுமக்கும் பல்வேறு சுமைகளூடேயும் எயிட்சும் ஆண்களைவிட பெண்களுக்கே அதிக சுமையை தரப் போகிறது என்பதை சித்தரித்த காட்சியமைப்பு நன்றாகவிருந்தது. “சாவிலும் அவமான மிஞ்சியதோ” என்ற பாடல் அதிக அழுத்தத்தைக் கொடுக்கிறது “ஊருராய்த் திரிகிறது எங்கட வேலை உள்ள செய்தி சொல்லுகிறது எங்கட வேலை நாடு நாடாய் நடந்து வாறோம் உங்களைத் தேடி” எனும் பாடல் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தின் செயற்பாட்டை வெளிக்கொணர்கிறது. ஏற்கெனவே பெண்கள் மீதான ஒடுக்குமுறையை சித்தரிக்கும் சிறப்பான ஆற்றுகை ஒன்றும் ஆசிரியர்கள் மூலம் வெளிக் கொணரப்பட்டது என்பது குறிப் பிடும் படியானது.

எயிட்ஸ் இன்று ஒரு சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, முழு உலகையுமே அச்சுறுத்துகின்ற ஒரு சமூகப்பிரச்சினையாகிவிட்டது.என்கிறார் “யுனிசெப்” இன் அலுவலர்களில் ஒருவரான Hiroko இவர் தன்னுடைய ஆபிரிக்க நாடு களின் அனுபவத்தில் கென்யா போன்ற நாடுகளின் குடித்தொகையின் 60% எச்.ஐ.வி தொற்றின் பாதிப்புக்குள்ளாகி இருப்பதை குறிப்பிட்டு இங்கு எதிர்காலத்தின் எச்.ஐ.வி ஒரு பிரச்சினையாகக்கூடாது என் பதை கருத்தில் கொண்டு விழிப் புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்கிறார்.

# முத்தையா முரளிதரன் முன்னாள் குறிப்புகள் சில

இன்றும் சிறில்ங்காவின் விளையாட்டு அணிகளில் தமிழர்கள் இடம் பிடிப்பது முயற் கொம்புதான் அந்த அளவிற்கு இனவாதம் விளையாட்டிலும் புரையோடிப் போயுள்ளது. முரளிதரனைப் போன்ற வீரர்களை உருவாக்குவதற்காகத் தான் கடந்தவருடம் யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் அகில இலங்கைப் போட்டிகளை நடத்த இருப்பதாக தெரிவித்து இருந்தார் விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்சன் பெனாண்டோ. இன்றும் புனரமைப்பு முற்றுப்பெறாத துரையப்பா அரங்கில் எப்படி விளையாட்டை நடத்தத் திட்டமிட்டிருந்தாரோ?

முரளிதரன் ஒரு புகழ் பெற்ற கிரிக்கெட் வீரன். அவருடைய தமிழ் மொழி உச்சரிப்பில் சிங்கள மொழியின் பாதிப்பு இருப்பதாகப் பலர் குறைபட்டுக்கொள்கிறர் கள். அவருடைய தகப்பனாரின் தகப்பன் அதாவது பேரன் தமிழ்நாட்டின் நாமக்கல் பகுதியின் செருக்காலைக் கிராமத்தில் இருந்து மஸ்கெலியாவின் தேயிலைத்தோட்டத்துக்கு 1930ம் ஆண்டு வந்தவர். இவருடைய பிள்ளைப் பிராயத்திலேயே நண்பர்களோடு டெனிஸ் பந்தில் கிரிக்கெட் ஆட ஆரம்பித்து விட்டார். கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் கல்விபயின்ற



இவர் பன்னிரண்டு வயதில் இருந்து பயிற்சியாளர் சுனில் பெர் ணான்டோவிடம் சுழல் பந்து வீசும் பயிற்சி பெற ஆரம்பித்து விட்ட இவர்.88 இல் 18வது வயதில் சிறிலங்கா கிரிக்கெட் அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட போதும், ஆரம்ப நாட்களில் அவ்வளவு பிரபல்யம் பெற்றிருக்கவில்லை.

தற்போது உலகையே பிரமிக்க வைக்கும் இவருடைய பந்து வீச்சு தன்னுடைய கடின உழைப்பா லேயே ஏற்பட்டது எனக் கூறும் இவர், காலை 2 மணித்தியாலமும், மாலை 2மணித்தியாலமுமாகத்தினமும் நான்கு மணித்தியாலங்கள் மேற் கொள்ளும் பயிற்சியே இதன் காரணம் எனத் தெரிவித் திருக்கிறார்.

ஒரு நாள் போட்டிக்கும், டெஸ்ற் போட்டிக்குமான பந்து வீச்சின் வித்தியாசங்கள் பற்றி இவர் குறிப்பிடும் போது, ஒரு நாள் போட்டியில் ரண் எடுக்க முடியாதபடி பந்து வீசவேண்டும் இதனால் ரண் எடுப்பதற்கு முயற்சித்து தவறுவிட்டு பட்ஸ்மன் ஆட்டமிழப்பார். டெஸ்ட் போட்டியில் பட்ஸ் மன்னின் பலவீனங்களை புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் பந்து வீசவேண்டும் என்கிறார்.

# எங்கள் பாரம்பரிய விளையாட்டு எப்போ சர்வதேச அரங்கில் நுழையும்...?



தமிழில் “சடுகுடு” எனத் தோண்றிய ஆட்டம் தென்னிந்தியாவில் இருந்து ஆந்திராவுக்குள் .“குடுகுடு” என நுழைந்து கல்கத்தாவில் “கிட்கிட்” வாகி மகாரஷ்டிரத்தில்“பகட பகட”வாகி வட இந்தியாவுள் புகுந்து “கபடி கபடி” ஆகியது. அங்கிருந்து ஆசிய அரங்கின் ஊடே சர்வதேசத்தை எட்டிவிட்டது. ஆண்களும் பெண்களுமாக அடிதடிரகளை கோலத்தோடு படுசுவாரஷ்யமாக ஆடப்படும் ஆட்டமாக இன்று மிளிர்கிறது இலங்கையிலும் இப்போ பிரபலமான ஆட்டமான இது “சடுகுடு”வை இழந்து தமிழர் தாயகத்திலும் மீண்டும் இடம் பிடிக்கும் ஒரு ஆட்டமாக சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. அடிப்படையில் இது ஒரு தமிழர்பாரம்பரிய விளையாட்டுத்தான் எனக்கற்பூரம் அணைத்துச் சத்தியம் பண்ணி னாலும் எம்மவரில். பலர் நம்பத் தயாரில்லை என்பது சற்று மனவருத்தம் தரும் விடயமே. எங்கள் பாரம்பரிய கலை மற்றும் விளையாட்டுக்கள் செம்மை வடிவம் பெறுவதற்கு, சமூக அங் கீகாரம் பெறுவதற்கு வேறிடம்தான் நாடிப்போக வேண்டியுள்ளது. தென் தமிழீழத்தின் பார்த்திருப்பு (இன்றையபட்டிருப்பு)லிருந்து கண்டிய மன்னனால் எடுத்துச் செல்லப்பட்ட செம்மை வடிவம் பெற்ற கண்டிய நடனம் அடிப்படையில் தமிழர்களின் பறை மேளக்கூத்தேயாகும்.

எமது பாரம்பரியத்தில் இன்னுமொரு சிறப்பான விளையாட்டு கிளித்தட்டு அல்லது தாச்சி எனப்படும் ஆட்டமாகும். நெல் மணிகள் முற்றி கதிராகும் போது கிளிகள் படையாய் களமிறங்கும் காவற்பணியில் பெரும்பாலும் முதியவர்களும், சிறுவர்களுமே ஈடுபடுவர். இந்தச் செயற்பாடு அருவி வெட்டின் பிற்பாடும் பரந்தவயல் வெளியில் ஆடப்படும் ஒரு ஆட்டமாக மாறிவிட்டது. இப்போது ஆடுகளத்தில் உருவம்மாறி ஆட்டத்திற்கான விதிகள் உருவாகி விட்டன. எனினும் அடிப் படையில் சில விடயங்கள் ஒத்திருக்க ஆட்ட முறையில் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபாடு காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் இதற்கென ஒரு சங்கம் இப்போது செயற்படுவதுடன், தொடர் போட்டிகளும் நடத்தப்படுகிறது.

கிளிநொச்சியில் அமரர் பொன் சபாபதியின் காலத்தில் பாடசாலைகளுக்கிடையே அறிமுகப் படுத்தப்பட்ட இந்த ஆட்டத்திற்கென பொதுமைப் படுத்தப்பட்ட விதிகளின் கோவை ஒன்று உருவாக் கப்பட்டது. இப்போது பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படாத இப்போட்டி கடந்த வருடம் நடைபெற்ற மகளிர் படையணிகளுக் கிடையேயான போட்டியூடாக மூன்றாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவில் இடம் பிடித்துக்கொண்டது. தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களுக் கிடையேயான போட்டியாக செழுமை பெறும் இவ்வாட்டம் எதிர் காலத்தில் வடகிழக்கு மாகாணப் போட்டிகளில் பாடசாலைகளுக்கும், கழகங்களுக்கும் என விஸ்தரிக் கப்படும் போதே செம்மை மேலும் பெற்று சர்வதேச அரங்கினுள் நுழையும் வாய்ப்பைப் பெறும். உடலியக்கத்திறனை மேம்படுத் தும் இவ்வாட்டம் பல விளை யாட்டுக்களின் திறனை விருத்தி செய்யும் ஆட்டமாக இன்று விளை யாட்டுத்துறை நிபுனர்களினால் சிபார்சு செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தனக்குப் புரியாததை எப்பொழுதுமே போற்றுவான், அறிவிலி. - ஸீஸர் லொம்ப் ரோஸோ

# புதிய வடிவிலான வெளிநாட்டு உதவி

வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெறுவோர் தமக்கும் தமது நாட்டிற்கும் உழைக்கின்றனர். அவர்கள் அனுப்பும் பணம் நாட்டின் அந்நிய நாணயச் சேமிப்பாக மாறுகின்றது. வெளிநாடுகளில் பணியாற்றுவோர் அனுப்பும் பணத்தைப் பொருளாதார நிபுணர்கள் 'றெமிற்றன்ஸ்' (REMITTANCES) என்பார்



கள் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் மிகவும் நம்பிக்கைக்குரிய உள்வரும் பணமாக இவ்வகை றெமிற்றன்ஸ் கருதப்படுகின்றது. தனியொரு நாடோ நபரோ இப் பணத்தை அனுப்பவில்லை. பலதரப்பட்ட உலகளாவிய மக்கள் தமது தாயகத்திற்கு விளம்பரமின்றி பல்வகை அந்நிய நாணயங்களை அனுப்புகின்றனர். சிறுதுளி பெரு வெள்ளம் என்பதற்கு அமைவாக இப்பணம் தாயகத்தின் அபிவிருத்திக்கு உறுதுணையாக அமைகிறது.

சில பொருளாதார நிபுணர்களின் பார்வையில் இவ்வாறு வரும் பணம் புதிய ரக வெளிநாட்டு நிதி உதவியாக இடம்பெறுகின்றது. உத்தியோக பூர்வ அடிப்படையில் சில வளர்ந்து வரும் நாடுகள் பெறும் வெளிநாட்டு நிதி உதவிகளிலும் பார்க்க தனி மனிதர்கள் தாயகம் அனுப்பும் பணத்தின் கூட்டுத் தொகை கூடுதலாக இருக்கின்றது. வறிய நாடுகளின் மொத்த உள்நாட்டு வருமானத்தில் கணிசமானளவு விகிதமாக உழைப்போர் அனுப்பும் நிதி



அமைகின்றது. சில வறிய நாடுகளில் உள்வரும் உழைப்பாளர் நிதி மொத்தத் தேசிய வருமானத்தில் 15-20 விகிதமாக இருப்பதை ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர்.

அமெரிக்காவின் எல்லை நாடான மெக்சிக்கோவின் பிரசைகளில் 4 மில்லியன் வரையிலானோர் அமெரிக்காவில் விவசாயக் கூலியாகவும், சிற்றூழியர்களாகவும் பணியாற்றுகின்றனர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அமெரிக்காவிற்குள் திருட்டுத் தனமாக நுழைந்தவர்கள் எல்லையைக் காவல் செய்யும் அமெரிக்காவின் நவீன பொலிஸ் படைக்குத் தெரியாமல் நுழைவதை ஒரு கலையாக மெக்சிக்கோ நாட்டவர் பயில்கின்றனர். அமெரிக்காவின் தென் மாநிலங்களில் புதிதாக வரும் தொழிலாளர்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது பல்லாயிரம் ஏக்கர் நிலப்பரப்பாகக் கொண்ட பண்ணைகளில் இவர்களை மிகவும் எளிதாக மறைத்து வைத்து வேலை வாங்குவார்கள் மிகவும் குறைந்த ஊதியம் நல்ல உணவும் தங்க இடமும் கொடுப்பார்கள்.

ஒருவருடம் செல்வதற்கு முன் இவர்கள் பிற இடங்களுக்கு கூடுதல் ஊதியம் தேடிச் செல்வார்கள். அதற்கிடையில் பண்ணையர்களுக்கும் புதிய ஆட்கள் கிடைத்து விடுவர். மெக்சிக்கோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள எல்லையின் ஒரு பகுதியில் றியோ கிரான்டே (RIOGRANDE) என்ற ஆழம் குறைந்த நதி ஓடுகின்றது. இது பாலைவனம் மற்றும் பள்ளத்தாக்கு ஊடாக நெடுகிலும் ஆழமற்றுச் செல்வதால் இதனூடாக நீந்திக் கடப்பது சுலபம் தமது ஆடைகளைத் தலை மேல் கட்டிக் கொண்டு நீந்திக் கடக்கும் மெக்சிக்கோ நாட்டவர்களை 'முதுகு நனைந்தவர்கள்' (WETBACKS) என்று கேலியாகக் குறிப்பிடுவார்கள். இன்று மெக்சிக்கோ நாட்டவர்களை அமெரிக்கத் தென் மாநில வாசிகள் பெற்பாக்ஸ் அதாவது திருட்டுத் தனமாக நீந்தி வந்தவர்கள் என்று தான் அழைப்பார்கள்.

2003ல் அமெரிக்காவில் பணியாற்றும் எல்லாவகை மெக்சிக்கோ வாசிகளும் தாயகம் அனுப்பிய மொத்த நிதித் தொகை 14.5 பில்லியன் டாலர்கள் என்று மதிப்பிடப்படுகின்றது. எல்லா வகை என்ற சொல்லில் சட்டபூர்வமாக தங்கியிருப்போர் மற்றும் அல்லாதோர் அடங்குவர். 1993-1994 ல் அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா ஆகிய மூன்றும் இணைந்து வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை உருவாக்கினர். இதன் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகள் யாவும் இருவகை அனுகூலங்களைப் பெறுகின்றன. அமெரிக்கா,கனடா ஆகியவை மெக்சிக்கோவில் சந்தை வாய்ப்பையும் மெக்சிக்கோ,கனடா அமெரிக்காவில் தொழில் வாய்ப்பையும் பெறுகின்றன. ஆனாலும் நாப்ரா (NAFTA) எனப்படும்.இந்த வர்த்தக உடன்படிக்கை மூலம் பெறும வருமானத்தை விட அமெரிக்காவில் பணியாற்றும் மெக்சிக்கர்கள் அனுப்பும் தொகை பன்மடங்கு கூடுதலாக இருக்கின்றது.

அமெரிக்காவின் மிகப் பெரிய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக மெக்சிக்கோ இடம் பெறுகின்றது. இருப்பினும் மெக்சிக்கோவின் வெளியுறவுக் கொள்கை வர்த்தகத்தைப் பெருக்குவதிலும். பார்க்கத் தனது பிரசைகள் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதிலேயே குறிப்பாக இருக்கின்றது. வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பு தேடிச் செல்வதற்கான ஊக்குவிப்புக்களை வழங்கும் வெளியுறவுக் கொள்கையைப் பல ஆசிய நாடுகளும் கொண்டிருக்கின்றன. சொந்த நாட்டில் பணியாளர் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் பரவாயில்லை இயன்றளவு பெருந்தொகைப் பணியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் ஆசிய நாடுகள் குறிப்பாக இருக்கின்றன. அவர்கள் அனுப்பும் பணம் தான் முக்கியம்.

பிலிப்பீன்சும் சிறிலங்காவும் தமது நாட்டுப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றன. சிறிலங்காவின் பணிப்பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றனர். இவர்கள் அந்த நாடுகளில் அனுபவிக்கும் சித்திரவதைகள் சொல்லில் வடிக்க முடியாதவை. சித்திரவதைகள் பாலியல் முறைகேடுகளாக அமைகின்றன சில பெண்கள் கொல்லப்படுகின்றனர் அல்லது தாமாகவே தமது உயிரை மாய்கின்றனர். சென்ற வருடம் 40 வரையிலான பணிப்பெண்களின் சடலங்கள் சிறிலங்கா வந்துள்ளன. சில சடலங்களின் முக்கிய உள்ளுறுப்புக்கள் முன் கூட்டியே அகற்றப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

'பணிப்பெண்நாடு' (LAND OF HOUSEMAIDS) என்று அப்பெயர் சிறிலங்காவிற்கு உண்டு அதுபற்றி அந்த நாட்டின் அரசு அலட்டிக் கொள்வதில்லை இந்த அவலைப் பெண்கள் எத்தனை துயர்ப்பட்டாலும் அரசு அவர்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புவதிலேயே குறியாகவுள்ளது. கொழும்பின் புறநகர்ப் பகுதியில் பணிப் பெண்களுக்கு பயிற்சி வழங்கும் கல்லூரியை அரசு நடத்துகின்றது. இங்கு அடிப்படை ஆங்கில, அரபு மொழிப் பயிற்சியும், மின் அடுப்புகள் போன்ற சமையல் உபகரணங்களை இயக்கும் பயிற்சியும், மேசை அலங்காரம் தொட்டு பரிமாறும் முறைகள் பற்றிய பயிற்சியும் வழங்கப்படுகின்றன. அதன்பின் பலிக்கடாக்கள் போல் அந்நிய நாட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். பெண்களைப் போதப் பொருளாக நினைக்கும் அரபு நாட்டவர்கள் இவர்கள் நாயிலும் கேவலமாக நடத்துகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள

**அன்பரசு**

சிறிலங்காத் தூதரங்கள் பணிப் பெண்களின் அவலம் பற்றிக் கவலைப் படுவதில்லை என்பது இன்னுமோர் வருத்தமான செய்தி.

பாரதியார் பாடிய 'நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்' என்ற வரி சற்றுப் பொருத்தமற்று இவ்விடத்தில் நினைவுக்கு வருகின்றது. சிறிலங்கா அரசு தனது நாட்டுப் பணிப்பெண்களுக்குச் செய்யும் உதவிகளில் மிகவும் கேவலமானது பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து கர்ப்பிணிகளாக வரும் பணிப் பெண்கள் தங்கள் கிராமங்களுக்கு அந்த நிலையில் செல்ல அஞ்சுகின்றனர். இதற்காக அரசு தனது செலவில் மகப்பேற்று நிலைகளை மிகவும் இரகசியமாக நடத்துகின்றது மகப்பேறு முடிந்து உடல் தேறியபின் வீடு செல்ல முடியும். குழந்தையை அநாதைக்குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்பிவிடுவார்கள் இராணுவத்தைவிட்டு ஓடியோர் பிரச்சினைக்கு அடுத்த இடத்தில் பணிப் பெண்கள் விவகாரம் இடம் பெறுகின்றது.



பிலிப்பீன்ஸ் தீவும் பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றது. இவர்களோடு பாலியல் தொழிலாளர்களையும் இந்த நாடு ஏற்றுமதி செய்கின்றது இது சிறிலங்கா பணிப் பெண்களுக்கு இல்லாதவொரு அனுகூலம் இவர்களுக்கு உண்டு. இவர்கள் ஆங்கில அறிவுள்ளவர்கள், அத்தோடு கிறிஸ்தவ மதத்தினர், மலேசியா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு நாடுகளிலும், மேற்கு ஐரோப்பா, அமெரிக்காவிலும், பிலிப்பீன்ஸ் வீட்டுப்பணியாளர்கள் இருபாலாரும் தொழில் புரிகின்றனர்.

இந்தியாவின் புலம் பெயர்ந்தோர் 135 நாட்களில் 20 மில்லியனிலும் கூடுதலான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். தொழில் நுட்பக் கல்வி, வ தகம் போன்ற காரணங்களால் அநேகம் இந்தியர்கள் வசதியாக வாழ்கின்றனர். உலகில் மிகக் கூடுதலான 'றெமிற்றன்ஸ்' பெறும் நாடாக இந்தியா இடம் பெறுகின்றது. 1991 ல் உலக வங்கி நடத்திய ஆய்வுப்படி பிறநாடுகளில் பணியாற்றும் இந்தியர்கள் 10 பில்லியன் டாலர்களைத் தாயகம் அனுப்பியுள்ளனர். இரண்டாம் இடத்தில் மெக்சிக்கோவும் மூன்றாம் இடத்தில் பிலிப்பீன்சும் இடம் பெறுகின்றன வெளிநாட்டு குடியுரிமை பெற்றுள்ள இந்தியர்களின் பணத்தை இந்தியாவுக்கு வரச் செய்வதற்கு இரட்டை குடியுரிமைச் சலுகையை (DUAL CITIZEN SHIP) இந்தியா வழங்குகின்றது. மிகவும் கூடுதலாக வெளிநாடு செல்லும் இந்தியர்களில் கேரளா மாநிலத்தவர் முதலிடம் வகிக்கின்றனர். வெளி



நாடுகளில் குடியுரிமை பெற்றதோடு செல்வச் செழிப்புடன் வாழும் இந்தியர்களில் குஜராத் மாநிலத்தவர்கள் முதலாம் இடத்தில் இருக்கின்றனர். தீவிர இந்துக்களான குஜராத்தினர்கள் பி.ஜே.பிகட்சிக்கு நிதி உதவி வழங்குவதை தமது தேசியக் கடமையாகக் கொண்டுள்ளனர்.

அரபு மக்களுக்கும் கேரளாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. டில்லிக்கு முஸ்லிம்கள் வருமுன்பே அரபுகள் கேரளா வந்துள்ளனர். கேரளா மக்கள் தலைமுறை தலைமுறையாக மத்திய கிழக்கில் பணியாற்றுகின்றனர். வெளிநாடுகளில் பணியாற்றுவோர் நலனைக் கவனிப்பதற்காக கேரளா அரசு ஒரு அமைச்சகத்தை நிறுவியுள்ளது . பிலிப்பீன்ஸ், இந்தியா, மெக்சிக்கோ ஆகிய நாடுகள் இலாப நோக்கில் தொழிலாளர் நலனில் நிர்வாக ரீதியாக அக்கறை காட்டுகின்றன பிலிப்பீன்ஸ், ஜோர்தான் போன்ற நாடுகளில் எடுக்கப்படும் பொருளாதாரம் சம்பந்தமாக மாற்றங்கள் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் நலனுக்குப் பொருத்தமானதாகச் செய்யப்படுகின்றன.

பெருமளவு தொழிலாளர்கள் வெளிநாடு செல்வதால் வரும் நன்மை தீமை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் இப்போது பரவலாக நடைபெறுகின்றன. மூன்றாம் உலகத் தொழிலாளர்கள் பெருமளவிற் செல்லும் அமெரிக்கா மேற்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு போன்றவை எதிர் நோக்கும் பிரச்சினைகளில் திருட்டுத் தனமாக நுழைவோர் மிகப் பெரிய தலையிடியாக அமைகின்றன. தொழிலாளர்கள் தாயகத்தில் ஒரு பாரிய வெற்றிடம் தோன்றுகின்றது. பல சாலிகளும் மூளை உள்ளோரும் வெளியேறுவதால் நாடு நலிவுறுகின்றது. இவர்கள் திரும்பி வராத பட்சத்தில் நலிவு நிரந்தரமாகின்றது.

மேற்கு ஐரோப்பாவில் பிறப்பு விகிதாசாரம் குறைவதால் 2025 ல் 159 மில்லியன் வெளிநாட்டுப் பணிப்பெண்களின் தேவையை மேற்கு ஐரோப்பிய நாடுகள் எதிர்நோக்கலாம் என்று உலக வங்கி கூறுகின்றது. மூன்றாம் உலகில் இருந்து இவ்வளவு பெரும் தொகையில் தொழிலாளர்கள் வெளியேறும் போது வெற்றிடம் ஏற்படும் என்பது உறுதி இப்போது பிரித்தானியாவில் 300,000 திருட்டுத்தனமாக நுளைந்தவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் பற்றி உள்நாட்டு அமைச்சர் டேவிற் பிளன்கெற் என்ன சொன்னார் தெரியுமா? " எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கத் தயங்கமாட்டோம்" எமது தொழிலாளர்கள் யாருடைய நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகின்றார்கள் என்பது தான் முக்கியமான கேள்வி.

# காதல் என்பது...

சில அறிமுகக் குறிப்புக்கள் காதல் என்றால் அன்பு,பாசம், நேசம் என பொருள் சொல்வாரும் காதல் புனிதமானது தெய்வீகமானது மனித விருத்திக்கும் சமத்துவ சமூகம் அமையவும் முக்கிய காரணி என அதற்கு வியாக்கினம் சொல்வாரும் உளர். எது எப்படியோ காதல் உலக தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மூலமாக அமைகிறது என்பதில் இரு கருத்திற்கு இடமில்லை காதல் பற்றிய உளவியல் ரீதியானதும் அறிவியல் ரீதியானதுமான சில அறிமுகக் குறிப்புக்களை வழங்குவதே கட்டுரைக்கு நோக்கம்.

காதலென்பது உடலோடு சம்பந்தப்பட்டதா? உள்ளத்தோடு சம்பந்தப்பட்டதா? அல்லது இவையிரண்டோடும் சம்பந்தப்பட்டதா? என்ற ஐயமற்ற முடிவுக்கு முதலில் வந்தாக வேண்டும். காதலில் உடல் சம்பந்தப் படவில்லை எனக் கொண்டால் காதலிக்க ஒருநாய் போதும். உள்ளம் மட்டுமே போதுமானது எனக் கொள்ளின் இந்த உதாரணம் பொருத்தமானதே உன் உள்ளத்தையே உயிருக்குயிராய் காதலிப்பதாக காதலர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொள்வதை கேட்டிருக்கக் கூடும் அல்லது நீங்களே சொல்லி இருக்கவும் கூடும். இது முற்று முழுதான உண்மையல்ல என்பது உளவியல் அறிஞர்களின் முடிவு.

காதலென்பது உடலோடு சம்பந்தப்பட்டது என ஒரு வசதிக்காக வரையறுத்துக் கொள்ளின் காதலிப்பதற்கு ஒரு விலைமகள் போதும் என்கிறார் கவிஞர் வைரமுத்து. ஆகவே காதல் தனியே உடலோடு மட்டுமோ உள்ளத்தோடு மட்டுமோ



சம்பந்தப் படுத்த முடியாதது. உடலோடும், உள்ளத்தோடும் பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டதே காதல். மேலும் காதல் தனியே அன்பை மட்டும் கொண்டதன்று. அது காமத்தையும் தன்னகத்தே கொண்டதாகும். காமமற்ற காதல் என சிலர் கூறுவது வெறும் ஏமாற்றே. தங்களையும் தங்கள் காதலையும் புனிதப் படுத்துவதாக நினைத்து தங்களையே ஏமாற்றிக் கொள்ளும் நடைமுறையே இது. எனவே அன்பும், காமமும் கலந்த கலவையே காதல் என்ற முடிவுக்கு வருகிறார்கள் அறிஞர்கள். இதில் சிலர் முரண்படக்கூடும். எனினும் அறிஞர்களின் கூற்றும் முற்றும் புறந்தள்ளக் கூடியவையல்ல என்பது தெளிவு.

நாம் நாளாந்தம் அனேகமான இளம் ஆண்களை/ பெண்களை சந்திக்கின்றோம். ஆனால் அவர்களில யாரோ ஒருவரிடமே காதல் பிறக்கின்றது. ஆயிரத்தில் ஒருவரிலேயே எங்கள் மனம் லயித்து விடுகிறது. மனம் கொள்ளை போகிறது. சிலருடன் எவ்வளவு நெருங்கிப் பழகினும் அவர்கள் மீது எள்ளளவும் காதல் பிறப்பதேயில்லை சில சமயங்களில் நெருங்கிப் பழகி நீண்ட கால உறவுகள் புரிந்து கொள்ளல் வாயிலாக காதல் பிறப்பதுமுண்டு. ஆனாலும் திடீரென சந்திக்கும் ஒருவரை மனம் விரும்பத் தொடங்கி விடுகிறது. சிலருக்கு நாம் விரும்பும் நபரிடம் பரிச்சயமோ புரிதலோ இல்லாமலே இவ்வதிசயம் நிகழ்கிறது இது எவ்வாறு சாத்தியமானது?

இத்தகைய விந்தையினை உளவியலாளர்கள் மனச்சித்திரம் ஒத்துப் போதலின் விளைவு என்கின்றனர். தன்னுடைய வாழ்க்கைத் துணை எப்படி இருக்க வேண்டும் என்ற மனதளவிலுள்ள படிமமே மனச்சித்திரம் என்கின்றனர் அவர்கள். ஆண் எனின் தன் தாயின் உடல் தோற்றம், மனோபாவம் என்பவற்றை ஒத்த வாழ்க்கைத் துணையையே மனச்சித்திரத்தில் கொண்டவனாக விளங்குகிறான். இதேபோல் பெண்ணும் தன் தந்தையைப் போன்ற தோற்றம், மனோபாவம் கொண்ட ஒரு ஆடவரையே தனக்குள் மனச்சித்திரமாக உருவாக்கிக் கொள்கிறாள். தம்முடைய மனச்சித்திரத்தில் உள்ள படிமத்திற்கு ஒத்த இயைபு கொண்ட ஒருவரை நாம் காண நேரும்போது எங்களை அறியாமலே அவர் மீது காதல் பிறக்கின்றது. மனங்கொள்ளை போகிறது என்கிறார்கள் உளவியலறிஞர்கள். மேலும் அவர்கள் இம் மனச்சித்திரமானது ஒருவருடைய (ஆண்/பெண்) ஏழு அல்லது எட்டு வயதில் உருவாகி நிலைபெறுவதாகவும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறாயின் வளர்ந்த பின் காதல் உருவாவதெல்லாம் இம்மனச்சித்திரத்தின் அடிப்படையிலேயே என்பதெமக்கு ஆச்சரியமாக இல்லையா? சிந்தனைச் சக்தியும் நினைவாற்றலும் மிகுந்து காணப்படும் பிள்ளைப் பருவத்தின் நடுநிலையாகவமையும் எட்டாம் ஆண்டினை(வயதினை) ஆர்வம் மிக்க ஆண்டு (EAGER YEAR) என உளவியலாளர்கள் வர்ணிக்கின்றனர். துருதுருவென ஏதாவது செய்யத் துடிக்கும் ஏழாம், எட்டாம் வயதிலேயே காதல் பற்றியதான மனச்சித்திரமும் உருவாகி நிலைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆண் குழந்தை தாயிடமும், பெண் குழந்தை தன் தந்தையிடமும் கொள்ளும் பேரன்பிற்கு பாலூக்கமே காரணமெனக் கூறும் உளவியலாளர்கள், மனவெழுச்சி சிக்கல்களுக்கும் இதுவே அடிப்படையாக அமைகின்றது. எனவும் குறிப்பிடுகின்றனர்.

ஒத்த மனச்சித்திரம் உள்ளவர்கள் சிந்தித்து உருவாகும் காதல் ஈர்ப்பும் வலிமையும் உடையதாக விளங்குவதோடு திருமணத்தின் பின்னும் வாழ்வு இன்பமயமாக விளங்க காரணமாயுள்ளது. இம் மனச்சித்திரம் ஆழமான அன்பையும், புரிந்துணர்வையும் கொண்டமைந்ததாகும். வதிவிலக்காக ஒத்த மனச்சித்திரமற்றவர்களும் காதலர்களாக

**தருமை வதனன்**

மாறுவதுண்டு. அழகு, பணம், பதவி, படிப்பு என்பவற்றில் ஒன்றையோ பலவற்றையோ அடிப்படையாகக் கொண்டு காதல் பிறப்பதுண்டு. இத்தகைய காதலின் ஆயுள் அற்பமானது. அதனையும் மிஞ்சி நிறைவேறினும் திருமணத்தின் பின் அல்லல்படுகிறது என்பது மனச்சித்திரம் பற்றி குறிப்பிட்டவர்களின் முடிவு.

உளவியலாளர்களின் மனச்சித்திரம் பற்றிய கூற்றுக்கள் சில ஐயங்களை மனநிலத்தில் விதைக்கின்றன. அதாவது பெற்றோர் அவலட்சமான தோற்றம், சீரற்ற மனோபாவங்களைக் கொண்டவர்களாகி காணப்படின் தம்பெற்றோர்களைப் போல மனச்சித்திரங்களை உருவாக்கி அத்தகைய மனச்சித்திரம் உள்ளவர்களை தமக்கு வாழ்க்கைத் துணையாக அமைய வேண்டும் என பிள்ளைகள் விரும்புவாரா? என்ற வினாவுக்கு உளவியலறிஞர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. காதல் பற்றிய மனச்சித்திரம் சிறு வயதில் ஏற்படினும் சிறுவயதிலேயே மேற்படி காரணங்களுக்காக பெற்றோரை வெறுக்கின்ற பிள்ளைகளை நடைமுறையில் காண்கின்றோம். இந்நிலையிலுள்ள பிள்ளைகளின் மனச்சித்திரம் எதிர்மறையாக அமைய மாட்டாதா என்பதற்கும் விடைதேட வேண்டும்.

மனிதனின் நடத்தைக் கோலங்கள் பற்றிய பல்வேறு உளவியல் கோட்பாடுகளில் மக்டூல் எனும் உளவியலறிஞர் வெளியிட்ட இயல்பூக்க கொள்கையும் முக்கியமானதொன்றாகும். மனிதனின் நடத்தைக் கோலங்களை பதினான்கு இயல்பூக்கங்களாக பாகுபடுத்தும் மக்டூல், அதனுள் ஒன்றாக பாலூக்கத்தினை குறிப்பிடுகின்றார். பிள்ளையின் ஆரம்ப பருவங்களில் மனதில் அடங்கலாக காணப்படும் பாலூக்கம் குமரப்பருவத்தில் அசுரவேகத்தில் மேலெழுகிறது எனக்குறிப்பிடுமவர் அதனை நல்லாற்றுப்படுத்துவதன் மூலம் பெரும் பயனை ஈட்டிக்கொள்ள முடியும் என்கிறார். குழந்தைப் பருவத்தில் பிறர் குழந்தையை அன்போடு தடவுதல், தழுவுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது குழந்தை இன்பம் துய்க்கின்றது. குழந்தையின் இவ் இன்பத்திற்கு அடிப்படையாக அமைவது பாலியல் உணர்வே என சிக்மண்ட் பிராய்ட் எனும் உளவியலாளர் குறிப்பிடுகிறார். இதன்படி பாலூக்கம் குழந்தைப்பருவத்தில் அரைத்தூக்க நிலையிலிருந்து குமரப்பருவத்தில் விழித்தெழுந்து தன் செயற்பாடுகளை தொடங்கிவிடுகிறது எனலாம்.

பாலியல் அடிப்படையில் எழும் காதல் உளவியல் ரீதியில் ஒரு ஊக்கலாகும். காதல், அதன் வயப்பட்டவரின் நடத்தைக் கோலங்களை பெரிதும் மாற்றியமைக்கிறது. அத்துடன் அவர்களிடையே மறைந்துள்ள திறமைகளை/ ஆற்றல்களை வெளிக்கொணரவும் ஏற்கெனவேயுள்ளவற்றை செப்பனிடவும், துரிதப்படுத்தவும் காதல் துணை புரிகிறது.



எடுத்துக்காட்டாக காதல் வயப்பட்டவர் ஒரு ஓவியர் அல்லது கவிஞர் எனில்காதலி/காதலன் ஓவியத்தை அல்லது கவிதையை அவளுக்காக/ அவனுக்காக படைக்க மிகுந்த கரிசனையையும் கடின உழைப்பையும் வழங்கி தரமான படைப்பைச் செய்துதர முயல்கிறான்(ள்) இதனால் அவன்/அவள் ஆற்றல் அசுர வேகத்தில் பாய்ச்சலைப் பெறுகிறது. காதலர்கள் தங்களுக்குள் ஒருவரை



யொருவர் கற்றலைத் தூண்டி விடவும் முடியும். இதனால் பெரும் பயன்பெறவும் இயலும். மாறாக பலர் காதலுக்குள்ளேயே மூழ்கிவிடுவதால் கல்வியையும், காலத்தையும் வீணாக்கி விடுகின்றனர். சில சமயங்களில் துரதிஷ்டவசமாக தங்களின் காதலையும் இழந்து விடுகின்றனர் அத்துடன் கலை இலக்கியங்கள் நெருங்கிய தொடர்பினை காதலோடு கொண்டுள்ளன என்கிறது மனோவியல் காதல் அரும்பு பருவத்தினருக்கு கலை இலங்கியங்கள் (இசை, ஓவியம், கவிதை)மூலம் கற்றலைத் தூண்டி விட முயலின் மிகுந்த பயன்தரும். மேலும் பாலியல் தூண்டல்களை தூய்மைப்படுத்த இவை உதவுகின்றன. காதல் வெற்றியடையும் போதும் தோல்வி அடையும் போதும் மனிதனின் ஆற்றல்கள் வெகுவாக வளர்கின்றன. எடுத்துக் காட்டாக உலக அதிசயங்களில் தாஜ்மகால் கட்டப்பட்டமையும், தையல் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமையும் காதலியின் மீது காதலன் கொண்ட அன்பின் வெளிப்பாட்டால் உருவான அரிய பொக்கிசங்களாகும் இதனைப்போலவே இலக்கியங்களும் தமிழில் மட்டுமன்றி ஆங்கில, பிரெஞ்சு மொழிகளில் உலக தரமான இலக்கியங்கள் உருவாக காதலே மூலகாரணமாயுள்ளன இத்தகைய மானிட ஆற்றலை வளர்ப்பதாக கருதப்படும் இயல்பூக்க கொள்கை ஏற்புடையதன்று என அக்கொள்கையினை அமெரிக்க உளவியலாளர்கள் நிராகரித்து வந்துள்ளனர். எனினும் அண்மைக் காலங்களில் உளவியல் ஆய்வுக் குறிப்புக்களை வெளியிட்ட அமெரிக்க உளவியலறிஞர்கள் இயல்பூக்க கொள்கையை ஒப்புக்கொள்கின்றனர். ஊக்கல் கொள்கையை முற்றாக மறுதலிக்க முடியாமை இதிலிருந்து தெளிவாகின்றது.

மனிதனின் நடத்தைக் கோலங்கள் அனைத்திற்கும் பாலியலே அடிப்படையாக அமைவதாக பிறிதொரு உளவியலாய்வு குறிப்பிடுகின்றது. இவ்வகையில் ஒரு மனிதனுக்கு பாலியலில் ஏற்படும் சீரான அல்லது சீரற்ற தன்மை அவனது முழுவாழ்வின் போக்கையும் தீர்மானிக்கும் சக்தியாக மிளிர்கிறது எனலாம். பல்வேறு உளவியல் கோட்பாடுகளும் பாலியலுடன் தொடர்பான காதலே ஒருவனின் நடத்தையை தீர்மானிக்கின்றன என்கின்றன. எனவே ஒவ்வொரு பருவத்திலும் பாலூக்கத்தினை அடிப்படையான பிள்ளையின் வெளிப்பாடுகளை அறிந்து அவற்றை பெரியவர்கள் செப்பனிடுவதன் மூலம் பிள்ளையின் குமரப்பருவத்தை வளமானதாக்க முடியும். அவர்களின் நடத்தைகளை செழுமைப்படுத்த முடியும். நாம் எத்தனைபேர் இதில் கவனம் செலுத்தினோம்? புரிதலின்றி போக்கிரித்தனமாகவல்லவா நடந்து கொள்கிறோம்?

முதலில் எம் சமூகத்தில் காதல் பற்றியதான கருத்தியல் மாற்றியமைக்கப்படவேண்டும். காதல் என்றாலே வேண்டாத அருவருக்கத்தக்க அசிங்கப்பொருளாகக் கொண்டு அதனை முற்றாக நிராகரிக்கின்ற ஒரு சாராரும் காதல் புனிதமானது என உயர்வு நவிற்சியை வெளிப்படுத்தும் மற்றொரு சாராரும் கொண்டுள்ள மனோபாவம் நிதானிக்க வேண்டியதொன்று. ஒன்று மரபு சார்ந்தது மற்றது நவீன நாகரிக (மேலைத்தேச) விளைவு. இவையிரண்டும் ஆரோக்கியமானவையல்ல. சமூக நலன் சார்ந்ததல்ல இவற்றிற்கு இடையிலான தவறு களை இனங்கண்டு நீக்கி காதல் உணர்வு இயல்பானதென்பதையும் அதுவே மனித நடத்தைக் கோலங்களை தீர்மானிக்கும் வலு என்பதையும் அதனை லாவகமாக கையாளல் பயன் தரும் என்பதையும் புரிந்து கொண்டு அணுக, பழக வேண்டும். எமது சமூக கலை பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாக மட்டுமன்றி காதலை உளவியல் அறிவின் அடிப்படையில் பார்க்கப்பட வேண்டும் அதுவே பயன்தரும் பார்க்கப்படுமா?

**புரிந்துணர்வையும் கொண்டமைந்ததாகும். விதிவிலக்காக ஒத்த மனச்சித்திரமற்றவர்களும் காதலர்களாக மாறுவதுண்டு அழகு, பணம், பதவி, படிப்பு என்பவற்றில் ஒன்றையோ பலவற்றையோ அடிப்படையாகக் கொண்டு காதல் பிறப்பதுண்டு. இத்தகைய காதலின் ஆயுள் அற்பமானது. அதனையும் மிஞ்சி நிறைவேறினும் திருமணத்தின் பின் அல்லல்படுகிறது என்பது மனச்சித்திரம் பற்றி குறிப்பிட்டவர்களின் முடிவு.**

அறியாமை ஆணவத்தை அதிகரிக்கும்; தருக்கு அதிகம் கொள்பவர்க்குத் தெரிந்தது மிகக்குறைவு. - ஜான்கே




# உன்னைச் சரணடையேன்



**மாட்டுப்** பட்டியைத் துப்பரவாக்கிக் கொண்டிருந்த தவபாலனின் மேனியைத் தன் நாவால் துப்பரவாக்கியது வெள்ளச்சி. வெள்ளச்சிக்கு மடி இறங்கியிருப்பதைக் கண்டதும், இன்றைக்கோ நாளைக்கோ கண்டு போடும் என அவனுக்குத் தோன்றியது.

தவபாலனின் ஒவ்வொரு மாட்டிற்கும் ஒவ்வொரு பெயருண்டு காரணப்பெயராக அவனால் சூட்டப்பட்டவையே அந்தப் பெயர்கள் மாடுகளின் நிறத்தையோ, அங்க அமைப்பையோ அல்லது குணாதிசயங்களைக் கொண்டோ அப் பெயர்கள் சூட்டப்படும்.

எல்லா மாடுகளுக்கும் தங்கள் பெயர் தெரியும். செங்காரி நில் என்றால் அந்தக் குறிப்பிட்ட மாடு நின்று அவனைத் திரும்பிப் பார்க்கும். மற்ற மாடுகள் தம்பாட்டிற்குப் போய்க் கொண்டிருக்கும் அவன் மாடுகளோடு பெயர் சொல்லித்தான் கதைப்பான். அவனது பாசை அவற்றிற்கும் அத்துப்படி!

வெள்ளச்சிக்கு இது நாலாவது ஈற்று என்றாலும் இது வரை ஒரு நாகு கண்டு போடவில்லையே என்ற குறை தவபாலனுக்கு இருக்கிறது. போன முறை கூட மடிகொள்ளப் பால் சுரந்தது. தடிப்பான பால் காய்ச்சித் தயிராக்கினால் நிறைய வெண்நெய் திரளும் நெய்யுக்கு நல்ல கிராக்கி இந்த முறையாவது பரவணிக்கு ஒரு பசுக்கண்டு போட வேண்டும் என்று வன்னேரி காட்டு ஐயனாருக்கு வேண்டுதல் செய்திருக்கிறான்.

பட்டியைத் 'துப்பரவாக்கி, எருவை அள்ளிக் கொண்டு போய் குவித்து விட்டு வந்த தவபாலன் மாடுகளை மேச்சலுக்கு கொண்டு போகவேண்டும் என்பதால் அவற்றை அவிழ்த்து சோடியாகப் பிணைத்தான். அப்படியானால் தான் அவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கமுடியும்.'

"செல்வகி, வெள்ளச்சிக்கு மடி நல்லாக இறங்கியிட்டுது நாளைக்கு அமாவாசை.. பட்டியில விட்டுவிட்டுப் போறன் கண்டு ஈனும்.. பார்த்துக் கொள் என்று மனைவியிடம் கூறிவிட்டுப் புறப்பட்டான்.

செல்வகி ,கடும் உழைப்பாளியான அவனுக்கு ஏற்ற மனைவி. மனம் கோணாமல் எதையும் செய்வாள். அவளைக் காதலித்துக் கைப்பிடித்த இனிய நினைவோடு பட்டியிலிருந்த மாடுகளைச் சாய்த்துக் கொண்டு புறப்பட்டான். மனதின் நினைவுகள் இனிக்கத் தான் செய்தது.

செல்வகியைச் சம்மதம் கேட்டதும், அவள் கோபமாகப் 'போடா' என்று அவனை ஏசி உமிழ்ந்து விட்டுப் போனதும், அவனது நெஞ்சு முழுக்க வலித்தது, இரவெல்லாம் உறக்கமின்றி குற்ற உணர்வில் தவித்ததும்..... அடுத்த நாள் அவன் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு போன போது குஞ்சுக்குளக் கோயில் கிணற்றிலிருந்து குடிநீர் அள்ளிக்கொண்டு இடுப்பில் குடத்தைச் சுமந்தபடி செல்வகிவந்துகொண்டிருந்ததைக் கண்டவுடன் தவபாலனுக்கு உடலெல்லாம் பதற்றம் எடுத்தது.

அருகே வந்ததும் அவள் தரித்து நின்றாள். அவன் தடுமாற்றத்துடன் அவளை நோக்கியபோது, அவள் தலை குனிந்து பாதங்களை நோக்கியபடி நின்றாள்.என்னிலே கோபமா?.

"ஏன்...?

"உங்களைப் போடா என்று பேசிப்போட்டன்"

"நான் கேட்டது பிழை அதாலதானே ஏசினீர்"

"பிழையில்லை... ஒரு ஆம்பிளை தன்னுடைய காதலைத் தெரியப் படுத்திறதில ஒரு பிழையுமில்லை... நான் பேசியிருக்கக் கூடாது. அந்த ஆனந்தமான பொழுது தவபாலனின் மனதில் தேனை அள்ளித் தெளித்தது.'இரவு முழுக்க எனக்கு நித்திரை வரவில்லை'

'எனக்கும் தான்...

சுற்றவர முற்று கையிட்டிருந்த மாடுகள் மேய்ப்பான் இன்றி தமது பழக்கப்பட்ட பாதையில் போய்க்கொண்டிருந்தன.

"நான் படிக்காதவன் என்று தானே உமக்கு என்னில விருப்பம் வரேல்லை"

"ஆர் சொன்னது விருப்பமில்லையென்டு...?" அவள் ஆழ மாக அவனது கண்களை நோக்கினாள் "அம்மா தேடப் போறா... போட்டு வாறன்..."

என்று அரும்பிய காதல் மொட்டாய், பூவாய், காயாய்க் கனியாகிக் கலியாணத்தில் முடிந்தது. ஓடிப்போன அவர்களை இருபகுதியினரும் கூட்டி வந்து அரவணைத்தார்கள்.

நினைவுகள் அமுத மழை பொழிந்துகொண்டிருக்க தவபாலன், 'ஏய்...ஓவ்...' என்று மாடுகளைச் சாய்த்துக்கொண்டு புறப்பட்டான்.

விதைப்புத் தொடங்கி விட்டால் அறுவடை முடியும் வரை மாடுகளை வீடுகளில் வைத்துப் பராமரிப்பது கஸ்டமாதலினால் அநேகமானோர் மாடுகளைப் பட்டிக்கு கொடுத்து விடுவார்கள் தனது சொந்த மாடுகளுடன் இரவல் மாடுகளையும் இக்காலங்களில் மேய்ச்சலுக்கு கொண்டு செல்வதால் தவபாலனுக்கு மேலதிக வருமானம் கிடைக்கும்.

நெல்லுப் பயிராகும் காலத்தில் மாடுகள் வயற்பக்கம் போனால் பிடித்து விடுவார்கள். பிடிகாசும், பட்டிக்காசும் கொடுத்துத்தான் அவிழ்க்கவேண்டும். இப்படியான கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கென்றே கமக்குழுவினர் சிலரை நியமித்திருப்பார்கள். கயிறு எறிந்து மாடு பிடிப்பதில் இவர்கள் வலுவிண்ணர்கள் எனவே இந்தக் காலங்களில் தவபாலன் போன்றவர்களிடம் பராமரிப்புக்குக் கொடுத்து விடுவார்கள்.

மாடு பராமரிப்பது அவனுக்கு கைவந்த கலை மேய்ச்சலுக்கு மாடுகளை அவிழ்க்கும் போது, தடவி அவற்றுடன் செல்லம் பொழியும் தவபாலன், அவற்றைப் பாதையால் ஓட்டிச் செல்லும் போது, அவற்றை மிரட்டவும், பூவரசுக் கம்பு கொண்டு வெருட்டவும் தயங்க மாட்டான்.

தவபாலனின் மாடுகள் குஞ்சுக் குளம் பிள்ளையார் கோயிலடிக்கு வந்த போது வெயில் சுளீரென்று அடித்தது. துவாயை எடுத்து தலைப் பாகையாக் கட்டிக்கொண்டு, மடியிலிருந்த கோண்டாவில் புகையிலையை எடுத்து சுருட்டி பற்ற வைத்துக்கொண்டு கக்கத்திலிருந்த கம்பை கையுக்கு மாற்றிக் கொண்டு புகைவண்டியாக மாடுகளைப் பின் தொடர்ந்தான்.

இப்ப யாழ்ப்பாணம் மூடப்பட்டதோடு எருவுக்கும் மவுசு இல்லாமல்ப் போச்சு கும்பி கும்பியாகச் சேர்ந்திருக்கு... இதை வித்தால் தான் புதுவருசத்திற்கு செல்வகிக்கு புடவை வாங்கேலும்... சின்னதாயெண்டாலும் ஒரு சங்கிலி செய்து போட வேணும் அவனது மனவானில் ஆயிரம் வண்ணக் கோலங்கள் மின்மினியாய் கண்சிமிட்டின. அவள் எதற்கும் ஆசைப்படுபவள் இல்லை ஆனாலும் அவளை அழகு படுத்திப் பார்ப்பதில் அவனுக்கு ஆசை.

அடிக்கடி அவர்களது வீட்டிற்கு வந்து போகும் போராளியான இலட்சியனுக்கு அவர்களது வறுமையும், அவனது ஆதங்கமும் தெரியும் அக்காவுக்கு இருக்கிற வடிவுக்கு, அவவின்ர புன்னகைக்கு, எதற்கண்ணை பொன்னகை? எங்கட போராளிப் பிள்ளையள் நகை நட்டே போடுகினம்? என சமாதானம் சொல்வான்.

தவபாலன் குடும்பத்தினருக்கு போராளிகள் என்றால் வலு பட்சம். மாவீரனாகிவிட்ட தனது தம்பியை அவர்களில் காண்பான் தவபாலன்,செல்வகியோ களத்தில் போராடும் தனது தங்கையை நினைத்துக் கொள்வாள்.

"தம்பி... இங்க வந்தால் கூச்சப்படாமல் சாப்பிடவேணும்.. நீங்கள் வேற நாங்கள் வேற இல்லை.. எங்கட உறவுகள் தான் நீங்கள் எங்களை வேறுபடுத்திப் பார்க்காதேயுங்கோ.." அதிகம் படிக்காத தவபாலனின் வார்த்தைகள் போராளிகளை உணர்ச்சிவசப்படச்செய்யும்.

மாடுகள் மேய்ச்சல் தரவையை நெருங்கிக் கொண்டிருந்தன பருவம் பொய்த்து ஒரு மாதகாலமாய் அலிச்சலும் புழுக்கமுமாய் உறுத்திக் கொண்டிருந்தது. விதைத்த நெல் மணியில் உயிர்த்தெழுந்த பயிர்கள் வாடிப் போய் தண்ணீருக்காய் ஏங்கி வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. தாகம் வரட்டி எடுக்கவே கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளி ஆசை தீரக் குடித்தான் தவபாலன்.

அவன் பின் தங்கிடவே கலைந்து பாதை மாறிய மாடுகளை 'ஓவ்..ஓவ்.." என்று சாய்த்த போது எதிரில் இலட்சியன் சயிக்கிளில் வந்துகொண்டிருந்தான்.

"என்ன பாலண்ணை விடிய வெள்ளனையோட வெளிக்கிட்டாச்சு..." என்று அவனிடம் கதை கேட்டு விட்டு பதிலுக்கு காத்திராமல் போய்க்கொண்டிருந்தான்.

இலட்சியனைத் தெரியாத கிராம வாசிகளே இல்லை கொஞ்சக்காலம் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருந்தவன், இப்போது சில நாட்களாக அதிரடியாக கண்ணி வெடி வெடிக்க வைத்து எதிரிப் படையைச் சிதறடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறான். சுறுசுறுப்பும் துணிச்சலும் மிக்க அவன் எல்லோருடனும் கலகலப்பாகப் பழகுவான் ஊரிலுள்ள இளைஞர்கள் மாத்திரமன்றி பெரியவர்களும் அவன் மீது மதிப்பு வைத்திருந்தனர்.

அவன் இந்தப் பகுதியில் அரசியல் வேலை செய்து கொண்டிருந்த நாட்களில் பல நல்ல காரியங்களைச் செய்து ஊரை மேம்பட வைத்ததனால் அவனை எல்லோருக்கும் பிடிக்கும்

இலட்சியன் சிரமதான வேலைக்கு கூப்பிட்டால் எவரும் மறுக்க மாட்டார்கள் பாதையோரங்களையும்,பாடசாலை மைதானத்தையும், வைத்தியசாலை வளாகத்தையும் துப்பரவாக்கும் பணியில் ஈடுபடுத்துவான் அவனது வரவால் அக்கிராமே புத்தொளி பெற்றது என்றால் அதுமிகையாகாது.

"நாச்சங்குடாப் பக்கம் மேய்ச்சலுக்குக் கொண்டு போறன் தம்பி என்று கூறிய தவபாலனிடம் வாறன் அண்ணை என்று சொல்லியபடி விரைந்தான் இலட்சியன். குஞ்சுக்குள அலைகரையில் தண்ணீர் காட்டிவிட்டு மாடுகளை நாச்சங்குடா தரவைக்கு சாய்த்து சென்ற தவபாலன் மாடுகளை மேய விட்டிட்டு பாலை மர நிழலில் ஒதுங்கி செல்வகி தந்து விட்ட கோதம்ப ரொட்டியை சம்பலோடு ஒரு கைபார்த்தான்.

இந்தப்பக்கம் சனநடமாட்டம் குறைவு எப்போதாவது யாரும் முக்கொம்பன் காட்டுப் பாதையால் பூநகரிக்குப் போவார்கள் அதுவும் இந்த மாரிகாலத்தில் குறைவு தான் மற்றும்படி மாட்டுக்காரர் மாடுகளை மேய்ச்சலுக்கு சாய்த்துக் கொண்டு வந்தால்தான் உண்டு.

மாரியானாலும் இன்று வெயில் அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது.மதியம் வரை அனலாக எரித்துக்கொண்டிருந்த வெயில் மறைய இருந்தாற் போல வானத்தில் மப்புக் கட்டியது வட கிழக்கு மூலையில் கந்தபுரப் பக்கமாக சூல் கொண்ட மேகம் சிறிது சிறிதாக பெருத்து வான் பரப்பை ஆக்கிரமித்தது. வெப்பத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்த காற்று திடீரெனத் தணிந்து போய் வடக்கு நோக்கி தென்றலாய் வீசி தவபாலனின் உடலைத் தழுவிச் சென்றது.

தவபாலன் வானத்தைப் பார்த்தான் ஒன்று கூடி மோதும் வான் பரப்பில் மின்னல் கீற்று கண்ணைப் பறிக்க இடியோசை புவியை அதிரவைத்தது. மாடுகளும் மழை வருவதை ஊகித்தது போல் முகத்தை மேலே தூக்கி தலையாட்டின விடலைக்காளையொன்று செங்காரிப் பசுவைக் கலைத்துக் கொண்டிருந்தது.

இடியோசை தொடரதுளித் துளியாய் மழைத் தூறல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக விழவே, மாடுகளை மறுபடியும் பட்டிக்கு கொண்டு செல்ல எழுந்தான் காலையிலிருந்து வயிறு நிறைய மேஞ்சவை... போதும் என நினைத்துக் கொண்டு பூவரசங் கம்பை எடுத்துக் கொண்டு 'ஏய்...ஓவ்... ஓ...ஏய்க் என்று விரட்ட ஆரம்பித்தான்.

பெரு மழை கொட்டத் தொடங்குவதற்குரிய அத்தனை ஆயத்தங்களும் தெரிந்தது. இதுவரையில் தென்கிழக்குப் பக்கமிருந்து வந்த இடியோசை திடீரென்று மேற்குப் புறமாகக் கேட்டது. தவபாலன் ஒரு கணம் நிதானித்தான். இது இடியோசையல்ல என்பது அனுபவப்பட்ட அவனுக்கு புரிய அதிக நேரம் எடுக்கவில்லை கடந்த இரு தசாப்தங்களாக கேட்டுக் கேட்டு, செல்லடி எது, கண்ணிவெடி எது, விமானக் குண்டுவீச்சு எது, மழைமேக இடியோசை எது என்று வேறுபடுத்தி உணரக் கூடிய வல்லமையை ஊரவர்கள் ➥

பெற்றிருந்தார்கள்.
'எங்கேயோ கண்ணி வெடி தான் வெடிச்சிட்டுது. இலட்சியன் வெள்ளன உதால போனவன்.. அவங்கட செற்றப்பாகத்தான் இருக்கும்... நாவலம்மடப் பக்கம் பருத்துறைறோட்டிலை தான் வெடிச்சிருக்கவேணும்... எத்தனை ஆமிசரியோ, என்ன வாகனம் அம்பிட்டுதோ?' என பலவாறாக எண்ணியபடி மாடுகளைச் சாய்த்தபடி ஊர்மனைப்பகுதிக்குள் நுழைந்தான் தவபாலன்.'

திடீரென்று காற்று ஒரு சுற்றுச் சுற்றி குப்பை கூழல்களை எல்லாம் வாரிக்கொண்டோடிவாண வேடிக்கை காட்டியது. வேகவேகமாய்த் திரண்டு வந்த மழை மேகங்கள் ஊரையே மைமல் இருள் கொள்ள வைத்தது.

இருந்தால் போல் பெரு இரைச்சலுடன் கடகடஎன மழைத்துளிகள் பெரும் கட்டியாக விழுந்து, தவபாலனின் மேனியைச் சிறுகல்கொண்டு தாக்குவதுபோல் நோகவைக்கவே, அவன் அவசரம் அவசரமாக மாடுகளை விரட்ட ஆரம்பித்தான்.

சீறிச் சுழன்றடிக்கும் காற்றோடு சோ எனப்பொழிய ஆரம்பித்த பெருமழை தவபாலனை முழுதாக நனைத்துவிட்டது. அவர் திக்காயக் குள முடக்கால் திரும்பியபோது எதிரே இலட்சியனும், ரங்காவும் சயிக்கிளில் டபிளாக வேகமாய் பறந்தனர். 'கண்ணி வெடி வச்சிட்டு வேகமாகப் போறாங்கள்' என்று தவபாலன் பெருமிதமாக நினைத்தான். 'என்னெண்டாலும் பொடியள் வலு விண்ணர்தான்... ஆனானப்பட்ட இந்திய ஆமிக்கே தண்ணி காட்டினவர்கள், இவை எந்த மூலைக்கு?' என்று நினைத்துக் கொண்டான்.

சில நிமிடங்கள் மட்டுமே பெய்த மழை, கண்ணாமூச்சி விளையாடி ஓடி ஒழிந்து கொண்டது. பெருமழை கொட்டத் தொடங்குவதற்கானதாகத் தென்பட்ட அத்தனை அறிகுறிகளும் மெல்ல மெல்ல மறைய, தாயக விடியலைப் போல் வானம் மெல்ல மெல்ல வெளித் துக்கொண்டிருந்தது. மேகங்கள் மெல்ல மெல்ல அசைந்து மறுதிசையில் மறைய, வானம் மெல்லிய நீலப் புடைவை போர்த்தி வழித்துத்துடைத்து விட்டதுபோல் நிர்மலமாய் நின்றது.

'இன்னும் கொஞ்ச நேரம் தரவையிலை மேய்ச்சிருக்கலாம்' என எண்ணிக்கொண்டான் தவபாலன். "கவிழ்முற்றிப் போச்சு... காலநிலையும் சீரில்லை... மனிசனை மனிசன் கொல்லுற காலம்...தன்ரநாட்டு மக்களையே ஈவிரக்கம் இல்லாமல் கொன்று குவித்திட அரசு பிரகடணப்படுத்தியுள்ள சண்டை" தவபாலன் சலித்துக்கொண்டான்.

ஒரு தடவை தரவையில் அவனது மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தபோது அடுத்தடுத்துச் செல் வந்துவிழுந்து ஐந்து மாடுகள் கணப்பொழுதில் கண் முன்னே சிதறிப்போனதை தவபாலன் சொல்லி அழுகின்ற போதெல்லாம், 'மாகடனின் மனிசரே சிதறிப்போகினம்..'' என்று செவ்வகி ஆறுதல் சொல்வாள். 'ம்... இந்தக் கொடிய யுத்தம் எப்பதான் முடியப்போகுதோ?' என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தபோதே தெருவெங்கும் பரபரப்பு ஏற்பட்டது. ஆங்காங்கே இரும்புத் தொப்பிகள் அணிந்த சிப்பாய்கள் வந்து கொண்டிருந்தனர்.

'ஊரை ரவுண்டப் பண்ணித் தேடப்போறாங்கள் பொடியள் போய்த் தப்பியிட வேணும்...' என முனியப்பரை வேண்டிக்கொண்டான் தவபாலன்.

படையினர் வருவோர் போவோர் எல்லோரையும் மறித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். சில இளவட்டங்களுக்கு செம அடி கிடைத்தது. இன்னும் சிலரைத் தம்முடன் தடுத்து வைத்திருந்தார்கள்.

தவபாலன் மாட்டைத் தனது ஒழுங்கைக்குச் சாய்த்துக் கொண்டு போனபோது திருப்பத்தில் இலட்சியனும் ரங்காவும் பதட்டத்துடன் நின்று கொண்டிருந்தனர்.

'என்ன தம்பியவ திரும்பி பாதை மாறி வாறியள்?' என தவபாலன் கேட்டதும், 'அந்தப் பக்கமும் ஆமி... எல்லாப்பக்கமும் சுற்றி வளைச்சிட்டாங்கள்.

"இப்ப என்ன செய்யுறது? உங்கட வீட்டிலையும் ஒளிக் கேலாது. வீடு வீடாகத் தேடி வாறாங்கள். எப்படியும் உடைச்சுக்கொண்டு வெளிக்கிட வேணும் தவமண்ணை.:. கவசவாகனம் சிதறி, பத்துக்குமேற்பட்ட ஆமி செத்த கொதியிலை வாறாங்கள்..."

தவபாலன் பலமாக யோசித்தான். திடீரென்று அவனது மனதில் மின்னல் கீற்று!

"தம்பியவை நான் சொல்லுறபடி செய்யுங்கோ. உங்கட உடுப்புகளைக் கழற்றி மாத்துங்கோ. என்னுடைய சாரம், தலைப்பாகை எல்லாம் தாறன்... சிவம் உங்கட வீட்டிலை பழைய சாரம், துவாய் இருந்தால் எடு... உடம்பிலையும் சொஞ்சம் சாணி தடவுங்கோ... சாணி நாற்றம் வருட்டும்... கெதியாய்... ஆமிக்காரன் ஒழுங்கைகளுக் குள்ளையும் இறங்கப்போறான்."

அடுத்த சில நிமிடங்களில் துரிதமாகச் செயற்பட்ட இரு இளைஞர்களும் மாட்டுக்காரர்களாக மாறினார்கள். "அண்ணை இந்தப் பிஸ்ரலை எங்கையாவது புதையுங்கோ..." என்று கூறிவிட்டு மாடுகளைச் சாய்த்துக் கொண்டு மறு வழியால் புறப்பட்டார்கள். கையிலே பூவரசம் தடி... வாயிலே சுருட்டு... தலையிலே முண்டாசு... சேட் இல்லாத வெற்று மேனி... பழைய ஊத்தைச்சாரம்... இப்போது யாராலும் அவர்களை இனங்காண முடியாது.

'எய்... எய்க்..ஓ... ஓவ்..' மாடுகளைச் சாய்த்தபடி அவர்கள் தைரியமாக நடந்தார்கள். திடீரென்று சூரியனை இருகை கொண்டு மறைத்தாற்போல வானம் இருண்டுகொண்டு வந்தது. 'சோ' என்ற இரைச்சலுடன் மீண்டும் மழை பொழியத் தொடங்கியது.

மாடுகளைச் சாய்த்துக் கொண்டு ஜெயபுரம் சந்திக்கு வந்தபோது இராணுவத்தினர் அவர்களை மறித்தார்கள். அங்கே பல அப்பாவிகள் இருத்தப் பட்டிருந்தார்கள். ஒருவனின் கடவாயில் இரத்தக் கசிவு தெரிந்தது.

கொட்டும் மழையில் அமர்ந்திருந்து தாயக மண்ணுடன் உறவாடிக் கொண்டிருந்தவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. 'இதற்கெல்லாம் விரைவில முடிவு வரும்' என மனதில் கருவிக் கொண்டான் இலட்சியன்.

"எங்கடா போறது...?" ஒரு அரும்பு மீசை மிரட்டியது.
"மாடு கொண்டு போறது..." சுருட்டை வாயிலிருந்து எடுத்து வீசிவிட்டு பயப் பாசாங்குடன் கூறினான் இலட்சியன்.

"இலட்சியனைத் தெரியுமா? புலி... பெரிய புலி..."
"தெரியாது..." இலட்சியன் கூறவே, "தெரியாது?" என்று கேட்டபடி அவனது கன்னத்தைப் பதம்பார்த்தான் ஆமி.

"தெரியாது சேர்... நான் காணயில்ல..."
"இதில இலட்சியன் இருக்கா?" அமர்ந்திருந்தவர்களைக் காட்டிக் கேட்டான் சிப்பாய். "இல்லை சேர்.." என்றான் இலட்சியன்.

ஒரு மாடு சாணி போட்டது. இன்னொன்று சலம் விட்டது.
"சரி...சரி.. கெதியா மாடு கொண்டுபோறது ... மிச்சங்கரைச்சல்..." இராணுவம் வழி விட்டது.
"ஏய்... எய்க்..ஓவ்..." மாடுகளைச் சாய்த்தபடி இவர்கள் ஊர் மனையைத் தாண்டினர்.


தவபாலன் தனது வீட்டிற்குச் சென்றபோது செல்வகி 'ஓ' என்று கதறி அழுதாள்.

மழை தொடர்ந்து பேரிரைச்சலுடன் பெய்து கொண்டிருந்தது.

**ச.முருகானந்தன்**

---

# கற்பக விருட்சங்கள் காலமாகிப் போனதுவோ



யாழிலிருந்து கொண்டுவந்து
நாட்டப்பட்ட பனை மரங்கள்
காலிமுகத்திடலில் காலமாகிப் போனதாக
காதோரம் ஓர் செய்தி வந்தது.


அந்தி சாய்ந்த நேரமதில்
என்ன நடந்ததென
எட்டிப்பார்க்கச் சென்ற போது
வெய்யிலில்லை மழையில்லை-ஆனால்
காலிமுகத்திடலில்
காளான் முளைத்தது போல்
காணப்பட்டன பல குடைகள்
ஒவ்வொரு குடையின் கீழும்
உரு மறைத்த இரு உயிர்கள்
நாகரிகம் இங்கே
நல்ல விலை போவதனை
பார்த்தவுடனேயே பட்டெனப் புரிந்துகொண்டேன்.

ஓ......
கற்பக விருட்சங்களும் இதனால்தான்
காலமாகிப் போனதுவோ
யாழ்ப்பாணக் கலாச்சாரத்தை
நாளாந்தம் கண்ட இவைகளுக்கு
காலிமுகத்திடல் கசப்பான விடயம்தான்
களங்கள் பலவற்றில்
காப்பரணைப் போல் நின்று
உரிமைப் போருக்காய் சிந்திய உதிரத்தில்
ஊறிவளர்ந்த இவைகளுக்கும்
மானம் ஒரு மகத்தான விடயம்தான்-அதனால்தான்
தாங்க முடியா வேதனையில்தான்
இவை தற்கொலை செய்தனவோ?

**-பா.தமிழ்**

---

# நானும் என்னுடையவைகளும்



அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும்
இயல்பான வாழ்க்கை வாழ்ந்திருக்கவே
நானும் என்னுடையவைகளும் விரும்புகிறோம்.

வைரங்கள் பதிக்கப்பெற்ற அரச கிரீடமல்ல
எமது சிரசுகளின் கோரிக்கை
காலின் கீழே நெளிவதற்கு உகந்தது
சாக்கடைப் புளுக்களே என்பதல்ல
எமது பாதங்களின் வேண்டுகை.

நானும் என்னுடையவைகளும்
கடந்து வந்த பாதைகள்
கலிங்கப் போர்க்களத்திலும் பார்க்க
கடுமையானவை, கனல் கப்பிக் கிடந்தவை
நாங்கள் இளைப்பாறவும்
சரிந்து படுக்கவுமாக மெல்லியல் தோய்ந்த
பசிய புற்படுக்கையே இன்றைய
எமது வேண்டுகைகளும் கோரிக்கைகளுமாகும்.

உங்களில் யாரும் அவற்றை எமக்காக
உருவாக்கித் தரவேண்டாம், ஏனெனில்
உங்கள் உருவாக்கத்தின் இரண்டாம் பக்கம்
இப்பொழுதுதான் குதலை மொழி பேசுகிறது.
எமது இன்றைகளுக்காகவும் நாளைகளுக்காகவும்
நாமே அதனைச் செப்பனிட்டுக் கொள்வோம்.
அதில் அளவற்ற நம்பிக்கைகள் இருக்கின்றன.

நானும் என்னுடையவைகளும் உம்மையெண்ணி
கண்ட கனவுகள் அழகானவை,அர்த்தமானவை
எமது கனவுகளுக்குச் சற்றும் பொருந்தாத
உமக்கே உரிய யதார்த்தங்களை
எமது கனவுகளில் திணித்த போது அவை
கருகிப் போகும் அபாயமிருப்பதாகப் படுகிறதெமக்கு.

உமது திருச்சபையில் எமது மன்றாடுகள்
மறுதலிக்கப்படலாமென்பது தெரிந்ததே
எனினும் ஒரேயொரு விண்ணப்பம்,

கனவுகளால் கிடைக்கும் சுகானுபவத்தை
உமது யதார்த்தங்களால் சிதைக்காதீர்.
இல்லையெனில் கனவுகளும் யதார்த்தங்களும்
வெகுதூரமென்பது மீண்டுமொருமுறை
நிரூபணமாக நேரிடலாம்.

**-வேல்.லவன்**

---

# மனிதன்



நேற்றுத்தான் அந்த வீட்டுத்தலைவர் கதிரேசன் இறந்து போனார். வீட்டுக்காரர்,உறவினர்கள் ஒன்றாகச் சேர்ந்து 'கதிரேசனின் உடலை அடக்கம் செய்து நீரினுள் மூழ்கி நினைப்பொழிந்தார்கள்.

இன்று அதிகாலையிலேயே கதிரேசர் வீட்டோரத்தில் இருந்த அந்த குழாய்க் கிணற்றடியில் கூட்டம் பெருங்கூட்டமாய்ப் பானைகள், வாளிகள் சகிதம் ஒரு பெரும்படையே கூடி விட்டது...

தண்ணீர் எடுப்பதில் நான் முந்தி நீ முந்தி என்று போட்டியாக முண்டியடித்துக்கொண்டு நின்றனர்.

பானையை வைத்துவிட்டு (பம்மின்) குளாயின் ஆட்டுக்கோலைக் கைப்பற்றிக் காலை எடுத்து வைத்தான் ஒருவன்.

ஆட்டுக்கோலைக் கைப்பற்றிய வனின் பானையைத் தள்ளிவிட்டுத் தனது வாளியை வைத்தான். அதுதான் முறையென்று.

தள்ளப்பட்ட பானை மண்பானை என்பதால் உருண்டு புரண்டு அந்தத்தளத்தை விட்டுக்கீழே வீழ்ந்து உடைந்து போனது.

உடைந்து போன அந்தப்பானைக்காரனின் உடலில் இராணுவப் பலம் எப்படியோ வந்துவிட்டது. வாளி யைத் தூக்கி எறிந்துவிட்டு வாளிக் காரனின் சேட்கொலரைப் பற்றி இழுத்தான்.

அடிபிடி ஒருவர் மாறி ஒரு வராகப் பெருங்கலவரம்....

வேடிக்கை பார்த்தனர் சிலர். விலக்குப் பிடித்தனர் சிலர். ஒரு சிலர் நியாய மும்பேசினர்....

இந்த இடை வேளையைப் பயன் படுத்தித் தண்ணீர் எடுத்தவரும் உண்டு.

மனிதன் ஒருவன் சொன்னான். இத்தனை நாளும் கதிரேசர் நின்று வரிசைப்படுத்தி எல்லோரும் ஒழுங்கு தவறாது நீரெடுத்துச் செல்லவைத்த அருமை இப்ப தெரியுது என்றான்.

மனிதன் மனிதனாக வாழ்ந்தான். மனிதருக்கு உதவினான். மாண்டவரை யெல்லாம்மகான் களாக்கிவிடும் இந்த மனிதக் கூட்டம் தாங்கள் மனிதராக வாழ நினைப்பதில்லை என்றது இன்னொரு குரல்.

யாருமே தன்னிடம் தண்ணீர் எடுக்காது சண்டையிட்டுக் கொண்ட நிலை யைக் கண்டு மனிதரைக் கண்டு சிரித்தது குழாய்.

செத்துப் போன அந்த மகான் கதிரேசரோடு மனிதமும் செத்துப் போச்சுதோ? என்று யாரோ கூறிய அந்தக் குரலைக் கேட்க மனிதர்கள் யாரும் அந்தக் கூட்டத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

மனிதன் வீழ்ந்தால் மனிதமும் வீழும்...?
மனிதம் வீழ்ந்தால்....?

**-வளவைவளவன்**

---

அறிவுரைகளின் ஆர்த்த இசைச் செறிவே இலக்கியம். - தார்ன்ட்டன் வில்டர்

# குழந்தைநாதம்

## சிறையான இருப்புகள்



தீபன் தன்னை சிறந்த வாசகனாக்கிக் கொண்டான். ஏதாவது நூல்கள் கிடைத்து விட்டால் போதும் அதை வாசித்து முடியாமல் உறங்க மாட்டான்.

அவனது ஊரில் சிறந்த நூல் நிலையம் எதுவும் இருக்க வில்லை. ஆனால் அவன் மனஞ் சோரவில்லை. தனது அயராத உழைப்பினால் பல பெரியவர் களினதும், நிறுவனங்களின் உதவியினாலும் ஒரு சிறிய நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்துச் செயற்படுத்தி வந்தான்.

அயற் கிராமங்களில் இருக்கும் தெரிந்தவர்களிடம் ஒன்று இரண்டாகப் பெற்ற புத்தகங்களும் பெருந்தொகை யாகப் பெருகப் பெருக அவனது ஆனந்தமும் பெருகியது.

இப்போது நூலகத்தில் கிட்டத்தட்ட புதியதும் பழையது மாக ஆயிரம் நூல்கள் தேறி விட்டன.

சிறுதுளி பெருவெள்ளம் என் பதுபோல் அமைந்து விட்ட தங்கள் உழைப்பின் வெற்றிக்காக தீபனும் அவனது நண்பர்களுமாக மனம் மகிழ்ந் தார்கள்

அந்தக் கிராமத்தில் சிறுவர்களும் பெரியவர்களுமாக ஒரு வாசகர் கூட்டமும் உருவாகிக் கொண்டிருந்தது.

நூல் நிலையத்தின் முன்னால் நீண்டு உயர்ந்து கிளைகள் பரப்பி விழுதெறிந்து நிற்கும் ஆழமரத்தின் கீழே அமர்ந்து நூலை வாசிப்பது அவர்களது அன்றாட கடமை களில் ஒன்றாக இருந்தது.

தீபனே நூலகத்தின் பதிவு வேலைகளைச் செய்வது வழக்கம். வெளிச்சம் இல்லாத காரணத்தால் கொடுக்கல் வாங்கல் எல்லாம் பகல் பொழு திலேயே நடந்துமுடிந்துவிடும்.

இன்றும் தீபன் தன் கடமைகளை முடித்துக்கொண்டு அங்கிருந்து வாசிக்காமல் வீட்டுக் குச் சென்றுவிட்டான். அவனது கையில் ஐசாக் நியூட்டன் பற்றிய நூல் ஒன்று காட்சியளித்தது.

வீட்டுக்குச் சென்றவன் . அமர்ந்தான். அவனது விழிகள் தனது இடத்தில் அமர்ந்துகொண்டு புத்தகத்தைத் திறந்து வாசிக்கத் தொடங்கினான்.

சில நிமிடங்கள் கழிந்தன.

அவனது காதோரம் குளவி ஒன்று கதைசொல்லிச் சென்றது. அவனது சிந்தனையைக் கலைத்துவிட்டுச் சென்ற குளவியைத் தேடி அவன் கண்கள் அலைந்தன.

அந்தக்குளவி வட்டமிட்டு, வட்டமிட்டு அவன் முன்னால் நிமிர்ந்து நின்ற சுவரின் மேல் அமர்வதும் பறப் பதுமாக இருந்ததை அவன் அவ தானிக்கத் தவறவில்லை

தீபன் சுவரை உற்று நோக் கினான். அந்தச் சுவரில் ஒரு துவாராம் காணப்பட்டது. அந்தத் துவாரத்தின் ஓரத்தில் அமர்ந்த குளவி சிறு நேரத்தில் உள்ளே சென்று மறைந்து போனது. குளவி உள்ளே புகுந்து கொண்டதும் தீபன் உசார் அடைந்தான்.

எதையோ கண்டுபிடிக்கும் ஆர்வத்தில் தன் இருக்கையை விட்டு எழுந்தான். ஒரு சவர்க்காரத்துண்டை யும் கையில் எடுத்துக்கொண்டு சுவரைநோக்கி நடந்தான்.

உள்ளே சென்ற குளவி இன்னமும் வெளியே வரவில்லை.

தீபன் சவர்க்காரத்தால் துவாரத்தை அடைத்துவிட்டு வந்து அமர்ந்தான். அவனது விழிகள் சுவரையே நிலைகுத்தி நின்றன.

குளவி வெளியே வர வில்லை. வரமுயற்சிப்பதாகவும் அறிகுறிகள் தென்படவில்லை.

அதன் இணைக்குளவி துவாரத்தை நோக்கி வட்டமிட்டு வந்து அமர்ந்தது. துவாரம் அடைபட்டிருந்த தால் அது தன் இருப்பிடத்தை கண்டுகொள்ளமுடியாமல் அவதிப் பட்டது. அது பல தடவைகள் முயன்று கொண்டிருந்தது.

சுவரில் உள்ள அது போன்ற துவாரங்களில் அருகே அமர்வதும் அது இருப்பிடம் இல்லை என்ற முடிவுடன் பறப்பதுமாக அலைந்துகொண்டிருந்தது.

மற்றக் குளவியின் தவிப்பு தீபனின் நெஞ்சில் குத்தியது.

ஆய்வு செய்யப்புறப்பட்ட அவன் அவலப்பட்டான். சிறிய உயிரைக்கூட அழிக்கும் உரிமை தனக்கு இல்லை என்ற உணர்வு ததும்ப, இருப்பிடங்களே சிறையாகி தமது உயிர்களை இழந்துபோகும் மனிதர்களையும் அவர்கள் தம் இருப்பிடங்களைத் தேடி அலையும் மனித அவலங்களும் அவன் கண்முன்னே தெரிந்தன. இந்தக் குளவியின் நிலையில் தானே எங்கட மக்களும்...

அவனால் பொறுமையாக தன் ஆய்வை மேற்கொள்ள முடிய வில்லை. இடத்தை விட்டு எழுந்தான். துவாரத்தை அடைத்த சவர்க்காரத் தைச் சுரண்டி எடுத்தான். துவா ரத்தை மீண்டும் திறந்துவிட்டு வந்து அமர்ந் தான். அவனது விழிகள் துவாரத்திலேயே நிலைகுத்தி நின்றன.

உள்ளே சென்ற குளவி வெளியே வரவில்லை. வெளியே நின்ற குளவி மீண்டும் மீண்டும் பறந்து வந்து தன் இருப்பிட வாசலில் அமர் வதும் பறப்பதுமாக இருந்தது. அச்சம் அதைத் தடுத்திருக்க வேண்டும் உள்ளே செல்ல அது தயங்கியது. தீபனின் உணர்வுகள் அவனது நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்தன. பெரிய தவறைச் செய்து விட்டதாக வேத னைப்பட்டுக் கொண்டே புத்தகத்தை மூடி வைத்து விட்டு வெளியே சென்றான்

**முருகு.பாரிமகன்.**

## வாரம் ஒரு குறள்



வாழ்க்கை என்பது பெருங்கடல். நீச்சல் என்பது ஆரம்பத்தில் சுகமாக இருக்கும். போகப்போக தத்தளிப்பு ஏற்படும். அப்போது பெரும் முயற்சி செய்தால் மட்டுமே கரை சேர முடியும். முயற்சி செய்யாது அலை கரை சேர்க்கும் என்று சோர்ந்து போனால் நடுக்கடலில் மாண்டு போக வேண்டியது தான். எறும்புறக்கற்குழி விழும் என்றால் ஏன் ஆறறிவு படைத்த மனிதனால் முயற்சி செய்யமுடிவதில்லை. உண்மையில் முயற்சி செய்ய நாம் முனைவதில்லை. அதனால் தான் இரண்டடி வைப்பதற்குள் தளர்ந்து போகும் நிலை வருகின்றது.

வாழ்க்கையில் சவால்களை சமாளிக்க முயற்சி செய்யவேண்டும் . அப்படி முயற்சி செய்தவர்கள் போர்க்களத்தில் கையில் வாள் இருந்தும் எதிரியைக்கண்டவுடன் அஞ்சும் படைவீரர்கள் போன்றவர்கள் என்று பின்வரும் குறள் கூறுகின்றது.

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 23

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர | நி | ன் | ட | சி | டி | தா |
| று | ஆ | ப | கே | ப் | த் | கி |
| வ | ட் | ல் | க | ட் | ணை | ளி |
| மீ | பு | ய | பி | கு | கி | உ |
| ப | ள் | பீ | கௌ | ஈ | ள | ம் |
| ம | லா | ந் | ம் | டு | நீ | ம் |
| நா | த | ம் | ஸ் | தை | அ | தா |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -21 இன் விடைகள்

01. தமிழ்.
02. சமயம்.
03. கணிதம்.

01. பூ.
02. வீபூதி.

### சொற்சிலம்பம் - 21 இன் பரிசுக்குரியவர்

அ.நிதுஷா,
தரம் - 03,
சின்னப்பண்டிவிரிச்சான்,
அ.த.க.பாடசாலை.மன்னார்.

### சொற்சிலம்பம் - 21 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கி.கலைச்செல்வி, வசந்த நகர், திருமுறிகண்டி.
02. கு. நிலைக்ஷன், ஜெயந்திநகர், கிளிநொச்சி.
03. சி. திருமாறன், 5ம் வாய்க்கால், கிளிநொச்சி.
04. ஜீ. ஜீவப்பிறிதா, உருத்திரபுரம், கிளிநொச்சி.
05. தெ.சுஜீபன், கிளி/இந்துக்கல்லூரி, கிளிநொச்சி.
06. ருசியந்தன், கிளி/வட்டக்கச்சி, மகா வித்தியாலயம்.

01. விளையாட்டின் பெயர்கள் மூன்று?
01) ..................................
02) ..................................
03) ..................................

சொற்சிலம்பம் -23,
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

02. நீர் கிடைக்கும் இடங்கள் இரண்டு?
01) ..................................
02) ..................................

பெயர் :- ..................................

முகவரி :- ..................................

..................................

## நாய்க்குட்டி

சின்னச் சின்ன நாய்க்குட்டி
வெள்ளை நிற நாய்க்குட்டி
துள்ளி ஓடும் நாய்க்குட்டி
துரிதமாக ஓடும் குட்டி

தலையைத் தலையை ஆட்டும் குட்டி
தாவித் தாவிப் பாயும் குட்டி
பாலும் சோறும் தின்னும் குட்டி
பாலன் வீட்டு நாய்க்குட்டி

பாலைக்குடிக்கும் நாய்க்குட்டி
பாய்ந்து வரும் நாய்க்குட்டி
அன்புடன் நாங்கள் அணைக்கும் குட்டி
அருணமயான சின்னக்குட்டி.

**சு.மோகனதீபன்**
**தரம் - -8**
**கிளி/மகாவித்தியாலயம்.**

## அன்பு

அன்னைக்கு அன்பைக் காட்டு
அவனியில் நீ வாழ
அயலார்க்கு அன்பைக் கொடு
அகிலம் யாவும் நீ வெல்ல
அநாதைக்கு அன்பை விதை
அன்பற்கே நீ அன்பழகி என்றுரைக்க
ஆயிரம் பேர் உன்னிடம் பணிய

இ.எலிசபெத் மேரி,
தரம் - 06,
மு/பாரதிவித்தியாலயம்

## தேடல்


அகராதி தேடினேன்
அறிவை வளர்த்தேன்.
இன்னிசை தேடினேன்
இசைஞானம் வளர்த்தேன்.
பத்தைத் தேடினேன்
விளையாட்டை
வளர்த்தேன்.
உறவுகளைத் தேடினேன்
உலகை வளர்த்தேன்.

இ.ஜெயகேசவன்,
கிளி/வட்டக்கச்சி ம.வி.

## கூண்டுக்கிளி

ஒரு வட்டமான அட்டையை (CARDBORAD) வெட்டிக் கொள்ளுங்கள். அதை ஒரு பக்கத்தில் ஒரு கிளியின் படமும், மறுபக்கத்தில் கிளிக் கூண்டின் படமும் வரைந்து கொள்ளுங்கள். கிளி நேராக இருப்பதுபோல் கிளியின் இரண்டு பக்கமும் துளைசெய்து, இதனுள் ஒரு நூலை விடுங்கள். இப்பொழுது இரண்டு பக்கமும் நூலை இழுத்துப் பிடித்துக் கொண்டு அட்டையைச் சுற்றினால் கிளி கூண்டுக்குள் இருப்பது போலத் தோன்றும். இதனுடைய பெயர் 'தாமட்ரோப்' கருவி என்பது.

1825ஆம் ஆண்டு டாக்டர் பிட்டன் என்ற ஆங்கிலேயர் இதனைக் கண்டுபிடித்தார். இது விளையாட்டுக்கருவியாகவே பயன்பட்டு வந்தது. பின்னர் இதுவே திரைப்படம் தயாரிக்க அடிகோரியது என்றால் மிகையாகாது.



## நகைச்சுவை



**ஒருவர் :-**
"விடியற்காலையில் குளிப்பதற்கும்... விடிஞ்ச பிறகு குளிப்பதற்கும் என்ன வித்தியாசம்"
**மற்றவர்:-**
குளிக்கிறவங்களா.... பார்த்துக் கேளுங்களேன்!"
**ஒருவர் :-**
.........???

**சு.கௌரீஷன்,வவுனியா.**

பணம் இல்லாமல் இருப்பதை விட, அனுபவம் இல்லாமலிருப்பதே பெருங்குறை. - திபெத் நாட்டுப் பழமொழி

## தொடர் - 06

கிழக்கே, தொடுவானம் வரை பரந்து மறைந்த கடல் விளிம்பில் செம்பந்தாய்ச் சூரியனின் தலை தெரியத் தொடங்கிய வேளையில், நைரோபியை அண்மித்தாயிற்று என்று ஒலிக்கருவி கூறிற்று. மணி, ஆறு ஆகிக் கொண்டிருந்தது. குறித்த நேரத்திற்கே அபுதாபியை விட்டுப் புறப்பட்டிருந்தோம். கட்டுநாயக்காவிலிருந்து வந்த முதல் விமானத்தைப் போலவே, இதிலும் முன்னால், காட்சித் திரையில், விமானத்தின் பாதை, பறக்குமிடம், உயரம், வேகம், வெளியே வெப்ப நிலை-என்று கணினி தொடர்ந்து காட்டி வந்ததைப் பார்த்துக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. இடையில் ஒரு குட்டித் தூக்கம். ஒரு சாப்பாடு. 'மரக்கறி' என்று தந்த பிளாஸ்ரிக் பெட்டியில் முதல் நாள் மத்தியானம்-முதல் விமானத்திலும்-தந்த அதே தயாரிப்பு இருந்தது. ஏதோ ஒன்றை-அது மரக்கறி என்று மட்டும் நிச்சயமாய்த் தெரிந்தது- ஏதோ ஒரு எண்ணெயில் வதக்கிய விஷயம் அது. அதுவும் ஏதோ தாவர எண்ணெய்தான்; எதுவாயிருக்குமென்று யோசித்துப் பார்த்தேன், புரிவதாயில்லை. விபரிக்க முடியாத அதன் வாசம். என் வாயை விட்டுப் போகாது என்றும் தோன்றியது. போதாக்குறைக்கு முதல் நாள் பகலின் ஏவறை வந்து முடிய முன்னரே இந்த இரவின் ஏவறையும் சேர்ந்து கொண்டது! பரவாயில்லை, இன்னும் அரை மணியில் இறங்குவதோடு எனக்கும் இந்த எண்ணெய்க்கும் சங்காத்தமே இருக்கப்போவதில்லை என்று ஆறுதல் படுத்திக்கொண்டேன். ஆனால், என் அடுத்த இருபது, இருபத் திரண்டு உணவு வேளைகளி லும் கூட இதே எண்ணெய் எனக்குக் 'ஹலோ' சொல்லிக் காத்திருந்தது. எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை!

இறங்குவதற்காக வட்டமிட்ட விமானம், தடித்துக் கனத்திருந்த மழைப் புகாரைக் குத்திக் கிழித்தே கீழிறங்க வேண்டியிருந்தது. மழை மந்தாரத்தில் மனம் சலித்தது, 'ஏப்ரல்-மே, பெருமாரி' என்ற இணைய விபரம் நினைவில் வந்தது. இன்னுங் கீழே பதிந்து, நிலம் தெரிந்த வேளையில் சற்று முன்தான் மழை பெய்து நின்றதன் சான்றுகள் தெரிந்தன. இந்த மழைக்குள் அகப்பட்டு என்ன பார்க்கப்போகிறோமென்றிருந்தது. காட்டு மழையெல்லாம் தலையில் வாங்கவா இவ்வளவு தூரம் வந்தோம்?

ஆனால், நாங்கள் அங்கிருந்த நாட்களெதிலுமே மழை எங்களைக் குழப்பி விடவில்லை. அது பெய்தது, தன்பாட்டுக்கு; இரவிலும், நாங்கள் விடுதிகளிலிருந்த வேளைகளிலும். அதுகூட அடைமழையில்லை. வெளியே புறப்பட்ட வேளைகளிலெல்லாம், அநேகமாக வெளித்து, சில வேளைகளில் மிக ரம்மியமாகவும் இருந்தன. ஆனால், மஸாஸ்மாறாவிலிருந்து நய்வாஷாவுக்குப் புறப்பட்ட அன்று காலை, முதல் நாளிரவில் பெய்த மழை வெள்ளம், சிற்றாறுகளாய் வழியெங்கும் ஓடிக்கொண்டிருந்ததைத் தாண்ட வேண்டியிருந்தது மட்டுமல்ல; சில இடங்களில் எமது வான் காட்டுத் தடத்தின் கண்டங்களைத் தாண்ட வேண்டியுமிருந்தது. அதைவிட, அதற்கு முன்னரும் பின்னரும், நாங்கள் பயணித்த பல பாதைகளின் இரு மருங்கிலும் பல அடி ஆழத்திற்கு வெள்ளம் பாய்ந்து அரித்த பள்ளங்களையும் காண முடிந்தது. இந்த மண் அரிப்பு, கென்யாவில் ஒரு பிரச்சினை என்கிறார்கள்.




ஜோமோ கென்யாட்டா விமான நிலையத்திலிறங்கிய போது நன்றாக விடிந்திருந்தது. 'கென்ய தேசபிதா' எனக்குறிப்பிடப்படுபவரின் பெயரால், நைரோபி சர்வ தேச விமான நிலையம் அழைக்கப்படுகிறது. கமாவ் என்ஜெங்கி என்ற இயற்பெயர் கொண்ட தலைவரின் போராட்டப் பெயரே ஜோமோ கென்யாட்டா என்பது 'ஜோமோ' என்றால் எரியீட்டி, கென்யாவின் எரியீட்டி! 1889ல் பிறந்த கென்யாட்டா லண்டனில் படித்தவர். அகன்ற ஆபிரிக்க வாதத்தின் வழிநின்று கென்ய சுதந்திரத்திற்கு வழிகோலியவர். 1963ல் சுதந்திர கென்யாவின் பிரதமராகவும் அதற்கடுத்த ஆண்டில் சனாதிபதியாகவும் ஆன கென்யாட்டா விரைவிலேயே ஒரு விமர்சனத்திற்கும் உள்ளானார். பல்வேறு இனக்குழுக்களைக் கொண்ட நாட்டில், அவர் தமது சொந்த இனமான கிக்கியு சார்பாக நடந்துகொள்கிறார் என்றும் முந்திய கொள்கைகளை கைவிட்டு விட்டார் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. என்றாலும் கென்யாட்டாவின் மறைவுக்குப் பின்னர், 1978 ல் கலென்ஜின் என்ற ஒரு சிறிய இனக்குழுவைச் சேர்ந்தவரான அரப்மொய் சனாதிபதியானமை கென்யாவின் இனமுரண் சூட்டை ஓரளவு தணிக்கச் செய்தது.



எங்களை இறக்கி விட்ட விமானம் தொடர்ந்தும் நேரே தெற்கே, தன்ஸானியாவின் பெருநகரான டார் எஸ்ஸலாம் வரை போகஇருந்தது. குடிவரவுப் பகுதியை நோக்கி நாங்கள் நடந்த போது ஒரு பெரிய அட்டை கண்களிற்பட்டது. இலங்கை நண்பர்களே வருக' என அதில் பெரிதாக ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. அதன் பின்னால்- மேலே- பளிச்சிட்ட புன்னகையுடன் ஒரு உருண்டை முகம் ஐரோப்பிய பாணியில் உடை அணிந்திருந்த அஜானுபாகுவான அந்த ஆப்பிரிக்க மனிதனை நோக்கி நாம் கையசைத்ததும், அந்த முகம் மேலும் மலர்ந்தது.

நீங்கள் ஆஃப்ரிக்கன் க்வெஸ்ற்றிலிருந்தா?, நீட்டிய கையைப் பற்றிக்கொண்டே கேட்டேன்.

இல்லை நான் விமான நிலையத்தைச் சேர்ந்தவன் அப்ரிக்கன் க்வெஸ்ற் பிரதிநிதி உங்களுக்காக வெளியில் காத்திருக்கிறார். அப்போது தான் அவர் கோட்டில் பொருத்தியிருந்த பெயர்ப் பட்டியைக் கவனித்தேன். திரு.ஜொனாக்வாம்பாய் விமான நிலைய அதிகார சபை' என்றிருந்தது.

சிலமனிதர்களைச் சந்திக்கிற போது அது என்னதான் முதல்த்தரமாக இருந்தாலும் - நமது சாதி, இனம், மதம், மொழி, தேசம், நிறம்-என்ற அடையாளங்களெல்லாம் மறந்து போய் இதோ இந்த மனிதர் நமக்கு மிகமிகநெருக்கமானவர் என்கின்ற உணர்வு தன்னையறியாமலே தோன்றி விடுகிறது. அப்படிப்பட்ட வகையைச் சேர்ந்த ஒருவராக இருந்தார். க்வாம்பாய் அவருடைய அந்தக் குழந்தை முகமும் வெள்ளைச் சிரிப்பும் காரணமாக இருந்திருக்கலாம்.

தாமதம் இன்றி கடகடவென்று ஒவ்வொரு கருமமாக முடித்துக்கொண்டே போனார் க்வாம்பாய். முதலில் குறிப்பிட்டது போல இரண்டு மூன்று அன்ரிக்களைமாக்ஸ்கள் அரங்கேறின அந்த மிக மெல்லிய மஞ்சள் புத்தகத்திற்காக மேற்கொண்ட ஒரு கொழும்புப் பயணம், இரண்டு தடுப்பூசி அலுவலக அலைச்சல் ஒரு தொலைபேசி அழைப்பு எல்லாம் வீணாகிவிட்ட கவலை எனக்கேற்பட்டது. விஸா பகுதியிலிருந்த பெண் அதிகாரி எமது கடவுச் சீட்டுக்களின் செல்லுபடித் தன்மைப்பற்றித் தான் வடிவாகப் பார்த்தார். விஸா கட்டணம் ஆளுக்கு ஐம்பது அமெரிக்க டொலர் கொடுத்தோம்.கடவுச் சீட்டு பட அளவில் இரண்டு புகைப்படங்களும் தேவை என்று கொழும்பில் கூறியிருந்தார்கள். அவற்றைப் பத்திரமாகத் திருப்பிக கொண்டு வரவேண்டியதாயிற்று!

வெளியே வந்ததும் பச்சைச் சட்டையும் வெள்ளை ஸ்கேட்டுமாய் முகத்தில் கண்ணாடியோடு ஒரு பள்ளி மாணவி போல் தோன்றிய ஆபிரிக்க நங்கை ஒருத்தி எம்முன் தோன்றினார்.

'ஹலோ நல்வரவு' என்றார் முகம் முழுவதும் மலர 'இவர் தான் மிஸ் அலிஸான்டி அஃப்ரிகன் க்ஸ்வெற்ஸஃபாரியைச் சேர்ந்தவர்' என்றார் க்வாம்பாய். அறிமுகங்கள் முடிந்ததும் 'போகலாமா? உங்களுக்காக வாகனம் வெளியே காத்திருக்கிறது' என்றார் அலிஸ். 'ஒரு நிமிசம்' என்றேன் அப்போது தான் என் கண்ணிற்பட்டிருந்த 'கல்ஃப் எயர்' அலுவலகத்தைச் காட்டி 'எங்கள் திரும்பும் பதிவை மீள் நிச்சயம் செய்து விட்டே போனாலென்ன? 'நான்' எப்போதுமே வெளியே போவதிலும் பார்க்க திரும்பும் வழியிலே கவனம் மிக்கவன். நல்ல யோசனை' என்றார் அலிஸ் 'நீங்கள் இனி நைரோபியிலேயே இருக்கப் போவதில்லை. பிறகு போன் பண்ணுவதிலும் இது நல்லது தான்.'

அதை முடித்ததும் அடுத்த முக்கிய வேலை இருந்தது. எம்மிடமிருந்த டொலர்களில் சிலவற்றை கென்ய ஷிலிங்குகளாக மாற்ற வேண்டியிருந்தது. எமது விமானப் பயணக்கட்டணம் உள்நாட்டுப் பயணஏற்பாடு உணவு, தங்குமிடம் எல்லாமே அழைப்பாளர்களின் பொறுப்பு என்றாலும் எம் கைச் செலவுக்கு வேண்டுமே! 'பார்க்ளே' வங்கிக்கிளையொன்றில் எழுபத்தைந்து டொலர்களை மாற்றினேன். நாலாயிரத்து எண்ணூற்றமைம்பது ஷில்லிங் தந்தார்கள் அப்போது டொலரின் வாங்கும் விலை விற்கும் விலை இரண்டுமே கிட்டத்தட்ட 68 ஷில்லிங்குக்கு சற்று மேல் கீழாக இருந்தது. அதாவது கென்யாப் பணம் இலங்கைப் பணத்திலும் ஏறத்தாள ஒன்றரைப்பங்கு மதிப்பு மிக்கது என்பது புரிந்தது. மூன்று நான்கு நாட்கள் கழித்து மீண்டும் கொஞ்ச டொலரை மாற்றிய போது கவலையாக இருந்தது. முதல் நாளே மாற்றியிருக்கலாமே என்று ஏனெனில் நாங்கள் கென்யாவில் நின்ற நாட்களில் டொலரின் பெறுமதி கொஞ்சம் கொஞ்சமாய் கீழே வந்திருந்தது.

(தொடரும்)

## புரிதலும், தெளிதலும்

நாம் இப்போதெல்லாம் நவீன அறிவியல் உலகில் வாழ்ந்து வருகிறோம்.

எங்களில் பலருக்கு வேகமான இந்த உலகில் அதற்கு இணையாக அல்லது சமமாக நடை போடுவதில் ஏற்படுகின்ற போட்டியில் அல்லது வாழ்க்கையில் பலர் பலவற்றைத் தொலைத்து விடுகிறோம்.

இவற்றுள் நாளைய நமது வாழ்வில் நமக்கான இன்றைய தேட்டங்களாக சேமித்து வைக்க வேண்டிய நல்ல விளைவுகளை நல்ல விதைகளை நாட்டிவிடுவதிலிருந்து தவறி விடுகின்றோம்.

அந்த வகையில் இன்றைய இளம் பெற்றோர்கள் மத்தியில் தம்து குழந்தைகளின் வளர்ப்பில் நல்ல பல காரியங்களை நாம் செய்து வைக்க வேண்டிய சேவைகளை செய்து வைக்காமல் விட்டுவிடுகின்றோம்.

### எங்களுக்கும் வழிகாட்டுவார்கள்



இதன் விளைவு நாளை நமக்கான அறுவடையாக நமது கையில் திரும்பி வரப் போவதை சிந்திக்க தவறி விடுகிறோம்.

எம்மைப்பற்றியும் எமது சூழல் பற்றியும் சிந்திக்கும் நாம் எம்மைப் பற்றி நிற்கும் சின்னஞ்சிறு மலர்களைப் பற்றி எவ்வளவு தூரம் சிந்திக்கின்றோம்.

இதில் குறிப்பாக நாம் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் நாம் அவர்களின் நிகழ்காலத்தினை மறந்து விடுகிறோம்.

இதன் விளைவு எமது கற்பனைகள், ஆசைகள் என்பவற்றின் எல்லைகளைத் தாண்டி பிள்ளை வளர்கிற போது நாம் இடிந்து போகின்றோம்.

ஆனால் இதன் கர்த்தாக்களே நாங்கள் தான் என்பதை மறந்து போகிறோம்.

ஏன் என்றால் கருத்து ரீதியாகப் பார்த்தால் பிள்ளைகளின் கருத்துக்களுக்கு எத்தனை பேர் மதிப்பளிக்கின்றோம்.

ஒரு பெற்றோரின் பிள்ளை அந்த பெற்றோரிலிருந்து பல மடங்கு சிறியவனாக இருந்தும் ஏற்கக் கூடிய ஒரு கருத்தை எம்மோடு பகிர்ந்து கொள்கின்ற போது எத்தனை பெற்றோர்கள் அதனை ஏற்றுக்கொள்கின்றார்கள்.

ஆரம்பத்திலேயே எமக்குள் இருக்கும், நாம் பெரியவர்கள் என்ற பெருமையில் அலட்சியப்படுத்தி விடுகிறோம்.

ஆனால் நாம் எத்தனை பேர் ஒரு நல்ல விதையொன்றின் சிறு முளையை மிதித்து விட்டோம் என உணருகிறோம்.

அல்லது இற்றைவரை தான் உணரத் தலைப் படுகின்றோமா?

ஆகவே நாம் இன்றைய நவீன உலகின் இசைவுக்கு ஏற்ப நாம் மட்டுமல்ல நமது பிள்ளைகளும் வளர வேண்டுமானால் நமது பிள்ளைகளின் கருத்துக் களுக்கும் அவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்தே ஆக வேண்டும்.

அது நாம் நல்ல விதை ஒன்றை விதைத்து விட்ட பெருமையை நமக்குத் தந்தே தீரும்.

ஆகவே ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களை நாம் மரியாதையோடு நோக்க வேண்டும்.

ஏனென்றால் அகன்று விரிந்த பென்னம் பெரிய கடலில் திசை தெரியாது தத்தளிக்கும் பெரும் படகிற்கு சின்னஞ்சிறிய விண் மீன்கள் வழிகாட்டுவது இல்லையா அதேபோன்று எங்களுக்கு வழிகாட்டக் கூடிய சின்னஞ் சிறிய பிள்ளை நட்சத்திரங்கள் எங்களுக்குள் வாழ்வார்கள்.

**வேழினி**




## தமிழே நீ வாழ்க

அதிமதுரச் சுவை ததும்பும்
செந்தமிழாம் எம் தமிழை
கொச்சை மொழியாய்
மாற்றியது யாரோ?

திக்கெட்டும் திசையெங்கும்
தித்திக்கும் தேன்தமிழை
அந்நிய மொழி புகுத்தி
அழிப்பதும் தமிழனே.

மணம் பரப்பும் தமிழ் மலரே
மங்கிமடிந்து போகாதே
சிறியவள் நான் வாழ்த்துகிறேன்
பிற மொழி சிதைந்து தடைதாண்டி
தமிழே நீ வாழ்க!

## வாழிய தமிழ்

செம்மையாய் வாழ வழி சொல்லும்
செந்தமிழுக்கு ஓர் முதல் வணக்கம்
முக்கலையும் மணம் பரப்பும்
முத்தமிழே நீ வாழ்க.

நாற்திசையும் போற்றிட
ஞாலம் வணங்கிட
விண்மிசை வளர்ந்து
வாழிய பல்லாண்டு.

பண்பாட்டின் சிகரமாய்
பாரம் பரியத்தின் விழுமியமாய்
திகழ்ந்திட்ட செந்தமிழை
திசை திருப்பியது யாரோ.

தமிழ் அன்னை விசும்புகிறாள்
தமிழனே கேட்கிறதா உனக்கு
செப்பிடுவீர் இனிச் செந்தமிழை
செம்மையாய் வாழ்ந்திடுவீர் தரணியிலே.

செந்தமிழ் என்னும் விளக்கினிலே
சிந்தை என்னும் திரிபோட்டு
தமிழ் மொழி என்னும் நெய்யூற்றி
தமிழை வளர்ப்போம் தமிழ் வாழி!!....

ந.கங்கா



## இறைமையற்ற வாழ்வு

குழந்தைப் பருவத்தில்.
அம்மா சொற்படி-
இல்லாவிடில் அடி.

பள்ளிப் பருவத்தில்.
ஆசிரியர் சொற்படி.
அல்லாவிடில்.முறியும் தடி.

வாலிப பருவத்தில்
காதலி சொற்படி
இல்லாவிடில்
காதலுக்கு சிவப்புக் கொடி.

வாழ்க்கைப் பருவத்தில்
மனைவி சொற்படி
இல்லாவிடில்
நாளும் தலையிடி.

வயோதிபப் பருவத்தில்
பிள்ளைகள் சொற்படி
இல்லாவிடில்
பொருண்மியத் தடை.

அம்மா, ஆசிரியர்.
மனைவி,பிள்ளைகள் எல்லோரும்
அமெரிக்காவானதெப்படி?

ந.அமுர்தநாதன்.

## கண்களை...

கண்களை மூடிக்கொண்டு
நீ திரியாதே.
எங்கள்
கண்களை பிடிங்கிவிட
அவர்கள் திரிகிறார்கள்.
நீண்டதூர பாதையை
காட்டித்தந்த கண்களை
வேண்டாமென சொல்லி
விலக்கிவிடலாமோ மனிதா.

ம்...
சற்று யோசி.
ஒளி படைத்த கண்ணிது
இருளிலும் கூட
எமைக்காத்த கண்ணிது.
இக்கண்கள் இல்லையேல்
எக்கணமும் நாம் நடவோம்.
இக்கணத்தை பயன்படுத்தி
எம்மிலக்கை சென்றடைவோம்.

விழிப்பாய் இருப்போம்.
வீதியிலும்...
வீட்டிலும்தான்..
ஏனெனில்... இக்கண்கள்
எமக்குரியவையே.

யோ.புரட்சி.

### புரட்சி

தடையுடைத்துப்பாயும்
காட்டாற்றுவெள்ளம்.

### உறுதி

சஞ்சலமில்லா உள்ளத்தின்
ரீங்காரம்.

### உண்மை

பொய்மையைச் சுட்டெரிக்கும்
வெஞ்சினத்தீ.

### வீரம்

தன்மானமுள்ளவனின்
தனியாத சொத்து.

ம. பிரியா

# சொல்ல வேண்டி வந்த பொய்கள்

சுதன் ஏழைவயிற்றில் பிறந்தவன். இவன் தனது சொந்த ஊரில் இருந்து ஒழுங்காக படித்து முன்னேறுவதற்கு அப்போதய அவனது குடும்ப வறுமை விடவில்லை. சின்ன வயதிலே விவசாயத்தில் இறங்கிவிட்டான். இரண்டு மூன்று ஆண்டுகள் ஏதோ மாதிரி அவனது குடும்ப நிலை ஓடிக்கொண்டிருந்தது. கையில் பணமும் வர ஆரம்பித்தது. தனது விவசாயத்தை விஸ்தரிப் பதற்காக இருந்த பணத்துடனும் அயலவரிடம் கடனும் வாங்கி விவசாயத்தை விஸ்தரித்தான். சுதன் எதிர்பார்த்த விளைச்சலை விட அதிகம் விழைந்திருந்தது. பெரு மகிழ்வுடன் இருந்தான் சுதன். அறுவடைக்கு சில நாட்கள் இருந்தன.அப்போது அந்நியனின் ஆக்கிரமிப்பால் அந்த நகரமே இடம்பெயரும் நிலை வந்தது. அவ்வேளையில் அவனும் அவனது குடும்பமும் வன்னிக்கு வந்துவிட்டனர்.

மீண்டும் பஞ்சம் அவனை சூழ்ந்தது. நோய் பிணியால் குடும்பம் அவஸ்தைப்பட்டது. சுதனிடம் நின்ற பழைய சைக்கிளை எடுத்துக் கொண்டு நல்ல வெள்ளை சேட்டும் மாட்டிக்கொண்டு கையில் ஒரு சதமுமில்லாது நீண்டு வளைந்து கிடந்த கிரவல் வீதியூடாக சென்று கொண்டிருந்தான்.செழுமை பொருந்திய அந்த விசுவமடு அவனது கண்ணிற்கு புலப்பட்டது. சுற்றும் முற்றும் பார்த்த போது வாழைத் தோட்டம் அவனுக்கு தென்பட்டது. உடனே தோட்ட முதலாளியுடன் கதைத்து, தான் வாழைக்குலை வியாபாரியென அறிமுகப்படுத்தி. வாழைக்குலை எடுக்கவந்ததாகவும்கூறினான். முதலாளியும் வாழைக் குலைகளை வெட்டி நிறுத்து கரியலில் கட்டி விட்டு. கணக்குப்பார்த்து "ஆயிரத்திநானூறு ரூபா தம்பி நீங்கள் ஆயிரத்தி முன்னூறை தாங்கோ" என்று கூறினார்.

எதுவித தயக்கமுமின்றி முதலாளி பார்க்கும் போது தனது சட்டைப் பையை தட்டினான் சுதன் "முதலாளி நான் சேட்டை மாறிப் போட்டுக் கொண்டு வந்திட்டன்.மற்ற சேட் பையில் தான் காசு இருக்குது. வாழைக்குலை இஞ்ச இருக்கட்டும் உங்கட சைக்கிளை தாங்கோ நான் போய் காசு எடுத்துக்கொண்டு வாறேன்" என்றான் சுதன். சுதனுடைய இளையவதனத்தை அவதானித்த முதலாளி "அப் படி எண்டால் வரேக்க தாங்கோ தம்பி" என்றார். உடனே "மிச்சம் சந் தோசம் முதலாளி" என்று கூறிக்கொண்டு அவனது வியாபரத்தை அன்றிலிருந்தே நாணயமாக ஆரம்பித்துக் கொண்டான் சுதன்.

கு.விதுரன்.

# அன்பு கொள்

ஒருவனுடைய சொத்துக்களாகக் கருதப்படுவனஅவனுடைய குணநலன்களேயாகும்.நல்ல குணநலன்களைப் பெறாதவன், வேறு எவற்றைப் பெற்றிருந்தாலும் எதுவும் பெறாதவனாகவே கருதப்படு வான். வாழ்வில் அன்பு செலுத்துகின்றவர்களை மனிதன் சந்திக்கின்ற பொழுது உண்மையான மகிழ்ச்சியடைகின்றான்.

"மனிதனுக்குத் தொல்லைகள் மிகுதியாக அமைவது எப் பொழுது தெரியுமா? அன்பில்லாத மனதைப்பெறுகின்றபொழுதுதான்: அன்பில்லாத நடவடிக்கைகளைமேற்கொள்கின்றபொழுதுதான்" என்று ஹென்றிச்ஷைன் என்பவர் கூறுகின்றார்.

அன்பிற்கு அளவில்லை. அன்பிற்குத் தடையும் இல்லை. அன்பில்லாத மனமும், அன்பு காட்டத்தெரியாத மனமும் சிறப்படைவ தில்லை. அன்பே ஆண்டவன் என்பதன் பொருளும் இதுதான்.

தாயன்புபாசத்தையூட்டுகின்றது. வளரும் குழந்தைகளுக்குச் சிறந்த ஊட்டச் சத்துப்பாலாக அமைகின்றது.

அன்புதான் நட்பை வளர்க்கின்றது. உறவை வளர்க்கின் றது.'அன்பில்லா உடம்பு என்பு தோல்போர்த்த உடம்பு' என்று கூறுகின்றார் வள்ளுவர்.

சர் வால்ட்டிஸ்ரெலே என்பவர் இங்கிலாந்தின் புகழ்பெற்ற அமைச்சராக வாழ்ந்தவர். சுயஸ் கால்வாயின் பங்கை இங்கிலாந் துக்கு மிகுதிப்படுத்திய தனிப்பெருமை அவருக்கு உண்டு. அரசியின் செல்வாக்கைப் போல் அவர் செல்வாக்கும் நாட்டிலே மிகுந்திருந்தது. அவர், "அன்புதான் மனதிற்கே மகிழ்வளிப்பது. நான் அதிகாரம் பெற்றவன்: அரசியல் செல்வாக்குப் பெற்றவன்: செல்வம் உடைய வன். என்றாலும் எனக்கு மனத்துயர் இருந்து கொண்டேயிருக்கின்றது. ஏன்? உண்மை அன்பு என்மீது செலுத்துவோர் எவருமிலர் என்று உணர்கின்றேன். அந்த உணர்வு அவல நிலையை அளிக்கின்றது.எது இருந்தும் அன்பு இல்லையேல் என்ன பயன்?" என்று கூறுகின்றார்.

அன்பு கொள்வதும் அன்பு பெறுவதும் மனக் கவலையை மாற்றும் என்பது உண்மை. எனவே, வாழ்கையில் முன்னேறும் நோக்க முடையவர்கள், உண்மையான அன்பினை எல்லோரிடமும் வேறு பாடற்ற வகையில் கொள்ளுதல் வேண்டும்.அப்பொழுதுதான் எல்லோருடைய அன்பையும் நீங்கள் பெற முடியும்: அன்பினைப் பெற்று வாழ்வில் உயர முடியும்.

எம். கதிரேசன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 58

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | 07 |
| 08 | | | | | | |
| 15 | | | | 19 | 20 | |
| | 23 | 24 | | | | |
| 29 | | | 32 | | | |
| | | | | | | 42 |
| | | | 46 | | 48 | |

பெயர்:-..............................
முகவரி:-..............................
..............................
..............................

### இடமிருந்து வலம்

01. இறைவன்.
06. விழி.
08. உபாயம்.
15. சந்திரனைக்கண்டு மலர்வது (மாறியுள்ளது)
19. நீதிக்கு எதிரானது(மாறியுள்ளது)
32. ஆசை.
48. பொருட்கள் விற்கும் இடம்.

### மேலிருந்து கீழ்

01. வாழை இனங்களில் ஒன்று.
07. மூத்த ஆண்சகோதரன் (குழம்பியுள்ளது)
19. மாதம்.
20. நிறங்களில் ஒன்று.
23. எருது.
24. சண்டை.
29. அன்பு.
42. வெப்ப காலம்.
46. குதிரை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.56 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அகிலம்.
06. கிலி.
10. ஆதி.
41. சக.
44. அம்மா.
47. பாதம்.

**மேலிருந்து கீழ்**

01. அடைக்கலம்.
02. கிராமம்.
06. கிழக்கு.
10. ஆசீர்வாதம்.
11. திலகம்.
14. பகிரங்கம்.
19. வாசனை.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி,இல.58
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி
இல.56 இன் பரிசுக்குரியவர்
செ. செல்வநேசன்,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு,
யாழ்ப்பாணம்.

குறுக்கெழுத்துப்போட்டி
இல.56 இன்,
பாராட்டுக்குரியவர்கள்.

01. மா. தர்சினி, சிவபாத கலையகம், பொன்நகர்,கிளிநொச்சி.
02. மு. புஸ்பலதா, மந்துவில், புதுக்குடியிருப்பு.
03. சூ. அன்னத்தாய், சிவநகர், உருத்திரபுரம்.
04. தி.கனகசபேசன், ஆனந்தபுரம், கிளிநொச்சி.
05. பு.அனந்தன், கிளி/பூ.ம.வி. கிளிநொச்சி.
06. தி. குபேந்திரன், பனங்காமம், மாங்குளம்.

## இலக்கியப் பகிர்வு

தன்முயற்சியில் சற்றேனும் தளராத விக்கிரமாதித்தன் போல தீவிரமான இலக்கிய முயற்சியில் ஈடுபாடு கொண்ட அ.யேசுராசா அவர்கள் மீண்டும் வெளியீட்டுக்களத்தில் குதித்துள்ளார்.

ஏற்கெனவே 'அலை' கலை இலக்கிய சஞ்சிகை மூலமும் 'கவிதை' கவிதை இதழ் மூலமும் இலக்கிய ஆர்வலர்களுக்கு நன்கு பரிச்சயமான அவர் 'தெரிதல்' என்னும் இரு திங்கள் இதழ் மூலம் விஸ்வரூபம் எடுத்துள்ளார்.

காலம் காலமாக "கையைச்" சுட்டுக் கொள்வது போல சிறு சஞ்சிகை வெளியீடுகளில் ஈடுபடுவதும் அம் முயற்சி வெற்றி அளிக்காத போது இலக்கிய காரர்களை இலக்கியத்துறையினை திட்டித் தீர்த்துக் கொண்டு சோர்ந்து போய்க் கிடப்பதும் சிறு சஞ்சிகை வெளியீட்டாளர்கள் அல்லது அதனோடு ஒத்தவர்களின் இயல்பாகிவிட்ட



# "வாருங்கள் சேர்ந்து வடம் பிடிப்போம்"

சூழ்நிலையில் யேசுராசாவின் போக்கு வேறுமாதிரியானது.

ஏற்கெனவே அவரால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியடைய வில்லை. என்றாலும் கூட அவர் சோர்ந்து போகாமல் மனம் தளராமல் மீண்டும் தொடங்கும் மிடுக்காக புறப்பட்டு உள்ளது போற்றுதற்குரியது மட்டுமல்ல, பின்பற்றப்பட வேண்டியதும் ஆகும்.

சோம்பி இருந்து புலம்பித் தீர்ப்பதை விடுத்து ஒரு சிலரையாவது நல்ல இலக்கி யங்கள் தொடர்பில் அக்கறை கொள்ள வைக்க இது போன்ற நடவடிக்கைகள் பயன் தரும். "சஞ்சிகைகளையோ புத்தகங் களையோ விருப்புடன் வாங்குவோர் குறை வாகவுள்ளனர். திணிக்க வேண்டிய பரிதாப நிலை" இந்த ஒடுங்கிய நிலையை மாற்ற வேண்டிய தேவை கலை இலக்கியத் துறை சார்ந்தோராலும், அமைப்புக்களாலும் இன்னும் சரியாக உணரப்படவில்லை.

இச் சூழலில்தான் தெரிதல் வெளி வருகின்றது. தெரிதல் என்றால் தெரிந்து கொள்ளுதல், தெரிவு செய்தல், ஆராய்தல் முதலிய அர்த்தங்களுண்டு.

புதியவாசகரை குறிப்பாக இளை ஞர்களைச் சென்றடைந்து அவர்களுடன் தொடர்பாடல் செய்யும் முயற்சி.

கலை இலக்கியத்தவல்களை இரசனையை விமர்சனப் பார்வையை வழங்கி புதிய வாசகர்களாக விழிப்பு நிலை கொண்டவர்களாக உருவாக்கும் ஓர் எத்தனம்.

வழமையான சிறு சஞ்சிகைப் பாணியிலிருந்து விலகி சுருங்கிய அளவில் இலகுத் தன்மையுடன் விடயங்களைப் பகிர்ந்து பார்க்கும் ஒரு பரிசோதனை.

நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். நீங்களும் பகிருங்கள் மொத்தத்தில் சமூகப் பகிர்வு நிகழட்டும்.

என 'தெரிதல்' குறிப்பிடுவது அதன் லட்சிய வேட்கையை வெளிப்படுத்துகின்றது.

எட்டுப் பக்கங்களுடன் கவிதைகள், இலக்கியத் தகவல்கள், கட்டுரைகள் என பல்வேறு விடயங்கள் உள்ளன. என்றாலும் படித்து முடிக்கும் போது ஒருவித தாகம் மேல் எழுவதைத்தவிர்க்க முடியவில்லை. இன்னும் வாசிக்க விடயங்கள் வேண்டும் போல உள்ளது.

சிறு சஞ்சிகையாகவும் இல்லாமல் பத்திரிகையாகவும் இல்லாத ஒரு தன்மை தென்படுவது ஒன்றும் பிழையான விடயம் அல்ல, இதுவே புதிய அனுபவங்கள் புதிய எல்லைகளை நோக்கி எம்மை பயணிக்கவும் வைக்கலாம்.

எட்டுப்பக்க விடயங்கள் என்றாலும் இலக்கியச் சர்ச்சையை விவாதங்களைக் கிழப்பிவிடக் கூடிய இரண்டு மூன்று விடயங் கள் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சிதம்பரன்**

## படித்ததில் பிடித்தது

முகவரி
உயர்திரு
குறிஞ்சிக்கிழவன்
கடல்விழுங்கிய இலெமூரியா
(ஈழத்திற்கு மிக அருகில்)
பழந்தமிழ்நாடு.

*என்அன்புயிர்த் தாத்தா முருகன்*
*அவர்களுக்கு....*
*உங்கள் அன்பிற்கினிய*
*நாத்திகப் பேரன்*
*அறிவுமதியின்அன்பு வணக்கங்கள்.*

*தாத்தா!*
*என் தொப்புட் கொடியின்*
*தூரதூரதூரத்துச்சொந்தமே*
*மூத்தோர்வழிபாட்டின் மு... மைச் சான்றே!*
*தமிழினக்காப்பே!*


*தெரியுமா தாத்தா?*
*உன் இரும்புவேல்*
*தங்கவேல் ஆயிற்று!*
*உன்*
*முருகன் என்கிற அழகுப்பெயரில் கூடிற்று...*
*கூடிற்று....*
*ஸ்ரீமுருகனாக...ஸ்ரீகார்த்திகேயனாக...*
*ஸ்ரீசுப்பிரமணியனாக...*
*ஸ்ரீ பால சுப்பிரமணியனாக*
*ஸ்ரீஆறுமுகனாக...*
*பற் பால சுப்பிரமணியனாக*
*ஆகமொத்தம் கந்தபுராணமாக...*
*கூடிற்று... ஒட்டடையாகக் கூடிற்று...*

*கந்தபுராணமா தாத்தா நீ...*
*செந்தமிழினத்தின் சீரியவரலாறு*
*தாத்தா நீ!*
*வரலாறுகளைப் புராணங்களுக்குள்*
*அமுக்கி...*
*நம்மை அடிமைகளாக்கிய*
*நம்பிக்கைத் துரோகிகள்*
*உனதுவரலாற்றை எப்படியெல்லாம்...*
*என்னவெல்லாம்*
*செய்திருக்கிறார்கள் பார்தாத்தா!*
*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும்*
*முன்னதாகவே*
*தமிழனாகப்பிறந்த உனக்கு....எட்டாம்*
*நூற்றாண்டு*
*வாக்கில்...எங்கிருந்தோ...எவரோ...*
*தூக்கிவந்த ஒரு பொம்மை*
*அண்ணனாக்கப்பட்டிருக்கிறது!*
*தமிழர்கள்,நீவேல் கொடுத்த*
*உண்மையை மறந்துவிட்டார்கள்*
*பால்குடித்தபொய்யைமட்டுமே*
*ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்!*
*அன்றுமட்டுமன்று...*
*இன்னும்...இன்றும்கூட....*
*உன்வரலாறு திருடப்படுகிறது.*
*உன்ஆயுதம்வேல்...*
*நீவேலுப்பிள்ளை...நீ வேலாயுதன்...*
*அதுதானே தாத்தா உண்மை!*

*ஆனால் அண்மையில் உனது*
*ஓவியக்கையில்*
*சூலாயுதம் தரப்பட்டிருக்கிறது!*
*திட்டமிட்டு...திட்டமிட்டே தரப்பட்டிருக்கிறது.*
*தாய்த்தமிழ்நாட்டில்...*

*ஒருதமிழனுக்குக்கூட*
*உணர்ச்சிவரவில்லையே தாத்தா!*

*கடல்கடந்த நாடுகளில்தமிழர்கள்*
*மட்டுமே*
*உணர்ச்சிபூர்வமாக உன்னை மதித்து*
*போற்றுவதாக அறிகிறேன்*
*தாய்மொழி மறந்து தமிழர்கள் கூட*
*மொரிசீயசுத்தீவில் உன்னை இன்னும்*
*முதன்மையில் வைத்து*
*வணங்குகிறார்களா மேதாத்தா*




*உன்னை ஓரங்கட்ட அங்கே ஒருசாமியார்*
*சூழ்ச்சி செய்தபோது,*
*அவரையே ஓரங்கட்டி விட்டார்களாமே*
*தாத்தா!*

*புரிகிறது.எனென்றுபுரிகிறது!*
*கடல்கடந்த தமிழர்களுக்கு மட்டுமே*
*தமிழன் என்கிற*
*உணர்வு இருக்கிறது.*
*தமிழருக்கான தன்மானம் இருக்கிறது.*
*தமிழருக்கான வீரம் இருக்கிறது.*

*அதனால் தானே தாத்தா*
*இங்கே என்பேரன் பேத்திகள்*
*பழைய புறநானூற்றை பத்து*
*மதிப்பெண்களுக்கும்*
*பதினைந்து மதிப்பெண்களுக்குமாகப்*
*படித்துக்கொண்டிருக்கையில்...*
*அங்கே என்பேரன் பேத்திகள்*
*பத்துவயதிலும் பதினைந்து வயதிலுமாகப்*
*புதிய புறநானூற்றை*
*எழுதிக்கொண்டிருக்கிறார்கள்!*
*அன்று புராணம் சூழ்ச்சியால் வெல்ல*
*உன்னைத் தம்பியாக்கியது.*

*இன்று சூழ்ச்சியைவெல்ல வரலாறு*
*ஒருதம்பியை உருவாக்கியிருக்கிறது*
*எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்*
*தாத்தா!*
*நீவேலுப்பிள்ளை*
*அவன்வேலுப் பிள்ளையின் பிள்ளை.*

*மடல்பார்த்த மகிழ்ச்சியில் தாத்தா*
*என்னைப்பார்க்க அவசரப்பட்டு*
*கையில்ஆயுதத்தோடு வந்துவிடாதே.*
*கடல்எல்லையைத் தாண்டி வருகிற போதே நீ*
*கைது செய்யப்படுவாய்!*

*அபபுறம் என்ன? சிறப்புமுகாம்தான்!*
*எந்தஊரில் போடுவார்கள் என்கிறாயா?*
*லோயுதம்தானே வைத்திருப்பாய்.அதனால்*
*வேலூர்தான்!*

*அதற்காக வெல்லாம் அஞ்சாதே!*
*தாத்தா...எதுநியாயமாக உணர்கிறோமோ....*
*எங்கேநியாயம்*
*இருப்பதாகத் தெரிகிறதோ... அங்கேநம்*
*ஆதரவை*
*தமிழ்த் தெளிவோடும்... மனத்தெளிவோடும்...*
*மனிதத்தெளிவோடும் உச்சரிப்போம்.*

*மரணம்தூசு, மரணம்தூசியிலும்தூசு*
*வாழ்வை நேசிப்பவர்களை...*
*வாழ்விற்காகப்போராடுபவர்களை...*
*உரிமைக்காக ஆயுதம் ஏந்தியவர்களை*
*வாழ்த்துவோம்.*

*ஒவ்வொரு இனக்குழுதெய்வமும்...*
*ஒவ்வொரு காலகட்டத்தில்*
*உரிமைக்காக ஆயுதங்கள்தூக்கியவைதாம்!*

*அன்றுநீயும் ஏதோஒரு தமிழினஎதிரியை*
*எதிர்த்துத்தான்*
*ஆயுதத்தைப் பயன்படுத்தியிருக்கிறாய்.*
*அதனால்தான்,*
*தமிழினம் உன்னை இன்றும்நன்றியோடு*
*வழிபடுகிறது!*

*காரணம் தெரியாமலேயே உன்ஆயுதம்*
*போற்றப்படுகிறபோது...*
*தாத்தா இந்த இடத்தில்மடலை முடித்துக்*
*கொள்ளலாம் என்றுநினைக்கிறேன்.*

**அறிவுமதி.**

## பொறுக்கி எடுத்த பூக்கள்

### அழகும் ஆற்றலும்

மயில் ஒன்று தன் அழகிய தோகையை விரித்தபடி நடந்து வந்தது தனது தோகையின் அழகில் அதற்குப் பெரும்கர்வம் அந்தக் கர்வத்தில் தன் எதிரேவந்த கொக்கைப் பார்த்து 'பாவம்நீ... உன்சிறகுகள் என்னைப் போல் மினுங்கும் வண்ணம் ஏதுமின்றி வெறு மனே வெளிறிப் போயுள்ளதே' என்று கூறி அதைப் பரிதாபமாக பார்த்தது.

மயிலை நிதானமாக பார்த்த கொக்கு பின்னர். உன்தோகை அழகானது தான். ஆனால் அதை வைத்துக்கொண்டு உன் னால் வான்முட்ட உயரப்பறக்க முடியுமா என்னைப்போல்.....? என்னிறகுகளுக்குரிய ஆற்றல் உன் சிறகுகளுக்கு கிடையவே கிடையாது - என்றது.

### எனது சிறுகதைகள்

"மனித வாழ்வில் மகத்துவங் களை, மேன்மையான செயற்பாடுகளைத் தரிசிக்கும் போது பரவசம் உண்டாகிறது. மனதைத் தொட்டு உள் அமிழ்ந்தாலும், அடங்கிப்போகாது மீண்டும் குமிழியிட்டு மேல் வந்து மனப்பரப்பில் வியாபிக்கின்றது. சிந் தனையை தூண்டி புதிய அனுபவங்களைத் தருகின்றது. தானே அழித்து அழித்து எழுதி புதிய உருவை எடுக்கின்றது. இந்த உணர்வுகளின் பயன்பாட்டை மற்றவர்களுக் கும் தொற்ற வைக்கும்முயற்சிதான் எனது சிறுகதைகள்"

காற்றோடு போதல் - தொகுதி முன்னுரையில், எழுத்தாளர் சுதாராஜ

### மாவீரன்

இது-
உயிருக்கு வந்த
சாவு அல்ல....
சாவுக்கு
வந்த
உயிர்.

#### புத்துயிர்

போராளிகள்
செத்துக் கொண்டிருக்கும்
மண்என்றார்கள்
என்மண்ணை
திருத்தினேன்-
போராளிகள்
பிறந்து கொண்டிருக்கும் மண்.
-காசிஆனந்தன்

### தமிழன்

தன்னுடைய தெல்லாம்
தாழ்வென்று ஒதுக்குகிறான்
அந்நியரின் அழுக்கையும்
அழகென்றுதொழுகிறான்!
அகம் இழந்தான் புறம் இழந்தான்
ஆன்மாவை விற்றுவிட்டான்!
முகம் இழந்தான் தன்னுடைய
முகவரியை தொலைத்துவிட்டான்!
-அப்துல்ரகுமான்

### மாறுபார்வை

தீமை செய்தவனை பழிவாங்க விரும்புகிறாயா? விரைவில் பழிவாங்கும் எண்ணத்தை அலட்சியம்செய்துவிடு அதுதான் பழிவாங்குதலிண் ஆரம்பம் மன்னித்துவிடு. அதுதான் பழிவாங்குதலின் முடிவு. -குவார்லஸ

ஒருமனிதன் உரு செயலைச் செய்யவேண்டாமென்று நீ கருதினால் அதைப்பற்றி அவனை நீ அதிகம் பேசும்படி செய். ஏனெனில் மனிதர்கள் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறார்களோ, எதைப்பற்றிப் பேசுகிறார்களோ....அந்த அளவுக்கு அவர்கள்செயற் படுவதில்லை.

-கார்லைஸ்

### கொஞ்சம் சிரிக்கலாம்....!

அதிகாரி:
நான் லஞ்சம் எல்லாம் வாங்க மாட்டேன்...
லஞ்சம்கொடுக்க வந்தவர்:
இப்ப நீங்கள் இதை வாங்குறீங் களா அல்லது நான் மேலதிகாரிகளுக்கு இதைப்பற்றி புகார் கொடுக்கட்டுமா?
அதிகாரி....??
அரசியல்வாதி:
என்வேலை பேசுவது.... உங்கள் வேலை கேட்பது புரிகிறதா?
வாக்காளர்:
அப்ப இரண்டுபேருமே வேலைமினக் கெட்ட வேலைதான் பார்க்கிறோம் என்று சொல்லுங்க.

பொறுக்கி



# மாறுங்கோ!

சிவேந்திரன்

ஞாயிறு பத்திரிகையை கையில் எடுத்ததும் முதலில் சிறுகதையைத்தான் பார்ப்பன். அன்றும் பக்கங்களை அவசரமாக புரட்டுகையில் "ஜப்பான் முகாமைத்துவத்தின் ஐந்து முறைகள்" என ஜெயக்காந்தன் தெளிவாக விளக்கி எழுதியிருந்தார். என் எண்ணங்கள் சிறகடித்தன.....

உருவத்தில மட்டும் ஜப்பான் சைஸாயி இரு.செயற்பாட்டில இருந்திடாதே, எண்டு அண்ண என்ன பேசினவர், எங்கட தாத்தாவ ஜப்பான் மணியம் எண்டுதான் ஊருல சொல்லுறவையாம். அந்த ஆள் உருவத்தில மட்டும் இல்ல செயற்பாட்டிலையும் எறும்பாய் குடுகுடு எண்டு வேலை செய்வாராம்.முயற்சியால முன்னுக்கு வந்த மனிசன் எண்டு ஊரில நல்ல மரியாதையாய் இருந்தவராம். அம்மா அவ்வப்போது தன்ர அப்பாவை இப்படித்தான் நினைவு கூறுவா.

ஜப்பான் முகாமைத்துவம் பற்றி என்ர பிரண்ட் அடிக்கடி என்னுடன் கதைத்துக் கொள்வா ஜப்பானில முதலாளி தொழிலாளி எண்ட வர்க்க பேதங்கள் இல்லாத மனிதத் தன்மையான நிர்வாகக் கட்டமைப்பு முறை எண்டத அவர் மூலம் தான் அறிஞ்சன். எங்கட தேசத்திலையும் இப்பிடி ஏற்றத்தாழ்வு அற்ற நிலை வந்தால் எங்கட சமுதாயமும் உருப்படும் என அவா ஆதங்கப்பட்டுக்கொள்வா.

ரஷ்ய தாய் நாவலில வருவது போல எங்களிட்ட வர்க்க முரண்பாடுகள் இல்லைத்தான் ஆனா நான் மேலாளர் எண்டு மேதாவித்தனமான இயல்புகளோட எங்கட மண்ணில பொஸ்மார் இருக்கிறார்கள்தான்.

ஜப்பான் எமது தாயகத்தில் தனது சுவடுகளை நேரடியாக வைக்க தொடங்கிய பிறகு ஊடகங்கள் ஒரே முழக்கந்தான். நானும் பிரண்டும் இது சார்ந்து விவாதிப்பதில் ஜப்பான் பற்றி மேலும் மேலும் அறிய ஆவலால் எம் தேடல் மட்டும் தொடரவில்லை விவாதங்களுமே தொடர்ந்தன.

நாகஸாயி, குரோசிமா மூலம் தான் எனக்கு ஜப்பான் பற்றிய முதல்அறிமுகம். அணுகுண்டு வீச்சால் இரு பெரும் கைத்தொழில் நகரங்களும் நிர் மூலமாக்கப்பட்டபின் ஜப்பான் ஆட்டம் கண்டாலும் வீழ்ந்து விடவில்லை. அவர்கள் விடா முயற்சியால் விண்தொட்டு நிற்கின்றார்கள். தனது மதிநுட்பமான அணுகுமுறையால் அணுகுண்டு வீசிய நாட்டை அன்பால் அரவணைத்து அதன் செல்லப்பிள்ளையாய் தவழ்கின்றது.

உலகில் ஜப்பான் தொழில் நுட்பம் முன்னணி வகிக்கின்றதென்றால் அவர்கள் எல்லா விடயங்களிலும் காட்டும் வேகம்தான் எங்கும் எதிலும் ஜப்பான் பொருட்களையே தேடி வாங்குகின்றார்கள்.

என்ர அண்ணான்ர நான்கு வயது மகன் "அப்பா, எல்லாத்திலையும் ஜப்பான் பொருட்கள்தான் அச்சா எண்டு சொல்லுறீயள். ஏன் ஜப்பான் மீன் மட்டும் கூடாது எண்டு றீயள் அந்த பிஞ்சுக்கே ஜப்பான் தொழில் நுட்பம் எப்பிடி பதிந்திருக்கு எங்கட தேசத்திலையும் ஜொனி மிதிவெடி, பசீலன், குமரப்பா எண்டு எறிகணைகளை உருவாக்கி இருக்கின்றார்கள். நாங்களும் தேசம் விடியேக்க் தொழில் நுட்பத்தில் நல்ல நிலேல இருக்க வேணும்.

"கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராமல் அனைத்துத் துறைகளிலுமே வளரவேண்டும் என்பதில் நான் அக்கறையாக உள்ளேன்." என்ற தலைவரின் கருத்தை எல்லோரும் சிந்திக்க வேணும்.யூத மக்களும் போரின் கொடுமையினை அனுபவித்தார்கள் ஆனால் இன்று அவர்களின் எழுச்சியும் வளர்ச்சியும் எங்களையே வியக்க வைக்கவில்லையா?

இப்படித்தான் ஏதாவது வாசிக்க எடுத்தால் அது சார்ந்து கற்பனைக் கோலங்கள் என்னை வட்டமிடும் "தம்பி விம் இருந்தால் தருவிங்களா?" குரல் கேட்டு கோலங்களை அழித்து விட்டு கோலுக்கு வந்தேன்.

உருவத்தில் தமிழனாய் உ[illegible]த்தில் தமிழனாய் என் மதிப்புக்குரியவர்களில் ஒரு வரான அவர் புன்னகை தவழ என் பதிலுக்காய் "இருங்கோ மாஸ்ரர்" எடுத்துக் கொண்டு வாறன்.

நன்றியுடன் விடைபெற்றார். ஆனால் என்னிலிருந்து விடைபெறவில்லை.

எங்கட நிறுவனத்தால மாதாந்த சஞ்சிகை வெளியிடப்படுகிறது எங்கட நிவாரணம் போல இழுபட்ட நிலைதான் ஆனா அது ஒரு நிவாரணி இப்ப சஞ்சிகைக்கு சஞ்சீவிமாதிரி ஒருதர் வந்திருக்கிறார்.இப்ப டொஸ் ஒழுங்காய் கிடைக்குது. சண்டை தொடங்கினால் தூவானம் தட்டுதோ தெரியாது.

எனக்கு இலக்கிய ரசனை இருக்கு. எங்கட பொஸ் போல ஆழமாய் இல்ல. சஞ்சிகையில் நான் முதலில் பார்ப்பது "வரவேற்பு கவிதை" அது மூலம் தான் மாஸ்ரர் தெரிஞ்சு கொண்டன்.

அது ஒரு போர்க் காலம் எல்லைப்படைகளாய் எல்லையில் எம்மவர் நிறுவனத்துக்கு உடல் நிலை இயலாதவர்கள் மட்டுமே வருகை. மாஸ்ரர் நல்ல உடல் உள ஆரோக்கியமானவர் ஆனா அவரது பணியில் முக்கியத்துவம் கருதி எல்லைக்குப் போக சந்தர்ப்பம் அளிக்கப்படேல அந்தாள எல்லைக்கு விடாமல் நிறுவனத்தின்ர சில கிளைகள இழுத்து மூடவேண்டிய நிலையை உணர்ந்தவராய் எங்கட பொஸ்..

மாஸ்ரரின் முகம் தெரிய முதலே கவிதை மூலம் அகம் பார்த்து விட்டன். முகம் பார்த்தால் அகம் பார்க்கலாம் அதுவும் முழுமையாய் பாக்கேலாது. நான்சொல்லேல உளவியலின் தந்தை சிக்மன் புரைட் சொல்லி இருக்கிறார்.

கவிதைகள் எனக்கு பிரியமானவை ஏதோ எழுதுவன் என்ர உரைவீச்சை கவிதை எண்டு எங்கடையள் தேவைப்படுத்துகின்றார்கள். எப்பதான் பொஸ்சிட்ட அறுவை வேண்டுகிறதோ தெரியாது அந்தாள் ஒரு நாள் சொல்லிச்சு "கவிதை எண்டால் எனக்கு விருப்பம்" கவிதை என்டால் எண்டத அழுத்தி அந்தாளின்ர பாணியில சொன்னார். அதுக்கு பிறகு கவிதை எழுதுறத குறைச்சிட்டன்.

கவிதை என்றால் என்ன? இது ஒரு சர்ச்சைக்குரிய கேள்வியே ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடை கூறுவர். சரியான விடை என்றால் மேற்கூறிய அனைத்தும் சரி எண்டுதான் கூறவேணும். பிக்காசோவின்ர ஞாபகத்தால் வருவது அந்தாளின்ர ஓவியத்திற்கு ஆளுக்காள் அர்த்தம் சொல்லியிருக்கிறாங்கள். அந்தாள் சொல்லிச்சு அதின்ர அர்த்தம் அது வரைஞ்சவருக்கு மட்டும் தான் தெரியும் எண்டு அதைப்போலதான் கவிதையும்.

எங்கட பொஸ்சின்ர அறிவு எல்லையிட முடியாத ஆழம் அந்தாளின்ர முகம் பார்த்த எனக்கு பழைய சினிமாப்படம் தான் நினைவில் வரும் " உள்ளத்தின் கதவுகள் கண்களடா" உண்மேலே அந்தப் பாட்ட அந்தாளிலதான் பரிசோதிச்சுப் பார்த்தான்.அந்தாளின்ர அறிவு போலத் தான் கூர்மையான விழிகள். இலக்கியத்தில பெண்களை வேல் விழி,வாள்விழி எண்டு வர்ணித்திருப்பத பாத்த எங்கட அண்ண "என்ன டாப்பா விசர் வர்ணிப்பு" எண்ட நானும் அவரோட சேர்ந்து ஆமாப் போடுவன். ஆனா இந்தாளின்ர விழிகளை சந்திக்கேக்க ஆமாப் போட்டது தப்பாய் போனது. எண்டத விளங்கிக் கொள்வன். அந்தாளின்ர தீர்க்கமான தீர்க்க தரிசனமான பார்வையே எண்ட நிறுவனத்த பாதுகாக்குது. அந்தாளின்ர தீட்சன பார்வையை சந்திக்கும் போதெல்லாம் விவேகானந்தர் என் கண்களில் வந்து செல்வார்

மீண்டும் மாஸ்ரர் என் மனதில் "கவி சொட்டச் சொட்ட பாடி கபிலர்" எண்டு சேக்கிழாரர வர்ணித்திருப்பத அறிந்துள்ளேன்.

சேக்கிழார் ஒரு மந்திரி. எங்கட கந்தையா மாஸ்ரரும் ஒரு மந்திரி மாதிரித்தான் எங்கட பொஸ்சுக்கு ஆலோசனை வழங்குவதில் மாஸ்ரர் சாணக்கியர்தான் எங்கட நிறுவனக் கூட்டங்கள் நடக்கின்ற போது பொஸ்சுக்கு அருகே துவாரபாலகர் போல மாஸ்ரரும் எங்கட சஞ்சிகை ஆசிரியரும் இருப்பினம்.

பொஸ் மனு நீதி கண்ட சோழன் போல கலந்துரையாடி சிறப்பிச்சுக் கொண்டிருப்பார். தன்ர கதைக்கு ஆமாப்போட அடிக்கடி மாஸ்ரர் அழைத்துக் கொள்வார். மாஸ்ரர் மந்திரியாய் அவ்விடயத்திற்கு ஏற்ற மாதிரி அருமையான முடிவுகளைச் சொல்ல பொஸ் மட்டுமில்ல நாமும் மனசார ஏற்றுக்கொள்ளுவம்.

அடுத்த துவார பாலகர "பொஸ்" தன்ர கதைக்குள் எடுத்தால் பொஸ்சுக்குள் மறைத்துக் கொண்டு தன்ர ஒரு கையால தன்ர இரு கண்களையும் பொத்தி வெட்கப்படுவார். என்ர அக்கான்ர மகள் ஆர்த்திகா நினைவில கோடிடுவாள் அவளில தான் நான் மிகச் சரியான 'சையை' கண்டன் எண்டு நினைச்சது தப்பாய் போய்விட்டது. சிரிப்புத்தான் வரும். பொஸ் முன்னுக்கு இருப்பதை உணர்ந்தவர்களாய் நாம் எந்தப் பிரதிபலிப்பும் இன்றி இருப்பம். கூட்டம் முடிந்ததும் மந்திரியாய் இருந்த மாஸ்ரர் முல்லாவாய் மாறிவிடுவார்.

அந்தாளின்ர கவிதையை விட்டு விட்டுட்டுப் போறன். அது என் நெஞ்சை விட்டு அகலுதில்லையோ என்னவோ? அந்த கவித்துவமான கவி வரிகள் என் உள்ளத்தைத் தொட்டு நிற்கின்றது. எல்லை காக்கும் யுத்தத்திற்கு தன்னால் போக முடியவில்லையே எண்டு மிகுந்த வேதனையில் வடித்த கவிதை அது. அவரின் வேதனை நியாயமானது தான் ஆனால் அவர் சார்ந்த பெரிய ஒரு கடமை காத்திருக்கிறது கடமையில் கனதியை அனைவரும் புரிந்துள்ளோம் அவின் கவலையினைத் தாங்கி அவர் கடமையில் சிறப்பாக மிளிர கரம் நீட்டினோம். நீட்டுவோம் என எண்ணங்கள் வண்ணமிடுகையில்.

மீண்டும் அதேகுரலில் அழைப்பு "தம்பி கொஞ்ச புளி தருவீர்களா?". "இருங்கோ மாஸ்ரர்," எடுத்து வாறன். சிக்கல் அற்பபடிஸ்மானாய் நன்றி கூறி சென்றார். ஆனால் அவரின் செம்மையான வழிநடத்தல் நோக்கி சிறகடித்தேன்.

அந்தாள் எல்லா விசயங்களிலும் நிபுணன் எண்டபடியால்தான் நாங்கள் அவரை மாஸ்ரர் எண்டு கூப்பிடுறநாங்கள்.அந்தாளின்ர வயச விட அறிவு மூன்று மடங்கு, நகைச்சுவை ஆறு மடங்கு, நண்பர்கள் வட்டம் ஒன்பது மடங்கு.

அந்தாள்தான் நிபுணனாய் இருப்பதா எண்ணி பெருமை அடிக்கிறேன். அந்தாள் 'பொஸ்'ஸ நிழலாய் தொடர்வத பார்த்து எங்கடயள் சிலது நக்கலாய் சிரிக்குங்கள். இதுகளுக்கு எங்க விளங்கப் போகுது மாஸ்ரர் எங கட நிறுவனத்திலையும் பொஸ்சிலை யும் வைச்சிருக்கிற கருசினைய.

ஜப்பானியன்ர வாழ்க்கை முறையை நான் மாஸ்ரில் தான் காணுறன் எவ்வளவு தகுதியான உத்தியோகத்தில இருந்த போதிலும் எளிமையாய் இருக்கிறார். அறிவின் அதியுயர்ந்த பன்பாக பிறப்பதுதான் எளிமை தன்னலமும், தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகின்றது.

இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பானமனிதராக ஆக்கியிருக்கிறது. என்ற தலைவரின் சிந்தனை என் சிந்தனையில் வந்து சென்றது.

இப்ப போர் ஓய்வுக்காலம்; எல்லோரும் எல்லா இடமும்சென்று வரலாம்; பிற நிறுவன பொஸ்மாரின் வருகை அடிக்கடி எங்கட நிறுவனத்தில் அவர்களின் சந்திப்பு சில வேளை நாட்களாகவும் தொடரும், விருந்துடன் எம் பொஸ்சின் நட்பு பகிரப்படும். அதற்கான உணவு ஒழுங்கு படுத்தலில் மாஸ்ரர் மூழ்கிவிடுவார். பாத்திரம் கழுவுவதில் இருந்து "ருத்பிக்" மேசையில் வைப்பது வரை அந்தாள் பம்பரமாய் சுழலும். எங்கட வானவில் பொஸ்மார் மத்தியில் அந்தாள் வளர்பிறையாய் வலம் வருவார். மாஸ்ரர் மட்டுமில்ல எங்கட சஞ்சிகை ஆசிரியரும் கிட்டத்தட்ட இவரைப் போலதான் ஆனா இவருக்கு வயசு போனதால கொஞ்சம் உடல் அசைத்து வேலை செய்ய ஏலாது. பிற நிறுவன சந்திப்பில் அவர்களுடனான உறவுப் பாலத்தை உறுதியாக்குவார்கள்.

ஜப்பானிஸ் மாதிரித்தான் எங்கட மாஸ்ரர் தன்ர நிறுவன வாழ்வியலை நடத்துகிறார். எங்கட நிறுவனம் மென் மேலும் வளர ஒரு ஜப்பான் மாஸ்ரர் போதாது.எல்லாரும் ஜப்பானிஸ்ஸாய் மாறவேணும். உடைகளின் வெளிநாட்டு மோகம், நல்ல விசயங்களை எடுங்கோ எண்டால் அந்நிய கலாச்சாரம் எதுக்கு எண்டு வரட்டுக் கெளரவம் பேசுவினம் எங்கட உத்தியோகத்தர்கள்.

ஜப்பானிஸ் மாதிரி இருங்கோ எண்டு எங்கடையளுக்கு சொன்னான் "போராசிரியர் சன்முகதாஸ் கொண்டு வகுப்பு ஒழுங்கு படுத்து என்ன மாதிரி எண்டு பாப்பம்" என்டிச்சுதுகள் இதுகளைக் கொண்டுபோய் எந்த வீஸ்ரில சேக்கிறதோ தெரியாது? முகாமைத்துவத்தில் ஜப்பானிஸா மாறுங்கோ,மாஸ்ரராய் மாறுங்கோ, ஜப்பானிஸா மாறுங்கோ மாஸ்ராய் மாறுங்கோ, எண்டு என்ன அறியாமலே என் வாய் உச்சரித்தது.

எவரால் மனித இனத்துக்கு நன்மை ஏற்படுகிறதோ, அவரே மனிதரில் சிறந்தவர். - முகம்மது நபிகள்

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிருச்செந்திநாதன்

எங்கள் வளங்களில் நீர் முதன்மையானது. எங்களுக்கு மாத்திரம் அல்ல உலகத்திற்கே நீர் பெறுமதிமிக்க பொருண்மிய வளம் தான்.

ஆனால் உலகின் நீர்வளம் பெரிதும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக சொல்லப்படுகிறது. தூய தண்ணீர் என்பது உலகளாவிய ரீதியில் பவுணைவிட பெறுமதியாகிவிட்டது.

தூய நீர் என்பது கண்டமான ஒரு பொருளாக மாறியமைக்கு



பிரதான காரணம் நீர் மாசடைவதுதான். ஆழம் பாதிப்பில் இது ஒரு பிரதான காரணியாக உள்ளது.

தூய குடிநீர் பற்றாக் குறையும் நீர் மாசடைதலும் ஒரு நாட்டின் சமூக பொருண்மிய மற்றும் பல்வேறு வகையிலான சுற்றாடல் சிக்கல்களின் தோற்றுவாயாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தூய குடிநீர் இல்லாமையினால் நீர் சார்ந்த நோய்களின் விளைவாக ஒவ்வொரு வருடமும் உலகம் முழுக்க 20 லட்சம் மக்கள் மரணிப்பதாக இலங்கை அரசாங்கத்தின் "சுற்றாடல் செய்தி" என்னும் பருவ வெளியீடு தெரிவிக்கின்றது.

இது நாளொன்றில் உலகம் முழுவதிலும் சாவடைகின்ற 6000 சிறுவர்களையும் உள்ளடக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மக்களுக்கு ஏற்படும் நோய்களில் 80% மான நோய்கள் சுத்தம் மற்றும் மாசுபட்ட நீரை அந்த மக்கள் பயன்படுத்துவதாலேயே ஏற்படுகின்றதாம்.

இந்த நாடுகளில் 8 வினாடிகளுக்கு ஒரு தடவை நீர் காரணமான நோய்களின் விளைவாக ஒரு குழந்தை வீதம் அழிகின்றது எனவும் தெரிவிக்கப்படுகன்றது.

இதனாலேயே உலக சுற்றாடல் வேலைத்திட்டத்தினால் சென்ற ஆண்டு உலக சுற்றாடல் தினத்தின் கருப்பொருளாக "தண்ணீருக்காக தவிக்கும் இரண்டு பில்லியன் (BILLION) மக்கள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இவை எங்கள் முன் உள்ள சவால்கள் நாங்கள் எங்கள் பகுதி நீர் மாசடையாமல் தவிர்க்கமுனைவோமாக.

## ஆரோக்கியமான வாழ்வுக்கு வீட்டுத்தோட்டம்

எமது வன்னிப் பெருநிலப் பரப்பிலே நீர்,நிலம், வளமாக்கிகள் என்றெல்லாம் இயற்கையாகவே கிடைக்கின்றன. ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வாழுகின்ற குடும்பங்கள் அனைத்தும் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடலாம் உத்தியோகம் பார்ப்பவர்களாக இருந்தாலும் சரி, கூலி வேலை செய்பவர்களாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு குடும்பத் தலைவியும். பொழுது போக்காக வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடலாம்.

எமது அன்றாடம் உணவுத் தேவைக்காகஎமது தோட்டத்திலேயே புத்தம் புதிய காய்கறிகளை உடனுக்குடன் பிடுங்கி சமைத்துக் கொள்ளலாம் வீணாக நேரத்தை செலவழித்து சந்தைக்கு சென்று மிதமிஞ்சிய இரசாயனப்பாவனையால் நஞ்சூட்டப்பட்ட காய்கறிகளை அதிகவிலை கொடுத்து வாங்கி குடும்பமே நோயாளராவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

வீட்டுத் தோட்டம் என்றால் அதிக அளவிலான காய்கறிகளை நாட்டத் தேவையில்லை. அன்றாடம் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இது அமைக்கப் பட வேண்டும். உங்கள் கிணற்றுக்கு அருகில் 1/2 பரப்பு அளவிலான துண்டம் ஒன்றை தெரிவு செய்யுங்கள். அத் துண்டத்தினை வீட்டுத் தோட்டத்திற்கென பண்படுத்தி நிலத்தை சீர் செய்து கொள்ளுங்கள்.

நிலம் பண்படுத்தப் பட்டதும் அதில் 10 கத்தரி, மிளகாய்,தக்காளி, கறிமிளகாய் என்றும் வெண்டி, அவரை, பாகல், புடோல், பயிற்றை,போஞ்சி என்றும் உங்களுக்குத் தேவையான பயிர்களை நிலத்துக்கு ஏற்றவாறு கொஞ்சம் கொஞ்சமாக நாட்டி வீட்டுத் தோட்டத்தை ஆரம்பிக்கலாம்.

உங்கள் வீடுகளில் கிடைக்கும் கழிவுப் பொருட்களைக் கொண்டே கூட்டெரு தாயரிக்கலாம் வீடுகளில் கோழிஎரு, ஆட்டெரு, மாட்டெரு, என்றெல்லாம் நிறையக் கிடைக்கிறது இப்பசளைகளை இட்டே கன்றுகள் நாட்டப்பட வேண்டும். பயிர்கள் வீரியம் நிறைந்த கன்றுகளாக வளர்ந்து பயன் தரும். உங்கள் தேவைகளையும் பூர்த்தி செய்து அயலவரின் தேவையையும் பூர்த்தி செய்யும் அல்லவா?



உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய காய்கறிகளை எடுத்து விட்டு மேலதிகமாக காய்கறிகள் இருக்குமானால் அதை விற்று சிறு வருமானம் கூடத் தேடிக் கொள்ளலாம்.அந்த வருமானத்தைக் கொண்டு மேலதிகமாக மீன், இறைச்சி, கருவாடு என்று வாங்கி உங்கள் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

இது மட்டுமல்ல கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு இவற்றிலும் ஈடுபடலாம். இவையும் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆடு,மாடு வளர்க்கும் போது திருந்திய நல்லின ஆடு,மாடுகளை வளர்த்தால் அதிக பலன் கிடைக்கும்.

அத்தோடு உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் பப்பாசி,மா,பலா, வாழை, கொய்யா,நெல்லி, ஜம்பு நாவல் போன்ற பல மரங்களையும் நாட்டிக் கொள்ளலாம் மேலும் முருங்கை, அகத்தி, தவசி முருங்கை, சண்டி போன்ற இலைக் கறிவகைகளை தரக் கூடிய மரங்களை வீட்டுத்தோட்ட வேலிகளில் நாட்டி விடலாம்.

எமது கிராமங்களில் வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிப்பதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து வீட்டுத் தோட்டச் செய்கையாளருக்கான போட்டிகளை ஏற்படுத்தி அவர்களுக்கான கௌரவிப்பும் பரிசில்களும் ஆண்டுதோறும் வழங்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இரசாயன உள்ளீடுகளைப் பயன்படுத்தாது விவசாய முறையில் இருந்து நமக்கு வேண்டிய உணவைப் பெறமுடியாது என்பது பலரது கருத்து. மேலும் கண்டுகளில், இலைகளில் தானியத்தில் ஏற்படும் முக்கிய நோய்களை கட்டுப்படுத்த இரசாயணப் பொருட்கள் கட்டாயமாகத் தேவை என விவசாய நிபுணர்கள் கூறுகின்றனர். இருந்தாலும் விவசாயிகள் நோய்யுற்ற விதைகளையும், வீரியம் குறைந்த விதைகளையும், நாட்டுவதாலும் அதிகமான நைதரசன் பாவனையை இடுவதாலும் அதிக அளவு நீர் பாச்சுவதாலும் தான் கன்றுகளை நோய்கள் பாதிக்கின்றன. இவற்றைக் குறைத்து விவசாய தொழில் நுட்பத்திறனுடன் பயிர்களின் வேர்கள் நிலத்தில் நன்றாக ஊன்றுவதற்கு ஏற்றவாறு விவசாயிகள் நடந்து கொள்வார்களே ஆனால் மேற்கூறிய நோய்கள் தானாகவே பறந்துவிடும். அதேநேரத்தில் நல்ல வருமானமும் கிடைக்கும்.

கமலா சிவலிங்கம்

## அன்பால் அரவணையுங்கள்



சுயநலமாக வாழும் போக்கு எமது சமூக புலத்தில் இன்று அதிகரித்து இருக்கின்றது. இதற்கு நுகர்வு கலாச்சாரம் பெரும் பங்கு வகிக்கின்றது சமூகத் தொண்டு என்பது சில வேலையில்லா மன நோயாளர்கள் செய்யும் வேலை என்ற தவறான போக்கு எம்மிடத்தில்பரவி இருக்கி ன்றது.

நுகர்வு கலாச்சாரத்தில் புகுந்த எமக்கு அதனை எதிர் கொண்டு வாழ பணம் முக்கியமான தாக அமைகிறது-அந்த பணத்தை பெற வேலை வேலை என்று அலைந்து கடினமாக உழைக்க வேண்டும்.

மனிதன் கடின உழைப்பாளியாக இருக்கவேண்டும் அது தவறல்ல, ஆனால் தனது உடல்-உள ஆரோக்கியத்தை கவனிக்காது உழைப்பது பயனற்றது.

மனிதன் சமூகப் பிராணி, அவன் சமூக ஏற்றத்திற்காக, சமூக பணிகளில் உழைக்கவேண்டும்.

சமூகத்தில் உறவு அவசியம் இது நற்பணிகளினாலும், மற்றவர்களின் கருத்துக்களை செவிமடுப்பதினாலும் ஏற்படுகின்றது. மற்றவர்களுக்கு அன்புபணிசெய்வது இறைபணியாகும். இந்த அன்புப் பணியை எந்தவித பாகுபாடு இன்றியும் செய்யவேண்டும்.

"ஒவ்வொருவரையும் அன்போடும்,பணிவோடும் நடத்துங்கள் உங்களால் இயலுமானவரை மற்றவர்களுக்காக பணிபுரியுங்கள். அவர்களை உங்களால் முடியும் மட்டும் திருப்திப்படுத்துங்கள் மக்களின் வருத்தத்தின் போதும் தேவையின் போதும்கூடுதல் கருசனையோடு செவி மடுத்து உதவுங்கள் உங்களால் அவர்களுக்கு எதுவும் கொடுக்க முடியாமல் போனால் நல்ல பண்புகளை கடைப்பிடித்து அன்பு வார்த்தைகளால் அவர்கள் தேவைக்கு தீர்வு கொடுங்கள்" இவ்வாறு அன்புச் சகோதரர்கள் துறவறச் சபையின் ஸ்தாபகர் அருட்தந்தை ரிற்ஸ்டினின் எழுத்துக்களில் 1821 ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்டது இது இன்றும் எமது சமூகபுலத்திற்கு தேவையான ஓர் கருத்துக்களாக மட்டுமன்றி வாழ்வாக்கவேண்டியவையாகவும் காணப்படுகின்றது.



மற்றவர்களுக்கு எதைக்கொடுக்கின்றோம் என்பது முக்கியமல்லமாறாக அவர்களுடன் எப்படிப் பழகின்றோம் என்பதுதான் முக்கியம் இந்த உறவுகளை கட்டிவளர்ப்பது அன்பு கனிந்த வார்த்தைகளே ஆகும்.

நவநாகரீகம் என்ற போர்வையில் அறிவியல், நடை-உடை பாவ னையில் வளர்ந்திருந்தால் மட்டும் போதாது நல்ல சமூகத்தை சமூக உறவை வளர்க்கவும் தெரிந்திருக்கவேண்டும்.

பொருளை மையப்படுத்தி, எமது வாழ்வியலை முன்னெடுத்துச் செல்லாது சமூக மேம்பாடுகருதி பிறர்வாழ்வுக்காக எம்மை பயன்படுத்த முன்வருவோம்.

சமூகத் தாழ்வும்-ஏற்றமும அடைவதற்கு அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினராகிய எமது ஒவ்வொரு செயலும் காரணமாகும் அந்த செயல்கள் எப்படிப்பட்டது என்று நாம் எம்மை மீள் பார்வை செய்யவேண்டும்.

• ஒவ்வொரு கனப்பொழுதும் எம்மை நாம் மீள் பார்வை செய்கின்ற போது சமூகத்திற்கு நாம் எது செய்தோம் என்று உணர முடியும்.

சமூகத்தில் வாழும் ஒவ்வொரு உயிர்களிடத்திலும் அன்பாக நடக்க வேண்டும் எமது வாழ்வியலைக்கண்டு மற்றவர்கள் தாமும் அதன்படி வாழ முன்வரவேண்டும்.

மற்றவர்கள் மீதும் அக்கறை கொண்டவர்களினால் மட்டுமே, பகிர்ந்தளித்து சுயநலத்தை களைத்து வாழ முடியும் தனி மனித வாழ்வு மேம்பாடுகாண வேண்டும் அது தவறல்ல, ஆனால் மற்றவரை பாதிக்கும் மேம்பாடு தவறானது நான் பெற்றுக் கொண்டதைமற்ற வர்களுக்கும் பகிர்ந்துகொள்ளும் போது அதில் ஒரு மகிழ்வு, திருப்தி இருக்கின்றது இதை எழுத்தில் கூறி புரிந்து கொள்ளவைப்பதிலும் பார்க்க செயல் வடிவில் நீங்கள் அனுபவிப்பதே உணர்வு பூர்வமானதாக அமையும்.

மற்றவர்களுக்காக வாழ்ந்து அன்பு வார்த்தைகளினால் மற்றவரை ஆற்றுப்படுத்துங்கள் அப்போது உறவும் சமூகமும் செழிப்புறும்.

யாழ் .ராதவல்லி

## வெள்ளிநாத வாசகர்களுக்கு

**வெள்ளி நாதத்திற்கு ஆக்கங்களை அனுப்பிவரும் வாசகர்களே!**

நீங்கள் அனுப்பும் ஆக்கங்களுடன் உங்கள் பெயர் முகவரியை தெளிவாகவும், முழுமையாகவும் எழுதி அனுப்பிவையுங்கள்.

எமக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கும் வாசகர்களோடு நாம் தொடர்பு கொள்வதற்கு இலகுவாக இருக்கும்.

ஆசிரியர், வெள்ளிநாதம்.

ஒன்றைச் செய்வதற்கு வேண்டிய தேர்ச்சி, அதைச் செய்வதனால் தான் பெற முடியும். - ரால்ஃப் வால்டோ எமெர்ஸன்

# தேன்சுவை தனி சொட்டும் தென்கிழக்காசிய நாடுகள்

மேலைநாடுகளை நோக்கிப் புறப்பட்ட பல தமிழ் அகதிகள் தரித்துத் தம்மை தயார்படுத்திச் செல்ல தஞ்சம் கொடுத்த பிரதேசமாக தென்கிழக்காசிய அமைந்திருக்கிறது. 1980 ன் பிற்பகுதிகளிலும் 1990 ன் முற்பகுதிகளிலும் தமிழ் அகதிகள் வெள்ளம்மடைதிறந்து தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளினை அடைந்து அங்கிருந்து ஏதோ வழியாக மேலைநாடுகள் சென்று அகதி உரிமை கோரி இருக்கிறார்கள். பலர் வருடக்கணக்காக இருந்திருக்கிறார்கள்.

தமிழர்கள் இப்பிரதேசத்தில் அகதிகளாக அண்மையில் காலடி வைத்திருந்தாலும் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இங்கு தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதனை வரலாற்று எச்சங்கள், நிலவியல் புதைபொருள் ஆராய்ச்சிகள் என்பனவற்றின் மூலம் அறிய முடிகிறது.

தமிழனுக்கு முக்கியமான இந்தத் தென்கிழக்காசியா எனப்படும் பிரதேசம் இந்தியாவிற்குக் கிழக்கேயும் சீனாவுக்குத் தெற்கேயும் அவுஸ்திரேலியாவுக்கு வடக்கேயும் பசுபிக் சமுத்திரத்திற்கு மேற்கேயும் உள்ள பிரதேசமாகும். இங்கு பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோநேசியா, தாய்லாந்து, லாகோஸ், கம்போடிய, வியட்னாம் போன்ற நாடுகள் உள்ளன. இந்தியப் பண்டைய நூல்களில் இப்பிரதேசத்தின் பல பகுதிகளைப் பல பெயரிட்டு அழைத்திருக்கிறார்கள். "தீ பாந்தர பாரதம்" என்ற பெயரில் இன்றைய கம்போடியா, தாய்லாந்து, லாவோஸ், வியட்னாம் ஆகிய நாடுகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சுவர்ணாதீபம் எனும் பெயரில்பர்மாவையும் மலேசியாவையும் அழைத்திருக்கிறார்கள். அவர்களால் யாவதீபம் என அழைக்கப்பட்டது இன்றைய யாவா தீவாகும். தென்கிழக்காசியா என்ற பதம் மேலைத்தேசத்தவர்களால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. மேலைத்தேசத்தவர்கள் கொன்ஸ்ரான்ரிநேல்பினை அண்டிய பகுதிகளை அண்மைக் கிழக்கு (Near East) என்றனர். அதற்கு சற்றுக் கிழக்கே உள்ள சவுதி, ஈரான், ஈராக், போன்ற நாடுகள் அடங்கிய பிரதேசத்தை மத்திய கிழக்கு (Middle East) என்றனர். இந்தியாவிற்குக் கிழக்கே உள்ள பிரதேசத்தினை தூரகிழக்கு (Far East) என்றனர். அப்பிர தேசத்தின் பெரும்பகுதி இன்று தென்கிழக்காசியா எனப்படுகிறது. இப்பெயர் அங்கு வாழும் மக்களின் பண்பாட்டு ஒற்றுமையைப் பிரதிபலிப்பதாகவோ அன்றி அம்மக்கள் இனத்தின் தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்டோ வழங்கப்படவில்லை. நிலவியல் அடிப்படையில் வழங்கப்பட்ட பெயராகும். தென்கிழக்காசியாவில் தமிழர்கள் பலகாலகட்டங்களில் பலவிதமாகச் சென்று குடியேறி இருக்கிறார்கள். அவ்வாறு குடியேறியவர்களும் ஆதிகாலத்தில் அங்கு வாழ்ந்து வந்தவர்களுமான இவர்களைக்கால அடிப்படையில் விசைப்படுத்திக்கொள்ளலாம்.

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த தமிழர்கள்
2. சங்ககாலத்தில் சென்று குடியேறியவர்கள்
3. பல்லவர் காலத்தில் குடியமர்ந்தவர்கள்
4. சோழ மன்னர் படையெடுப்பு காலத்தில் குடியேறியவர்கள்
5. காலனித்துவ ஆட்சியின்போது வரவழைக்கப்பட்டவர்கள்
6. சுதந்திர அரசுகளானதும் குடியேறியவர்கள்
7. அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்கள்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தென்கிழக்காசியாவின் நிலவியல் மாறுபட்டு இருந்தது. இன்றுபோல் தீவுகளும் தீபகற்பங்களும் நிறைந்த பிரதேசமாக இருக்கவில்லை. கடல்கோள்கள், நில அசைவுகள் (Continental drift) ஏற்பட முந்திய காலங்களில் லெமுரிய கண்டத்தின் ஓர் பகுதியாக இப்பிரதேசம் அமைந்திருக்கிறது. அங்கு பரந்து செறிந்து வாழ்ந்த இனம் திராவிட இனமாக இருந்திருக்கிறது. திராவிட இனம் ஆதிமனித இனமாக மட்டும் அங்கு இருக்கவில்லை. அறிவு வளர்ச்சி முதிர்ந்த நாகரிகம் படைத்த இனமாக இருந்திருக்கிறது. அங்கு வாழ்ந்த ஆதிக்குடிமக்கள் உடற்கூறுகள், அவுஸ்திரேலியா, தமிழக ஆதிக்குடி மக்களினதை ஒத்துள்ளன் என மானிடவியல் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அவ்வினங்களில் நீக்கிட்டோ இனக் கலப்பும் இருந்திருக்கிறது என ஜே.எச். கட்டன், பி.எஸ். குகா போன்ற இனமரபியல் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆதிமனிதர்களது, மண்டையோடுகள், எலும்புக்கூடுகள் பல யாவாவில் கண்டு எடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் வாழ்ந்து வரலாறு படைத்ததன் அறிகுறிகளும் அங்கு தென்படுகின்றன. தென்கிழக்காசிய ஆதிமனிதனின் ஆய்வு தென்கிழக்காசியாவினது மட்டுமன்றி உலகின் மனித இனத்தோடும் சம்பந்தப்பட்டது. இங்கு வாழ்ந்த புதிய கற்கால மனிதர்கள் வாழ்க்கை முறை தமிழருடன் ஒத்ததாக இருக்கிறது. அவர்கள் உபயோகித்த கருவிகளில் பல ஒத்துள்ளதை புதைபொருள் ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. மட்பாண்டங்களில் கீறப்பட்டவை, எழுதப்பட்டவைகளிலும் பல ஒற்றுமை காணப்படுகின்றன. பல ஆதாரங்களைக் கொண்டு பார்க்கும்போது இங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள் தமிழராக இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

தென்கிழக்காசியாவில் பிறநாகரிகங்களின் தாக்கமும், கலப்பும் படிப்படியாக ஏற்பட்டவை. தென்கிழக்காசியாவிற்கு வடக்கே மிகப் பெருமளவில் சீன்நாகரிகம் வளர்ந்தது. அண்டிய பிரதேசங்களுக்கும் அந்நாகரிக தீபம் சுடர்விட்டு பிரகாசித்தது. அந்தப்பிரகாசத்தின் பேரொளியில் சொந்த் நாகரிக வளர்ச்சிகள் சூரியன் ஒளிமுன் நட்சத்திரங்களது ஒளி எமக்கு தெரியாதது போலாயின. மறுபுறம் மொகஞ்சதாரோ கரப்பா நாகரிகம், இந்து வெளிநாகரிகம், போன்ற இந்திய நாகரிகங்களும் அங்கு சுடர்விட்டுப் பிரகாசித்தன. இந்நாகரிகங்களின் கலப்புகளுடன் பண்பாட்டு அலைகளும் பல மோதின. சமயம், கலை, அரசியல், மொழி, படையெடுப்புகள், வாணிபம் என்பனவற்றின் தாக்கங்களும் ஏற்பட்டன. தென்கிழக்காசிய மக்களது சொந்த வாழ்க்கை முறையுடன் ஏற்பட்ட கலப்புப் புதிய சமூகங்களை ஏற்படுத்தின. அவர்களை சொந்தப் பண்பு, வாழும் பிரதேச நிலை, காலநிலையியல்புகள், புதிய பண்பாட்டின் அழுத்தம் என்பன பலவிதமாக பாதித்ததன் விளைவாக பல சமூக அமைப்புக்கொண்ட மக்களை இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. இவர்களில் தமிழர் பண்பாடு தனது தனித்துவத்தை இழந்துவிட்டது. அந்தக் கலப்பில் தமிழ் மொழி, பண்பு என்பன ஏனைய கனமான கலவைகளால் விழுங்கப்பட்டுவிட்டன. தமிழர்கள் தமிழர்களென அறிய முடியாத நிலையில் உள்ளனர். ஆனாலும் அவர்கள் அன்றாட வாழ்க்கைமுறையில் திராவிடப் பண்பு இளையோடித்தான் காணப்படுகிறது. இதனைப் பண்பாட்டு ஆய்வாளர் நன்கு கண்டு ஒப்புவமை செய்து ஆதாரபூர்வமாக விளக்கியுள்ளனர்.

தமிழன் என்ற முறையில், தமிழ் மக்கள் மேல் கொண்ட அபிமானத்தில், தமிழ் உணர்வில், தமிழ் மொழியில் கொண்ட காதலினால் மூக்கிற்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல ஓர் இணைப்பை இவ்விரு சமூகங்களுக்கிடையே காணமுயலவில்லை. பல வரலாற்று உண்மைகள் உலகில் திரிபுபடுத்தப்பட்டு உள்ளன. சில சிதைக்கப்பட்டிருக்கின்றன. பல மிகைப்படுத்தப்பட்டுள்ளன. மற்றும் சில இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வரிசையில் மெக்சிக்கோவில் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் நாகரிகத்தை ஒத்த பெரும் நாகரிகம் ஒன்று இருந்திருக்கிறது. அந்த மாயன் நாகரிகம் போதிய இடத்தை உலக வரலாற்றில் பெறவில்லை. ஆபிரிக்காவில் உள்ள சூடானில் குசிற்றிக் நுபியா பேரரசு தன் வளர்ச்சி பற்றிப் போதிய இடம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதேபோல தமிழர் ஆதி நாகரிகமும் அதன் கனமும் உலக வரலாற்றில் போதிய இடம்பெறவில்லை.

தமிழன் தொன்மை மாற்றான் வீட்டுப்பிள்ளை போல பராதீனப் படுத்தப்படுகிறது. அத்துறையில் போதிய புதை பொருட்களிலிருந்து பெறப்பட்ட வரலாற்று எச்சங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியின் வளர்ச்சி தமிழனின் வளர்ச்சியின் பிரதிபலிப்பே.



தமிழன் தொன்மை மிக்க நாகரிக வளர்ச்சிக்கு ஆதாரமான, சாதகமான ஆதாரங்கள் பல தென்கிழக்காசிய நாடுகளில் உள்ளன. அவற்றின் துணைகொண்டு எமது இனத்தின் ஆதிகால வரலாற்றை நாம் நன்கு அறிய முடியும். இப்பிரதேசத்தில் கி,மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழன் கொண்ட தொடர்பை நிரூபிக்கக் கூடிய பல வரலாற்று எச்சங்கள் உள்ளன. அவற்றை நுணுக்கமாக ஆராயும் போது செம்மை மிக்க செல்வச் செழிப்போடு தமிழன் தமிழகத்தில் வாழ்ந்திருக்கிறான். விரும்பி வரவழைக்கப்பட்ட வர்த்தகர்களாக, அரச ஆலோசகர்களாக, அறிவாளிகளாக, கப்பல் கட்டுதல் போன்ற துறைகளில் வல்லவர்களாக தமிழர் தென்கிழக் காசியாவிற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த இறுக்கமான உறவு அப்பிரதேச சமூக அரசியல் பொருளாதார வளர்ச்சிகளுக்கு ஓர் ஊன்றுகோல் போல அமைந்திருந்திருக்கிறது.

தமிழன் தொன்மை மிக்க நாகரிக வளர்ச்சிக்கு ஆதாரமான, சாதகமான ஆதாரங்கள் பல தென்கிழக்காசிய நாடுகளில் உள்ளன. அவற்றின் துணைகொண்டு எமது இனத்தின் ஆதிகால வரலாற்றை நாம் நன்கு அறியமுடியும். இப்பிரதேசத்தில் கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழன் கொண்ட தொடர்பை நிரூபிக்கக் கூடிய பல வரலாற்று எச்சங்கள் உள்ளன. அவற்றை நுணுக்கமாக ஆராயும் போது செம்மை மிக்க செல்வச் செழிப்போடு தமிழன் தமிழகத்தில் வாழ்ந்திருக்கிறான். விரும்பி வரவழைக்கப்பட்ட வர்த்தகர்களாக, அரச ஆலோசகர்களாக, அறிவாளிகளாக, கப்பல் கட்டுதல் போன்ற துறைகளில் வல்லவர்களாக தமிழர் தென்கிழக்காசியாவிற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த இறுக்கமான உறவு அப்பிரதேச சமூக அரசியல் பொருளாதார வளர்ச்சிகளுக்கு ஓர் ஊன்றுகோல் போல அமைந்திருந்திருக்கிறது.

தமிழர்கள் நெய்தல் நிலத்தில் இருந்து அங்கு சென்று கப்பல் கட்டி இருக்கிறார்கள். முல்லை நிலக் காடுகளில் மரங்களை தறித்தெடுத்து கடற்கரைகளில் கப்பல் கட்டி விற்பனை செய்திருக்கிறார்கள். தென்கிழக்காசிய நாடுகள் நீண்ட கடற்கரை கொண்ட பிரதேசம். தீவுகள், வளைகுடாக்கள், குடாநாடுகள் என்பன பெரும் சமுத்திரத்தில் இருந்து ஒதுக்கான கடல் பாதுகாப்பு மிக்க பிரதேசமாக இருப்பதனால் கப்பல் கட்டும் தொழிலுக்குச் சாதகமாக இருக்கிறது. இத்தகைய சாதக நிலை வாணிப விரிவாக்கத்திற்கு இடம் அளித்திருக்கிறது.

பல தமிழர்கள் அங்கு நிரந்தரமாகக் குடியேறினர். சில குறிச்சிகள் தமிழர் நிரம்பிய பகுதிகளாக இருந்தன. அங்கு தமிழர் ஆலயங்கள் அமைத்து வழிபட்டனர். கலை நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கினர். கல்வியறிவைப் பெருக்கினர். பல்லவர் காலங்களில் தமிழர் வருகையில் மாறுதல்கள் ஏற்பட்டன. ஆரம்பத்தில் தமிழுடன் சமயமும் இணைந்து முக்கியத்துவம் பெற்றது. இவர்களும் தமது தொடர்புகளை விரிவாக்கினர். ஆனால் கைப்பற்றி ஆட்சி செய்யுமளவிற்கு பெருமளவு வாய்ப்புகள் இருக்கவில்லை. சோழர் காலத்தில் சோழர் படைஎடுப்பு மிக முக்கியமானது. சோழர் காலம் தமிழர் வரலாற்றின் பொற்காலம். தமிழன் தலை நிமிர்ந்து நின்றகாலம். தரணியெங்கும் தமிழக் கொடிநாட்ட வேண்டும் எனத் துடித்த காலம். இக்கால கட்டத்தில் சோழ சாம்ராட்சியம் இலங்கைத்தீவு உட்பட பல தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டன. சமநிலையில் இருந்த உறவு மாறியது. பேரரசும் அதன் கீழ் உள்ள பிரதேசமும் என்ற உறவு முறை தோன்றியது. இந்தக் குறுகிய காலத்தில் படைவீரராய், அரச உறுப்பினராய், கல்விமான்களாய், சமயகுருமாராய், கட்டிடக் கலை ஊழியராய், கலைஞர்களாய் பலதரப்பட்ட தமிழர்கள் வந்து குடியேறினார்கள்.

சோழர் ஆட்சி வீழ்ச்சியுற்ற பின் நிலைமையில் மாறுதல்கள் எற்பட்டன. இஸ்லாமிய படை எடுப்புகள் தீவிரமடைந்தன. இஸ்லாமிய செல்வாக்கின் அழுத்தம் ஆதிக்கம் மலேசியா, இந்தோநேசியா போன்ற நாடுகளில் புத்தமதம் போல ஊடுருவிச் சென்றது. இஸ்லாமியர் ஆட்சியில் இருந்து போத்துக்கீஸ், டச்சு, பிரஞ்சு பிரித்தானியா போன்ற வல்லரசுகளின் அதிகாரம் தலைதூக்கி இம்மண்ணில் வேரூன்றியது. குறிப்பாக பிரித்தானியர் தன்நிறைவுப் பொருளாதாரத்தில் இருந்து தமக்கு லாபம் தரும் வர்த்தகப் பொருட்கள் உற்பத்தியில் பெரிதும் நாட்டம் காட்டினர். தேயிலை, றப்பர், கோப்பி, மிளகு ஆகிய பெரிய தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க முனைந்தனர். நிலத்து உரிமையைப் பறித்த அவர்களால் குடிமக்களை வேறு இடங்களுக்கு நகர்த்திப் பெரும் தோட்டங்களை அமைக்க முடிந்தது. அத்தோட்டங்களில் வேலை செய்ய மலிவான, பணிவான, கூலியாட்கள் தேவைப்பட்டார்கள். அத்தோடு இப் பொருட்களைப் பிரித்தானிய சாம்ராடசிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப் போக்குவரத்து விரிவாக்கமும் முக்கிய இடம்பெற்றது. தரையில் வீதிகள், ரெயில் பாதைகள் அமைப்பதற்கும் குறைந்த செலவில் உழைப்பாளிகள் தேவைப்பட்டார்கள். பிரித்தானியருக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமான வேலையாட்களில் தமிழர் முன் நின்றார்கள். இதனால் பல தமிழர்கள் வரவழைக்கப்பட்டார்கள். குடியேற்றம் புதியதோர் அலையாக அமைந்தது. சோழர் காலத்தில் ஆதிக்கக்காரராக இருந்த நிலைமாறியது. சொந்த நாட்டவரும், வரவழைக்கப்பட்டவர்களும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் அடங்கிவிடும் நிலை ஏற்பட்டது. புதிய பேரரசின் கீழ் புதிய சூழலில் புதிய தொழில் புரியும் நிலை ஆரம்பத்தில அவர்களுக்கு பெரும் கஷ்டமாக இருந்தது. தமிழர்கள் எந்த நிலையிலும் சளைத்தவர்கள் அல்ல. அவர்கள் சாவதானமாக நடந்து கொண்டதால் புதிய சூழலிலும் தம்மை ஸ்திரப்படுத்தக்கூடியதாக இருந்தது.

நன்றி:- குவியம்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆளுமையின் குறைபாட்டையே வெளிப்படுத்தும் ஒன்றாக இருக்கும்.

எப்படியானாலும் ரணில் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டுவிட்டதுடன், தங்கள் அமைச்சுக்களைக் குறைப்பது என்ற வகையில் தனக்கு விரோதமான நெடுநாள் பகையான, அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்யும் செயற்பாட்டிலும் இறங்கியிருக்கிறார் சனாதிபதி என்பதும் தெளிவான விடயமாகும்.

இது காபந்து அரசாங்கத்தின் செயற்பாடுகளை தன்வசமாக்கும் சந்திரிகாத்தனத்தின் வெளிப்பாடேயாகும்.


ஏற்கெனவே லக்ஸ்மன் கதிர்காமரைத் தொடர்பூடகத்துறை அமைச்சராக உள்வாங்கிக் கொண்டதன் மூலம், காபந்து அரசாங்கம் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்களை உள்ளடக்கியது என்ற தனித்தன்மையைச் சிதைத்துள்ள சந்திரிகா தேர்தலுக்கு முன்னர் மேலும் எத்தகைய ஊடுருவல்களை மேற்கொள்வார் என்பது ரணிலை குழப்பும், பலவீனப்படுத்தும் விடயமே ஆகும். சிலவேளைகளில் காபந்து அரசுக்குள் விமல் வீரவன்ச உள்ளடக்கப்பட்டாலும் கூட ஆச்சரியப்பட ஒன்றுமில்லை நிறைவேற்று அதிகாரப்பலம் அவரை என்னவும் செய்யவைக்கும், அவரை சுற்றியுள்ள பல அழுத்தங்களையும் அவர் சமாளிக்கவேண்டும். அநுராவின் அழுத்தம், மகிந்த ராஜபக்சவின் அழுத்தம், மூத்த சுதந்திரக்கட்சிப் பிரமுகர்களின் அழுத்தம், தற்போது கூட்டுச்சேர்ந்துள்ள ஜே.வி.பி.யினரின் அழுத்தம். எல்லாவற்றிலும் மேலாக திரைமறைவில் நின்று அழுத்தும் இந்திய அழுத்தம் என சந்திரிகா அனைவரையும் திருப்திசெய்ய வேண்டியநிலையில் தேர்தல் அரங்கைத்திறந்துள்ளார். மறுபுறம் ரணில் வைத்திருக்கும்- சந்திரிகாவின் வியூகங்களை முறியடிப்பதற்கான ஒரே ஆயுதம் - சமாதானம் மட்டுமே... சமாதானம் தொடரவேண்டுமா? இதுதான் அவர் மக்கள் முன்வைக்கவுள்ள ஒரேகேள்வியாகும். இன்றைய அமைதிச்சூழல், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவ முன்வந்துள்ள சர்வதேச சமூகத்தின் சமாதான முன்னெடுப்புக் குறித்த ஆர்வம் இவை மட்டுமே ரணிலின் பக்கபலம். இவை பேரினவாத கூட்டணியின்- சந்திரிகா தலைமையிலான பிரச்சாரத்தினை எதிர்கொண்டு சமாளிக்கப் போதுமானதா என்பதே கேள்வி. எந்தக்கேள்விக்கும் பதில்கூற வேண்டிய மக்களின் -அதாவது தென்பகுதி பெரும்பான்மை சமூகத்தவரின் - சிந்தனை எந்த நிலையில் இருக்கிறது என்பதே சிறிலங்காவின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விடயமாகும். இனவாத பிரச்சாரத்தை சமாதான பிரச்சாரம் முறியடித்து தேர்தலை வெற்றிகொள்ளுமா? இதற்கான பதில் ஏப்ரல் இரண்டாம்திகதி நள்ளிரவுக்குப்பின்தெரியவரத் தொடங்கும். அதுவரையில் புரிந்துணர்வு உடன்பாடு...

போர்நிறுத்த ஒப்பந்தம்...

சமாதான முன்னெடுப்பு...


புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு ஆகியனவற்றின் எதிர்காலம் சந்தேகத்திற்கிடமானதாகவே - அச்சமூட்டும் தன்மை கொண்டதாகவே - இருக்கும்.

போரா...?சமாதானமா? என்ற கேள்விக்கான விடையைத் தீர்மானிப்பது சிங்கள மக்களின் வாக்குகளே... சமாதானம் மீதான அவர்களின் பற்றுறுதியேயாகும்.




## படத்திற்கு மெருகூட்டுங்கள்-56

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.



### படத்திற்கு மெருகூட்டுங்கள் -56

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -55



இரா.மஞ்சுளாதேவி
பண்டாரிகுளம்,
வவுனியா.

### பரிசுக்குரிய வரிகள்

தந்தையின் உயிருக்கு உலை வைத்தார்.
குண்டு மழை போட்டு என் வீட்டை சிதைத்தவர்.
கொண்டாடுகிறாரோ சுதந்திரதினம்- பெற்றிடுவோம்
என் தலைவர் காலத்தில் உம்மிடம் இருந்து சுதந்திரம்

### பாராட்டுக்குரிய வரிகள்

*வந்தாரை வரவேற்கும் எம் சிறந்தமனை-பின்*
*கொடியோர் கூறுபோட்டு சிதைத்ததனால்*
*இருக்கின்றோர் நாதியற்று யார் வருவார்.*
*உபசரிக்கவல்ல உதவுவதற்கென்றெண்ணி.*

இ.ராஜன்,
கிளிநொச்சி.

*வளரவேண்டிய வயதில் இந்த பிஞ்சு உள்ளம்.*
*நினைத்து ஏங்குவது*
*உணவு உடையை அல்ல- தொலைந்துபோன*
*தனது ஆரம்பக் கல்வியைத்தான்*

செ.கௌதமன்,
புதுக்குடியிருப்பு.

*ஆறாதவடுவாக எம் மண்ணில் போரின் தாக்கம்*
*தீராத சுமையாக உன் கண்ணில் பெருமேக்கம்*
*வாடாதே கண்மணியே வருங்காலம் எமதாகும்.*
*வாழ் வெல்லாம் வழமாகும்.*

ம.பாவேந்தன்,
விசுவமடு.

*சமாதானத்தின் ப்யனை சிங்களம்*
*அனுபவிக்க வெந்துபோன எம் தேசத்தை கட்டியெழுப்ப*
*யார் வருவாரென காத்திருக்கும் வேரிழந்து போன*
*சமாதானத்தின் அநாதை இவள்.*

த.கோகுலன்,
புளியங்குளம்.

*மனை உடைந்தது அன்று*
*உன் மனதினை உடைத்தது இன்று*
*யார் உடைத்தது என்று -நீ*
*யாரிடம் கேட்பாய் இன்று?*

ப.கண்ணன்,
வட்டக்கச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

# ஈழநாதத்தின் குறுநாவல் போட்டி

## சிறந்த படைப்புக்கு 25,000 /= ரொக்கம் பரிசு

இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஈழநாதம் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவிக்கிறது. இலக்கியப் படைப்பாளிகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்க அது வேண்டுகிறது.

கதை எவ்விடயப்பரப்பிலும் அமையலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்பு முன்பு தவறி வந்ததோ, வேறு போட்டிக்காக அனுப்பப்பட்டதோ, முன்பு பிரசுரிக்கப்பட்டதாகவோ, பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்ட தாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தனது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த படைப்புக்கு (25,000/=) இருபத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கம் பரிசாகக் கொடுக்கப்படும்.

பிரசுரிக்கத் தகுதியானவை எழுத்தாளரின் அனுமதியுடன் வெள்ளிநாதத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி மே,15 ஆம் திகதி. தொடர்புகளுக்கு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

ஆசிரியர்
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
கிளிநொச்சி.

# வாசகர் கவனத்திற்கு

எதிர்வரும் 20-02-2004.ம் திகதி வெளிவரவேண்டிய வெள்ளிநாதம் வாரவெளியீடு வெளிவராது என்பதுடன் அதற்கு பதிலாக 19-02-2004 வியாழன் அன்று ஈழநாதம் பத்திரிகையின் 15ம்ஆண்டு சிறப்பிதழாக ஆண்டு மலர் வெளிவரும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

நன்றி

ஆசிரியர்.
வெள்ளிநாதம்.

நீதியை விட, நியாயமாய் இருப்பது [illegible] - ஹென்றி வார்ட் பீச்சர்

தமிழர் புனர்வாழ்வுக்கழக
சர்வதேச பாடசாலை

TRO International School

# மனமகிழ் சிறுவர் பூங்கா

கிளிநொச்சி மாநகரின் மையப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிறுவியுள்ள
சர்வதேசப் பாடசாலையின் ஒரு அங்கமாகவுள்ள

## மனமகிழ் சிறுவர் பூங்கா

தாயகம் வாழ் எமது சிறுவர்கள் நலன் கருதி அவர்களுக்கும் வாய்ப்பளிக்கக்காத்திருக்கின்றது.

நாளைமுதல்
திங்கள் முதல் வெள்ளி வரை
மாலை 5.00 தொடக்கம் இரவு 8.00 மணி வரையும்

சனி/ஞாயிறு நாட்களில்
காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையும் வருங்காலச் செல்வங்களான
சிறுவர்களையும், பெற்றோர்களையும் மகிழ்விக்கும் மனமகிழ் பூங்கா
சர்வதேச தரத்திற்கு எம்மையும் அழைத்துச்செல்லும்
கண்ணுக்கும் மனதிற்கும் விருந்தளிக்கும் அரிய காட்சிகள்.

**மண்ணின் மழலைகள் அனைவரும் வருக... வருக...**
**மனமகிழ் பூங்காவில் நீங்களும் பயன் பெறுக.**

சர்வதேச பாடசாலை,
யாழ்.சாலை,
கிளிநொச்சி.



(சி-8774)

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 20 ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.